பிப்ரவரி, 1957

துன்முகி - மாசி

6 அணா

மஞ்சரி

தர்மம் என்ன செய்யும்?

தன்னைக் காப்பவர்களைத் தர்மம் காக்கிறது; தன்னை சிதைப்பவர்களை அது சிதைக்கிறது.

—மகாபாரதம்

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்:
என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்:
தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கௌரி அம்மாள்
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்:
ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை-4. பிரதி ஆங்கில மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புங்கள். விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

'மஞ்சரி'யிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 10] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: பிப்ரவரி 1957 [இதழ் 2

மஞ்சரி
மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

காஷ்மீர் விவகாரத்தை மீண்டும் ஐ. நா. சபையில் கிளப்பிவிட்டுப் பாகிஸ்தான் சர்க்கார் இந்தியாவுக்குச் சங்கடம் விளைக்க முற்பட்டுவிட்டார்கள். ஆஸ்திரேலியா, கொலம்பியா, பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா, க்யூபா இந்த ஐந்து நாடுகளும் இதில் தலையிட்டு, ''இன்னும் 1951-நிலைமைதான் நீடித்திருக்கிறது. ஐ. நா. தலைமையில் பாரபட்சமற்ற வாக்கெடுப்புக்கு இந்தியா சம்மதிக்கவேண்டும்'' என்ற முறையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தன. மொத்தம் பத்து நாடுகள் இதை ஆதரிக்க, சோவியத் ருஷியா வோட்டெடுக்கும்போது கலந்துகொள்ளாமல் விலகி நின்றது; தீர்மானம் நிறைவேறிவிட்டது. நேரு இதை அறிந்து பெரிதும் வேதனை அடைந்திருக்கிறார். மேற்கத்தி வல்லரசுகளுக்கு இந்தியாவின் நடு நிலைமைக் கொள்கையில் வெறுப்பு இருப்பதும், அதற்குத் தொந்தரவு கொடுப்பதே அவைகளின் நோக்கம் என்பதும் இதிலிருந்து தெளிவாகின்றன.

* * *

சினிமாத் தொழில் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களுக்கு மத்திய சினிமாத் தணிக்கை போர்டார் இந்தியப் புராண சம்பந்தமான படங்களைப் பொறுத்தவரையில் அவை இன்னமாதிரி அமையவேண்டும் என்று சில விஷயங்களை விளக்கி ஓர் அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். சமூக சம்பந்தமான படங்களைப்போலவே புராணப் படங்களையும் இந்த முறையில் நன்றாகக் கவனித்து எடுக்கவேண்டும் என்று போர்டார் தீர்மானித்திருப்பதை யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை. 'இன்றைய சமூக நிலைக்குப் பொருந்தாத பழக்க வழக்கங்களை, இப்போது பாவம், குற்றம் என்று கருதுபவற்றை, பிரமாதமாகப் பாராட்டும்படியோ, புனிதமானவை என்று எடுத்துக் காட்டும்படியோ புராணப் படங்கள் அமையக்கூடாது' என்பது அந்தத் தீர்மானத்தின் கருத்து. ஆனால் இதை அமலுக்குக் கொண்டுவரும்போது ஆய்ந்தோய்ந்து பாராமல் அவசரப்பட்டு எதையும் முடிவு செய்துவிடக் கூடாது. அந்தமாதிரி நிலையில் முதலாளிகள் புராண அடிப்படையை விட்டுத் தம் விருப்பம்போல் மாற்றியும் குலைத்தும் படங்களை எடுக்கத் தொடங்கிவிட்டால் அப்புறம் வீண் குழப்பத்தில்தான் முடியும். இப்போதைக்குப் பொருந்தாவிட்டாலும் பொதுவாக யாரையும் புண்படுத்தாத வகையில் அமைந்திருக்கும் புராண வழக்குகளைக் கைவிடவேண்டும் என்ற அவசியம் இராதபடி இந்தப் படங்களை எடுத்தால் போதும். இந்த நோக்கத்தை மனசில் கொண்டு தணிக்கை போர்டார் தம் தீர்மானத்தை அமலுக்குக் கொண்டுவருவதே பொருத்தமானது.

'நீரையும் பாலையும் அன்னம் குடிப்பது போல' என்கிறோமே; இது உண்மையா? எப்படி?

அன்னம் பாலைப் பிரிக்குமா?

ஆ. ஹ்ருதயினி

வடமொழி இலக்கியங்களில் முக்கிய ஸ்தானம் வகிப்பவை அன்னம், குயில், வண்டு, தாமரை ஆகியவை. இவை புகாத கவிதை வெறிச்சென்றிருக்கும். இவற்றில் ஒவ்வொன்றுக்கும் கவிகள் ஏதாவது ஒரு விசேஷம் சொல்லியிருக்கிறார்கள். 'நீரும் பாலும் கலந்த கலவையிலிருந்து அன்னம் பாலைப் பிரித்துக் குடிக்கும்; குயில் தன் குஞ்சைக் காக்கைக் கூட்டில் இட்டுப் பெரியதாக ஆகும் வரையில் விட்டிருக்கும்; வண்டு மாந்தளிர்களை மிகவும் விரும்பிச் சண்பகப் பூவின் எல்லையையே வெறுக்கும்; தாமரை சூரியனைக் கண்டு மலர்ந்து, சந்திரனைக் கண்டால் வாடிவிடும்' என்றெல்லாம் சொல்லுகிறார்கள். இவற்றில் சில செய்திகளை மறுக்காமல் ஒப்புக்கொண்டு விடலாம். ஒன்றிரண்டில் அபிப்பிராய பேதம் வருகிறது.

அன்னம் பாலை நீரிலிருந்து பிரித்து எடுத்துக்கொள்ளும் என்னும் செய்தி ஏழு சமுத்திரங்களைத் தாண்டி அமெரிக்காவுக்கும் எட்டிவிட்டது. அந்த இடத்துப் பண்டிதர்களுக்கு இது ஆச்சரியத்தைக் கொடுத்தது. ஆனால் அவர்கள் கேட்ட விஷயத்தை அப்படியே ஒப்புக்கொண்டு விடுவார்களா? நம் நாட்டில் ஆயிரமாயிரம் வருஷங்களாக இந்தச் செய்தியைக் காதில் வாங்கிய நம்மவர்கள் அதைப்பற்றிய ஆராய்ச்சி ஒன்றும் நடத்தவில்லை. நடத்தியிருந்தாலும் அதன் பலனை எழுத்து மூலமாக எழுதி வைக்கவில்லை. அமெரிக்காவில் ஒரு புரொபசர் இதை ஆராய்ந்துவிடக் கங்கணம் கட்டினார். பல அன்னங்களை வளர்த்துப் பாலையும் தண்ணீரையும் அவை பிரிக்கின்றனவா என்று ஆராய்ந்தார். அவற்றுக்கு அந்த அதிசய சக்தி இல்லை என்பது புலனாயிற்று.

ஆகவே, அன்னம் தண்ணீரிலிருந்து பாலைப் பிரித்து அருந்தும் என்பது எவ்வளவு தூரம் உண்மை? இதற்கு ஆதாரமாக நம் காவியங்களில் சுலோகங்கள் இருக்கின்றன.

1. அன்னமே, நீயே பாலை நீரிலிருந்து வேருக்கும் விவேகத்தை அழித்துவிட்டால், இந்த உலகத்தில் வேறு யார் குலம், விரதம் இவற்றைக் காக்கப் போகிறார்கள்?

—பாமினி விலாஸம்.

2. அன்னம் எப்படிப் பாலை ஏற்றுக்கொண்டு அதில் கலந்திருக்கும் தண்ணீரை விட்டுவிடுமோ, அப்படியே இவன் கொல்லத் தகுந்த உன்னைக் கொன்று, காக்கத் தகுந்த மறையோனைக் காப்பான்.

—சகுந்தலை.

3. அன்னம் எப்படித் தண்ணீரில் கலந்துவிட்ட பாலை அருந்துமோ, இப்படியே அறிவாளியான மனிதன், மற்றவர்களுடைய பேச்சிலிருந்து குற்றம் உள்ளவற்றை நீக்கிவிட்டுக் குணத்தை ஏற்கிறான். இது எப்படியென்றால், பால் பாத்திரத்தில் அன்னம் தன் மூக்கை வைத்தவுடனே, அதன் மூக்கிலிருந்து கசியும் விசேஷ ரஸம் கலப்பதால், உடனே பாலும் தண்ணீரும் வேறு வேருகப் பிரிந்துவிடும். அல்லது தனித்தனியாகப் பிரிந்து தென்படும்.

—உரையாசிரியர்.

அன்னங்கள் எங்கே வசிக்கின்றன? எதைச் சாப்பிடும்? அநேக அன்னங்கள் நம் நாட்டிலேயே காணப்படுகின்றன. அவற்றுக்கு மிக மிகப் பிடித்த இடம் மானஸ ஸரோவரம். இது இமய மலையில் இருக்கிறது. இந்த ஸரோவரமும் சூழ்நிலையும் கண்கொள்ளாக் காட்சி

மூலம்: பாரதி (தெலுங்கு), சென்னை.

யாக இருக்கும் என்பது பிரசித்தம். அன்னங்கள் அதிகமாக இங்கேயே வசித்து முட்டையிடும். குளிர் காலத்தில் அவை பனிக்குப் பயந்துகொண்டு கீழே இறங்கி விடுகின்றன. ஆனால் விந்திய மலையைத் தாண்டி வருவதில்லை. இமயத்துக்கும் விந்தியத்துக்கும் இடையில் இருக்கும் தெள்ளிய நீர் நிலைகளிலும் ஆற்றங்கரைகளிலும் அவை தங்கும். சித்திரை வைகாசி மாதங்களில் அவை மறுபடியும் இமயத்துக்கே திரும்பிவிடும். குளங்களில் தாமரை ஏராளமாக மண்டிக் கிடக்கும். அது அன்னத்தின் பிரியமான உணவு. அன்னத்தின் உடல் தூய வெள்ளை நிறம். கால் விரல்களும் மூக்கும் சிவப்பு. அளவில் வாத்தைவிடச் சற்றுப் பெரியதாக இருக்கும்.

அன்னங்களுக்குப் பால் எங்கிருந்து கிடைக்கும்? அவை மானஸ ஸரோவரத்தில் பசுக்களையும் எருமைகளையும் வைத்து வளர்க்கவில்லையே! நம் நாட்டுக் குளங்களில் அவை பால் அருந்தின என்பது நினைக்க முடியாத காரியம். அன்னங்கள் முத்தைத் தின்னும் என்று சில கவிகள் எழுதியிருக்கிறார்கள். ஆனால் மானஸ ஸரோவரத்தில் முத்து விளைவதில்லை. பஞ்சாப், ராஜஸ்தான் இவற்றில் எங்கேயோ ஒவ்வொரு குளங்களில் முத்துச் சிப்பிகள் கிடைத்தனவாம். மலையிலிருந்து இறங்கிய அன்னங்கள் எல்லாம் இவற்றைத் தின்று வாழ்கின்றன என்பதும் சரியில்லை.

மானஸ ஸரோவரத்தின் தண்ணீர் மிகவும் தெளிவானது. தெளிந்த தண்ணீரையே முத்தென்று கவிகள் உருவகப் படுத்தியிருக்கலாம். தெளிந்த தண்ணீரையே அன்னம் அருந்தி வந்ததென்று நாம் தீர்மானிக்கலாம். இது பானம்.

உணவைப்பற்றிப் பார்ப்போம்: ஸ்ரீ ஹர்ஷனுடைய நைஷதத்தில், முதல் ஸர்க்கத்தில், நளன் ஓர் அன்னத்தைப் பிடிப்பதாக வருகிறது. அது நம்மைப்போலவே பேசுகிறது. அது நளனிடம், 'தண்ணீரில் விளையும் செடி கொடி, பழங்களானாலும், கிழங்குகளானாலும் நான் பசியைத் தணித்துக்கொண்டு முனிவர்களைப்போல் வாழ்க்கை நடத்துகிறேன்' என்று சொல்லுகிறது.

'ஏ ராஜஹம்ஸமே! நீ எந்தக் குளத்தின் ஆதரவில் இருந்து தாமரைத் தண்டுகளைச் சாப்பிட்டாயோ, தாகத்தைத் தணித்துக் கொண்டாயோ, தாமரைப் பூவை ருசி பார்த்தாயோ, அந்தக் குளத்துக்கு என்ன பிரதியுபகாரம் செய்யப் போகிறாய்?' என்ற பொருள் கொண்ட ஒரு சுலோகம் பாமினி விலாஸத்தில் இருக்கிறது.

இந்த ஆதாரங்களால், 'அன்னம் முத்தைத் தின்பதும் பாலைக் குடிப்பதும் இல்லை. தண்ணீரையே குடிக்கிறது. தாமரையின் வேர், கிழங்கு, தண்டுக்குள்ளே ஓடும் மெல்லிய இழை இவற்றையெல்லாம் அது உண்பதும் உண்டு' என்று தெரிகிறது. தண்ணீர் நிரம்பி வழியும் குளங்களில் வசிப்பதையே அன்னம் மிக விரும்பும். தாமரைக் கிழங்கிலிருந்து ஒரு வகைப் பால் சுரக்கும். அது தெளிவாகவும் பாலைப்போல் வெண்மையாகவும் இருக்கும். தித்திப்பாகவும் இருக்கும். இதைப் பால் என்றே சொல்லுவது வழக்கம்.

சாதாரணமாக ஆல், ஸப்போட்டா, களா, அத்தி முதலிய மரங்களிலிருந்து சுரக்கும் ரஸத்தை நாம் பால் என்றுதானே சொல்லுகிறோம்! தாமரைத் தண்டு தண்ணீருக்குள் இருக்கிறது. அதிலிருந்து பால் போன்ற திரவம் சுரக்கிறது. அன்னம் தண்டைத் தின்று தண்டிலிருந்து சுரக்கும் பாலைக் குடிக்கிறது. இந்த முறையில் அன்னம் தண்ணீரிலிருந்து பாலைப் பிரித்துக் குடிக்கிறதென்பது உண்மையே. கவிகள் இதை மனத்தில் கொண்டுதான் அன்னம் பாலை நீரிலிருந்து பிரிப்பதாக வர்ணித்திருக்கிறார்கள். நாளடைவில் மனிதர்கள் இந்தத் தாமரைப் பால் விஷயத்தை மறந்து, சாதாரணமாகப் பாலையும் தண்ணீரையும் கலந்து வைத்தால் பாலைப் பிரித்தெடுக்கும் என்று நினைப்பது வழக்கமாகிவிட்டது.

பழம்பொருள் ஆராய்ச்சியிலே புலப்படும் சில உண்மைகள் நம்மைப் பிரமிக்கச் செய்கின்றன.

பாண்டவர் மடம்!

வி. ஆர். பரமேசுவரன் பிள்ளை

மனிதனின் வளர்ச்சியைப் பல கட்டங்களிலும் தெளிவாகக் காட்டும் ஒன்று பழம் பொருள் ஆராய்ச்சி. சரித்திரத்துக்கு எட்டாத காலம் முதல் இன்று வரையில் மனிதனின் சூழ்நிலையிலும் பண்பாட்டிலும் ஏற்பட்டிருக்கும் மாறுபாடுகள் கொஞ்சமல்ல. மிகப் புராதன காலத்தில் வாழ்ந்த மனிதன் எந்த எந்தப் படிகளைத் தாண்டிப் பண்பாட்டின் சிகரத்தை அடைந்திருக்கிறான்? காட்டுமிராண்டியாக வாழ்ந்த மனிதன் எகிப்தில் சிற்பியாகவும், பாபிலோனில் சோதிடனாகவும், பாலஸ்தீனத்தில் தீர்க்கதரிசியாகவும், ஈரானில் ராஜதந்திரியாகவும், கிரீஸ் தேசத்தில் கவியாகவும், ரோமாபுரியில் வாஸ்து விஞ்ஞானியாகவும், பாரதத்தில் சித்தனாகவும், ஜப்பானில் கலைஞனாகவும், சீனாவில் சந்நியாசியாகவும் மாறியது எப்படி? இதன் உண்மையை உணரப் பழம் பொருள் ஆராய்ச்சியின் மூலமே சரித்திரத்தில் புகவேண்டியிருக்கிறது.

'ஆந்த்ரபாலஜிஸ்ட்' என்ற மனித இயல் விஞ்ஞானிகள், 'ஆண்டிக்வேரியன்' என்ற பழம் பொருள் ஆராய்ச்சியாளர் இவர்களுடைய கவனத்தை மிகவும் கவர்ந்திருப்பவை 'மெகாலித்திக் மான்யுமெண்ட்ஸ்' என்ற கற்காலச் சின்னங்கள். இவை கிரேட் பிரிட்டன், அயர்லாந்து, ஐரோப்பாவின் வடக்கு - மேற்கு - தெற்குப் பகுதிகள், வட ஆப்பிரிக்கா, ஆசியாவின் தென்பகுதி, ஜப்பான், பசிபிக் தீவுகள் இந்த இடங்களில் தென்படுகின்றன; இந்த நாடுகளின் பழங்காலத்துக் கப்பல் தொடர்பை நமக்கு அறிவிக்கின்றன. பிரான்ஸ், ஸ்காட்லண்டு இரண்டு நாடுகளிலும் கண்டெடுத்த கற்காலச் சின்னங்கள் மிக முக்கியமானவை. அறுபத்தோர் அடி நீளமும், பதினாலு அடி அகலமும், ஒன்பதடி உயரமும் உள்ளவையாகக் கல்லில் செய்த பழம் பிண அறைகள் பிரான்ஸில் தென்படுகின்றன. தென்னிந்தியாவில் தென்படும் கற்காலச் சின்னங்கள் இருக்கும் இடங்களைக் குரங்குப் பட்டடை, அதாவது, குரங்கு வேலை செய்யும் இடம் என்று கூறி வருகிறார்கள்.

நம் நாட்டு மலைச்சாரல்களிலும், சுற்றுப் பிரதேசங்களிலும் சரித்திர காலத்துக்கு முந்திய பல சின்னங்கள் தென்படுகின்றன. குடைக் கல், குல்லாய்க் கல், முனி அறை, நன்னங்காடி, வாலி வீடு, பாண்டுக் குழி இந்தப் பெயர்களால் குறிக்கும் பழைய சின்னங்கள் நமக்குக் கிடைக்கின்றன. இந்தப் பெயர்களுக்குப் பொருத்தமான சில கதைகள் உண்டு; பெயருக்கேற்ற உருவமும் இவற்றுக்கு அமைந்திருக்கின்றன. முனி அறைகள் ஒரு வேளை பௌத்த சந்நியாசிகள் வாழ்ந்த இடமாக இருக்கலாம். நான்கு புறமும் நான்கு கல் தூண்களை நிறுத்தி அவற்றின்மேல் ஒரு கல் பலகையைச் சுமத்தியிருக்கும் இந்த முனியறை, ஒரு மேஜைப் பெட்டி போல் காண்கிறது. நம்பூதிரிப் பெண்மணிகள் பிடித்துக்கொள்ளும் குடைகளின் உருவமுடையதாக இருக்கிறது குடைக் கல்.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பு திருவாங்கூரில் மலைப் பிரதேசங்களை ஸர்வே செய்தார்கள். அப்போது 'பாண்டுக் குழி' என்பதைப்பற்றி அறியச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதைப்பற்றி இதோ இப்படி எழுதிவைத்திருக்கிறார்கள்:

''இங்கே பாண்டுக்குழி என்ற பழங்காலச் சின்னங்கள் தென்படுகின்றன. பாண்டுக் குழிகளில்

காப்பிரைட்; மாத்ருபூமி (மலையாளம்; 9-1-'56), கோழிக்கோடு.

மூன்று தூண்களும் ஓர் அடுப்பும் இருக்கின்றன. இந்த மாதிரி பிண அறைகள் (ஸெப்பல்சர்ஸ்) மலை களில் மிகத் தூரமான இடங்களி லும், சிகரங்களிலும் தென்படுவது தான் ஆச்சரியமா யிருக்கிறது. ஏல மலையில் மிகவும் உயரமான இடங் களில் வரிசையாக இந்த மாதிரி பிண அறைகளைக் காணலாம். 'இவை இயற்கையானவையா? செயற்கையானவையா?' என்று தீர்மானிக்க முடியவில்லை. ஸ்தலத் தில் வாழும் ஜனங்கள் இவற்றைக் குறித்துக் கூறும் கதைகள் நம்பத் தக்கவையல்ல. செக்க நாடு என்ற இடத்தில் ஒரு பாண்டுக்குழியைத் திறந்து பார்த்தபோது, ஒரு பெரிய மண்பாத்திரமும் அதற்குள் கொஞ்சம் உமியும் இருந்தன.''

இதே சமயத்தில் மிஸ்டர் பாபிங்டன் என்பவர் மலையாள நாட்டில் சில குல்லாய்க் கற்களை யும் குடைக் கற்களையும் திறந்து பார்த்தார். ''குறிப்பிடத்தக்க எது வும் குல்லாய்க் கற்களில் இல்லை. குடைக்கற்களுக்குள் எலும்பு, குடம், ஆயுதம், இரும்புச் சாமான் கள், முத்து இவையெல்லாம் இருந் தன. இவற்றைக் கட்டியவர் பாண்டவர் என்பது சில ஜனங்க ளின் நம்பிக்கை. கடவுள் நேரி லேயே படைத்தார் என்று வேறு சில ஜனங்கள் நம்புகிறார்கள். 'பழங்காலத்தில் மனிதர்கள் பூர்ண மாக வளர்ந்த பிறகு சுருங்கிச் சுருங்கி மிகச் சிறியவர் ஆகிவிட் டார்கள். அப்போது அவர்களுக்கு உணவு முதலியவை அவசியம் இல் லாது போயின. அந்த நிலையில் அவரவருக்குப் பிரியமான பொருள் களுடன் இந்தமாதிரி சிறு வீடுகளில் அவர்கள் அடக்கமானார்கள்' என்று சிலர் கூறுவதைக் கேட்டேன்'' என்று பாபிங்டன் துரை எழுதி யிருக்கிறார்.

திருவாங்கூரில் மறையூர், முட் டக்காடு, தெங்காக்கல் முதலிய இடங்களில் தோண்டிப் பார்த்த தில் இப்படிப்பட்ட பழங்காலச் சின்னங்கள் பலவற்றைக் கண்டார் கள். இவற்றில் பலவகை உருவங் கள் உண்டு. சிலவற்றின் உள்ளே பெரிய மண் ஜாடிகள் அகப்பட் டன. பெரிய ஜாடிகளுக்குள் சிறிய ஜாடிகளும் அவற்றுக்குள் எலும்புத் துண்டுகளும் சில ஆயுதங்களும் இருந்தன.

நம் நாட்டுப் பழமையான நூல் கள் இவற்றைப்பற்றிக் கூறியிருக் கின்றன. ரிக் வேதம், தொல்காப்பி யம், புறநானூறு, பதிற்றுப்பத்து முதலிய நூல்களில் இந்தப் பொருள்களைப்பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. ஊராளி என்ற மலை ஜாதியினர், பாண்டுக்குழியைப் பஞ்சபாண்டவர் மடம் என்கிறார் கள். பழங்கால நினைவுகளுடன் பாண்டவர் பெயரைச் சேர்ப்பது நம் நாட்டில் சகஜமான காரியம்.

முட்டுக்காட்டில் யானைகள் ஏராளமாக நடமாடும். அங்கே பல 'பாண்டவர் மட'ங்கள் இருக் கின்றன. அவற்றுள் ஒன்றில் நாயக்கர் ஜாதியைச் சேர்ந்த பெண் ஒருத்தி போய் வசித்தாள். கார ணம், அவளுக்கு வயிற்று வலி தாள வில்லை. 'ஒன்று, நோய் தீரவேண் டும்; அல்லது யானைகளின் கையில் சிக்குண்டு இறக்கவேண்டும்' என்று தீர்மானித்தாள். தன்னந்தனியே அங்கே சென்று ஒரு மாதம் வாழ்ந் தாள். ஆச்சரியமாய் அவளுடைய நோய் நீங்கிவிட்டதாம். இந்தச் சம்பவம் சில ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்ததாம். அவள் எஸ்டேட்டு குமாஸ்தாக்களில் ஒருவருடைய மனைவியாம். இதை அங்கே உள்ள ஜனங்கள் கூறினார்கள்.

இறந்த பின்னும் மனிதர் வாழ்வ தாக நம் முன்னோர் விசேஷ நம் பிக்கை கொண்டிருந்தார்கள். அத னால்தான் பல நினைவுச் சின்னங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். முன் காலத்தில் தென்னாட்டில் வழக்கத் தில் இருந்த சவச்சடங்குகளைப்பற்றி மணிமேகலையில் 'சுடுவோர், இடு வோர், தொடுகுழி படுப்போர், தாழியிற் கவிப்போர்' என்று பல பிரிவுகளைக் காணலாம். இதிலிருந்து உயிர் வாழும்போது ஒருவருக்குச் சௌகரியம் செய்து கொடுப்பது போல் இறந்த பிறகும் அவருக்கு நன்மை செய்வதில் அந்தக் காலத்து மக்கள் மிகுந்த சிரத்தை காட்டி னார்கள் என்று விளங்குகிறது.

என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டும் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிருர். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்த பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.

நாச்சியப்ப கவுண்டர், வால்பாறை.

கேள்வி: இடது கைப் பெருவிரலும் ஆள்காட்டி விரலும் அடிக்கடி விறுவிறுத்துப் போகின்றன. அவற்றில் சில சமயம் சுறுக் சுறுக் கென்று குத்துகிறது.

வி: அந்த இரண்டு விரல்களுக்கு உணர்ச்சி தரும் நரம்புகளில் கோளாறு ஏற்பட்டிருக்க வேண்டும். ரத்த சோதனையின் விவரம் தெரிந்தால், நோயின் போக்கைப்பற்றியும் பரிகாரம் பற்றியும் எழுத முடியும்.

ராஜகோபால், ஆலங்குடி.

கே: உடம்பில் ஏழு எட்டு இடங்களில் கிள்ளினுலும் ஊசியால் குத்தினுலும் உணர்ச்சியற்றிருக்கிறது.

வி: இது நீடித்த சரும வியாதி. சல்ஃபோன் மருந்து இடைவிடாது சாப்பிடவேண்டும். இரண்டு வருஷமாவது சாப்பிடவேண்டும். உணர்ச்சிகள் திரும்ப வரும் என்று எதிர்பார்ப்பதில் பயன் இல்லை. ஆனல் மருந்து சாப்பிட்டால், வியாதி மேலும் வலுக்காமல் அது முரித்துவிடும். நரம்புக்கு ஒரு தடவை கேடு நேர்ந்தால் திரும்ப அது குணமாவது அபூர்வம். உங்களுக்குத் தோன்றியிருக்கும் வியாதியைப்பற்றி, சல்ஃபோன் மருந்து கண்டுபிடித்த பிறகும் பயப்படக் காரணமில்லை.

எஸ். ஏ. சாமி, சிலோன்.

கே-1: வலது மார்பு பருத்திருக்கிறது.

வி: இது முதுமை ஆரம்பிக்கும் காலத்தில் சிலருக்கு ஏற்படக்கூடியது. விரைவில் மாறிவிடும்.

கே-2: கன்னத்தில் சதை பிடிக்க என்ன செய்ய வேண்டும்?

வி: வெண்ணெய், பால், தயிர், முட்டை முதலியவற்றை அதிகமாய்ச் சாப்பிட்டால் உடம்பில் சதை வைக்கும். அப்போது கன்னக் குழிகளும் நிறையும்.

பெ. சந்தானம்:

கே: வயசு 17. உயரம் $5\frac{1}{2}$ அடி. எடை 98 பவுண்டு. உயரமும் எடையும் அதிகரிக்க என்ன செய்ய வேண்டும்?

வி: இந்த வயசுக்கு இவை போதும். இன்னும் நாலைந்து வயசுக்குள்ளாக எடை அதிகரிக்கலாம். நல்ல உணவும் தேகப்பயிற்சியும் பலன் அளிக்கும்.

எஸ். ஆர். மணி, கோயம்புத்தூர்.

கே: என் உதடுகள் உலர்ந்து போகின்றன.

வி: உள்காங்கை இதற்குக் காரணமாயிருக்கும். வைத்தியரைக் கொண்டு உடம்பை நன்ருகப் பரிசோதித்துப் பார்க்கச் சொல்ல வேண்டும்.

தருமராஜன், மதுரை.

கே: என் மனைவிக்குச் சில நாளாக அடிக்கடி வெள்ளை படுகிறது.

வி: மனைவியின் வயசு, எத்தனை குழந்தைகள், மாதவிடாயின் போக்கு எப்படி இந்த மாதிரி பல விஷயங்களை அறிந்த பிறகுதான் வெள்ளை படுவதற்குக் காரணம் கண்டுபிடிக்க முடியும். வெள்ளை நீரையும் சோதித்துப் பார்க்க வேண்டி யிருக்கும். வைத்தியரிடம் நேரில் கண்டு கேட்டுத்தான் சிகிச்சை பெறவேண்டும்.

எம். மூர்த்தி, மேலூர்.

கே: என் நண்பர் ஒருவரை என் வீட்டுக்குச் சாப்பிட அழைத்துச் சென்றேன். வீட்டுக்குப் போன பின் என் அண்ணியார் பிரசவித்ததைத் தெரிவித்தேன். சாப்பிட மறுத்துவிட்டார். மறுக்கக் காரணம் என்னவா யிருக்கும்?

வி: இந்தக் கேள்வி ஒரு புதிர் போல் இருக்கிறது. இவருடைய நண்பரின் கருத்தை என்னால் ஊகிக்க இயலாது. நண்பர் என்றால் சாதாரணக் காரணங்களுக்காக மறுத்திருக்க மாட்டார் என்று இவர் நம்பலாம். பிரசவித்த வீட்டிலுள்ளவர்களுக்குத் தீட்டு உண்டென்று சிலர் கருதுவதுண்டு. இந்தக் காரணத்தினாலேதான் நண்பர் மறுத்திருக்கவேண்டும். தீட்டு என்று எண்ணுவதற்கு நியாயம் உண்டு. பிரசவித்த வீட்டிலுள்ளவர்கள் பிறர் வீட்டிலுள்ளவர்களோடு அதிகமாய்க் கலந்து கொள்ளாமல் இருந்தால், பிரசவித்த பெண்ணுக்குத் தொத்து நோய்கள் வந்து சேராமல் இருக்கும். இது ஒரு வகைப் பாதுகாப்புத்தான்.

பரமசிவன், கோலாலம்பூர்.

கே: ஒரு மனிதன் தினசரி தேன் சாப்பிடுவது நல்லதா, கெடுதலா?

வி: தேனுக்கு எவ்வளவோ குணங்கள் இருப்பதாக நாட்டு வைத்தியத்தில் சொல்லி யிருக்கிறது. ஆனால் நவீன வைத்திய முறைப்படி அது ருசியான ஓர் உணவு என்றுதான் சொல்ல வேண்டும். சாப்பிடும்போது உணவோடு சேர்த்து அதைச் சாப்பிடுவது நலம்.

ராயப்பன், ஐயாக்குடி, பழனி.

கே: பத்து வயதுச் சிறுவன் ஒருவன் இருக்கிறான். உடலைப் பொறுத்த வரையில் நன்றாகவே தோற்றம் அளிக்கிறான். திடீரென்று ரத்தம் ரத்தமாக வாந்தி எடுத்தான். ஒரே சமயத்தில் சுமார் பட்டணம் படிக்கு அரைப்படி கூட வாந்தி எடுத்தான். நாலைந்து நாள் இப்படியே தொடர்ந்து இருந்தது. கொக்கிப் புழுவே காரணம் என்றார் ஒரு வைத்தியர்.

வி: ரத்தத்தையே வாந்தி எடுத்தானா? ரத்தம் கலந்த நீரை வாந்தி எடுத்தானா? வாந்தி எடுக்குமுன் என்ன பண்டங்கள் சாப்பிட்டான்? வயிற்றில் வலி ஏற்பட்டிருந்ததா? காய்ச்சல் இருந்ததா? வாந்திப் பொருளைச் சோதித்துப் பார்த்தார்களா? அதில் இருந்தது ரத்தந்தானா அல்லது வேறு ஏதேனும் பொருளா? இந்த விவரம் எல்லாம் தெரிய வேண்டும். சாதாரணமாய்ச் சிறு பையன்களுக்கு ரத்தவாந்தி ஏற்படுவதில்லை. மூக்கிலிருந்து ரத்தம் வருவது மிகச் சாதாரணம். ஒரு வேளை இது ஏற்பட்டு அந்த ரத்தத்தை விழுங்கித் திரும்ப வாயில் எடுத்திருக்கலாம்.

முனிசாமி, மதுரை.

கே: உங்கள் நிலையைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். பொறுமையா யிருந்தால் நாளடைவில் சரியாகும்.

பழனியப்பன், மதுரை.

வி: உங்களுக்குத் தோன்றி யிருப்பது நோயல்ல; இயற்கை நிகழ்ச்சி. திருமணம் செய்து கொள்ளலாம். தாம்பத்திய வாழ்க்கை வெற்றிகரமாய் நடைபெறுவதற்கு இது தடையாக இராது.

வி. ராஜா, சனிக்கவாடி.

(1) விரைவாதத்துக்கு ஆபரேஷன்தான் பரிகாரம்; மருந்து பயன் அளிக்காது; ஆபரேஷன்

செய்துகொண்ட அநேகருக்குக் குழந்தைப் பஞ்சம் இல்லவே இல்லை. வேறு சந்தேகங்களும் ஆதாரமற்றவை.

(2) குழந்தை நிலையில் காய்ச்சல் தோன்றி நரம்புகளைப் பாதிக்கலாம். அதனுல் கண்ணைச் சூழ்ந்த சில தசைகள் வலுவற்றுப் போகலாம். அப்போது மாறு கண் ஏற்படக்கூடும். சிலருக்கு ஆபரேஷன் குணம் தரக்கூடும்.

வி. கணேசன், மேட்டுப்பாளையம்.

கே-1: என் தலையில் பொடி போன்ற வெள்ளையான பொருள் உதிர்கிறது. ஸ்நானம் செய்து முடியை உலரவிட்டு உதறினுல் உதிர்கிறது. அரிப்பு இருக்கிறது. நகம் கொண்டு சுரண்டினுலும் அந்தப் பொருள் வருகிறது.

வி: நீங்கள் குறிப்பிடும் தைலம் இந்த நோயைக் குணப்படுத்தாது. கூந்தலை நன்ருக உலர்த்தி வைக்க வேண்டும். தேங்காய் எண்ணெய் தேய்த்துக்கொண்டால் ஒரு வேளை இந்தப் பொடுகு கொட்டுவது நீங்கலாம்.

கே-2: இரவில் சிறுநீர் படுக்கையில் கழியும் பழக்கம் பத்து வயசுப் பெண்ணுக்கு இருக்கிறது. நீங்க என்ன செய்வது?

வி: தினமும் தூங்குவதற்கு முன்பு மூத்திரம் பெய்யப் பழக்கி விடவேண்டும். பாதி ராத்திரிகூட ஒருதரம் எழுப்பிச் சிறுநீர் கழிக்கச் செய்துவிட வேண்டியிருக்கலாம்.

பெ. சந்தானம், அரக்கோணம்.

உங்களுக்கு இருப்பதுபோல் இருந்தால் சில விஷயங்களில் நல்லது. இதை மாற்றிக்கொள்ள முடியாது.

பாலசுப்பிரமணியம், கோவை.

கே: நம் உடலில் கார்போஹைட்ரேட், கொழுப்பு, புரொட்டீன், வைட்டமின்கள், கால்சியம், அயம், ஃபாஸ்பரஸ் போன்ற உப்புக்களில் ஒன்ருே பலவோ மிகுதியாயிருந்தால் கெடுதல் உண்டா? இவை எந்த எந்த அளவில் நம் உடம்பில் இருக்க வேண்டும்?

வி: இந்தப் பொருள்களை உணவில் நாம் அதிகம் எடுத்துக் கொள்ளலாம். ஆனுல் உடம்பில் தங்கியிருப்பது ஒரே விகிதமாகத்தான் இருக்கும். வேண்டியதை மட்டுமே தேகம் ஏற்றுக்கொண்டு மிகுதியைக் கழித்துவிடும். என்ருலும் இதற்கு விலக்கு உண்டு. 'கார்போ-ஹைட்ரேட்' என்ற சர்க்கரைப் பொருளை உடம்பு அதிகம் ஏற்றுக்கொண்டு சேமித்து வைத்துக்கொள்ளும். கொழுப்பையும் இதுபோலவே சேமித்து வைத்துக் கொள்ளும். இப்படிச் சேமித்து வைப்பது நோய்க்குக் காரணமாகக் கூடும்.

இந்தப் பொருள்களைத் தினசரி உணவில் தக்க அளவு அமைத்து ஆரோக்கியத்தைக் காக்கலாம். இந்த அளவைப் பொதுவாகத்தான் குறிப்பிட முடியும். ஒவ்வொரு மனிதன் விஷயத்திலும் சிறிது வித்தியாசம் தேவைப்படலாம். இதையெல்லாம் இங்கே விரித்தெழுத இயலாது.

ராம், மதுரை.

காதில் இரைச்சல் ஏற்பட்டால், காது கேட்பது மந்தமாகும். இதைக் கவனியாமல் விட்டுவிட்டால், முழுவதும் செவிடாகிவிடக் கூடும். காது வைத்திய நிபுணரைக் கண்டு பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும்.

ஆ. சி. சுப்பிரமணியன், இலங்கை.

கே: தேங்காய் எண்ணெய் தலையில் தடவிக்கொள்வதால் உஷ்ணப் பிரதேசங்களில் உள்ளவர்களுக்குக் கண் நோய்கள் ஏற்படும் என்று ஒரு நம்பிக்கை இங்கே இருந்து வருகிறது. இது சரியா?

வி: மலையாள தேசம் முழுவதும் தேங்காயெண்ணெய்தான் தடவிக் கொள்கிருர்கள். அங்கே இதனுல் கண் நோய் அதிகமாவதாகத் தெரியவில்லை. தலை மயிருக்குத் தேங்காய் எண்ணெய் நல்லது. உடம்புக்கு நல்லெண்ணெய் தேய்த்துக்கொள்ளலாம்.

ரண சிகிச்சையில் பேராச்சரியமான இந்த நூதன முறைகள் தோன்றிப் பல உயிர்களைக் காப்பாற்றி யிருக்கின்றன.

புதுப்பித்த இருதயம்

ஸ்டீவன் எம். ஸ்பென்ஸர்

நூற்றாண்டுக் கணக்காக வைத்தியர்கள் மனித இருதயத்தில் கத்தியையும் ஊசியையும் பிரயோகித்துச் சிகிச்சை செய்யத் தயங்கியே வந்திருக்கிறார்கள். மெதுவாகத் தொட்டால்கூட எங்கே அது ஒருவேளை தன் உயிர்த் துடிப்பை நிறுத்திவிடுமோ என்று அவர்களுக்குப் பயம். நல்ல திறமைசாலியான ஜெர்மானிய ரணசிகிச்சை நிபுணர் தியோடர் பில்ராத் போன்றவர்களே 'இருதயத்தில் பட்ட காயங்களுக்குத் தையல் போட வரும் வைத்தியனின் பெயர் கெட்டே போகும்' என்று பயமுறுத்திக்கொண் டிருந்தார்கள். அப்படி மீறி வருபவர்களுக்கும், கத்திக்குத்து வாங்கிய இருதயத்துக்குத் தையல் போடுவதைத் தவிர அப்பால் போகத் தைரியம் இல்லை. 1896-இல் இங்கிலீஷ் மருத்துவர் ஸ்டீஃபன் பேஜட் சொன்னார்: ''இருதய ரண சிகிச்சைக்கு இயற்கை வகுத்த முறை இவ்வளவுதான். இனி எந்தப் புது முறையும் இருதயத்தில் பட்ட காயத்தினால் எழும் சிக்கல்களைத் தீர்க்க முடியாது.''

நல்ல வேளையாக அவர் சொன்னது இன்று தவறாகிவிட்டது. ஆனாலும் இந்த மாதிரி மனப்பான்மைதான் கிட்டத்தட்ட ஐம்பது வருஷங்களுக்கு இந்தத் துறையில் முன்னேற்றம் காணவொட்டாமல் அடித்தது என்பது இன்றைய இருதய ரண சிகிச்சை நிபுணரும், பாஸ்டன் வாசியுமான ட்வைட் ஈ. ஹார்க்கனுடைய அபிப்பிராயம். 1940 வாக்கில்தான் இந்த அவநம்பிக்கையெல்லாம் ஒருவிதமாக ஒழிந்தது. எத்தனையோ சிப்பாய்களின் நெஞ்சில் புதைந்துபோன துப்பாக்கிக் குண்டுகளையும் துணுக்குகளையும் ஹார்க்கனே ஒரு சேதாரங்கூட இல்லாமல் வெளியே எடுத்துக் காண்பித்தார்.

இதுபோல அந்நியப் பொருள்களை இருதயத்திலிருந்து அகற்றும் முயற்சியில் வெற்றியும், இருதயத்துக்குப் பக்கத்திலுள்ள பெரிய 'ஆர்ட்டெரி', 'வேன்' என்ற இரு வகை ரத்தக் குழாய்கள்மீதும் வேலை செய்வதில் ஏற்பட்ட பயிற்சியும், நிபுணர்களுக்கு இருதயத்தில் இன்னும் சிக்கலான ரண சிகிச்சை செய்ய ஆர்வத்தைத் தூண்டிவிட்டன. ''அப்படி ஒன்றும் பிரமாதமாக, தொடக்கூடாதபடி இல்லை இருதயம் என்பதை நாங்கள் கண்டுபிடித்தோம். அதற்குள்ளேகூட நாம் சிகிச்சை செய்து விடலாம். கவனக்குறைவு மட்டும் கூடாது; அவ்வளவுதான். உதாரணமாக, இருதயம் இருக்கும் இடத்திலிருந்து அதைத் திருப்பவோ, இடம் மாற்றி வைக்கவோ கூடாது. ஏனென்றால், இப்படிச் செய்வது, பெரிய ரத்தக் குழாய்களை முறுக்கிவிடும்; ரத்தம் ஒழுங்காகப் பாய்வதைத் தடுத்து இருதயத் துடிப்புக்கு ஊறு செய்யும்'' என்று ஹார்க்கன் குறிப்பிடுகிறார்.

இதுபோலப் பல விதிகளைத் தொகுத்து, கூர்மையான கவனத்துடனும் தைரியமாகவும் வேலை செய்யும் இந்த நிபுணர்கள், நவீன வைத்தியக் கலைக்கே ஒரு புதிய சகாப்தம் துவக்கி வைத்திருக்கிறார்கள். இன்று இவர்களுடைய கத்திப் பிரயோகத்துக்கும் ஊசித்

காப்பிரைட்: ஸாட்டர்டே ஈவினிங் போஸ்ட் (ஆங்கிலம்: 7-4-'56); ஐக்கிய அமெரிக்காவில் தி கர்ட்டிஸ் பப்ளிஷிங் கம்பெனியார் பிரசுரிக்கும் மிகப் பிரபலமான வாரப் பத்திரிகை. அநுமதி பெற்று இந்தக் கட்டுரையை இங்கே வெளியிடுகிறோம்.

தையலுக்கும் கட்டுப்படாத எந்த இருதயக் கோளாறும் - பிறவி நோயோ தொற்றி வந்ததோ எதுவும் - இல்லை. தீரா நோய், அகால மரணம் இவற்றின் பிடியிலிருந்து தப்பிய எத்தனையோ மக்கள் இன்று செப்பனிட்ட இருதயத்தோடு வேலையும் விளையாட்டுமாக வளைய வருகிறார்கள்.

இருதயத்துக்கு வலது புறமோ இடது புறமோ, இயற்கைக்கு மாறான துவாரங்கள் (ஸெப்டல் டிஃபெக்ட்) உள்ள சிலர், தையல் போட்டுக்கொண் டிருக்கிறார்கள். இன்னும் சிலரின் இறுகிப்போன இருதய வால்வுகளைத் தளர்த்தி யிருக்கிறார்கள். கசியும் வால்வுகள் உள்ள சிலருக்கு அவை இறுக மூடிக்கொள்ளும்படி பிளாஸ்டிக் அல்லது ரப்பர்போல் மிருதுவான எலும்பு இவற்றால் செய்த 'பாஃபில்' என்ற உறைகளைப் போட்டிருக்கிறார்கள். சிலருடைய வால்வுகள் தொங்கிக்கொண் டிருக்கும். அவற்றை இழுத்துப் பிடித்து வைக்க, நைலான் பாரச்சூட் துணியிலிருந்து தயாரித்த நூல் அல்லது எண்பத்திரண்டு பவுண்டு நிறை தாங்க வல்ல தூண்டில் நரம்பு உதவுகிறது. அநேகருக்கு இருதயத்திலிருந்து 'அயோர்ட்டா' என்ற ரத்தக்குழாய் புறப்படும் இடத்தில் கடிகாரம்போல 'டிக்-டிக்' என்று ஒலிக்கும் பிளாஸ்டிக் வால்வு உருண்டையை வைத்திருக்கிறார்கள்.

இருதயத்தின் இடது பக்கத்து 'ஆரிக்கிள்', 'வென்ட்ரிக்கிள்' என்ற இரண்டு பைகளுக்கும் நடுவே 'மைட்டர்' என்ற ஒரு வால்வு உண்டு. இதன் வழியாகத்தான் ரத்தம் பாய்ந்து இடது வென்ட்ரிகிளிலிருந்து அயோர்ட்டா வழியாக உடலுக்குப் பரவுகிறது. இதன் இதழ்கள் குவிந்திருக்கும்போது பாதிரிமார்களின் 'மைட்டர்' என்ற தொப்பி போல இருப்பதால் இதற்கு இந்தப் பெயர் வைத்தார்கள். பக்கவாத ஜுரம் வரும்போது இது கருகிச் சுருங்கிப் போவதுண்டு. 'மைட்ரல் ஸ்டெனோசிஸ்' என்ற இந்தச் சுருங்கல்தான் இப்போது பெரும் பான்மையாக ரண சிகிச்சைக்கு வரும் இருதயக் கோளாறு. கத்தியுடனே கத்தி இல்லாமலோ ஆள்காட்டி விரலை இருதயத்தில் நுழைத்து வால்வுத் துளையை அகல மாக்குவார்கள். இந்த 'ஒற்றை விரல் வைத்தியம்' எத்தனையோ பேரைக் காப்பாற்றியிருக்கிறது. இதற்கான ரண சிகிச்சையைக் கடந்த எட்டு ஆண்டுகளாகச் சீர் திருத்தி வந்திருக்கிறார்கள். இன்று இருதயத்துக்குள்ளே ரண சிகிச்சைக்கு அஸ்திவாரமாய் நிற்பது இதுவே.

உலகத்தில் பல நகரங்களில், தேர்ந்த வைத்தியர்கள் இந்த முறையைக் கையாளுகிறார்கள். இதன் வளர்ச்சிக்கு எல்லாரும் ஒத்துழைத்திருந்தாலும், இப்போதுள்ள அபாயமற்ற, உபயோகமான, உயர்ந்த நிலைக்கு இது வரக் காரணமானவர்கள் மூன்று பேர். அவர்களில் ஒருவரான தென் கரோலினா வைத்தியக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் ஹொரேஸ் ஜி. ஸ்மிதி (ஜூனியர்) என்பவர் 'மைட்ரல் வால்வு ஆபரேஷன்' ஒன்றை வெற்றிகரமாக முடித்த ஒன்பது மாதத்துக்கெல்லாம், 1948 நவம்பரில் இறந்து போனார். சாவுக்குக் காரணம் என்ன தெரியுமோ? அதே 'மைட்ரல் ஸ்டெனோசிஸ்' என்ற நோய்தான்! ஃபிலடெல்ஃபியா ஹானிமான் வைத்தியக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் சார்லஸ் பி. பெய்லி, பாஸ்டன் நகரத்து பீட்டர் பென்ட் ப்ர்காம் ஆஸ்பத்திரியிலுள்ளவரும் ஹார்வர்டு சர்வகலாசாலையில் ரண சிகிச்சை உதவிப் பேராசிரியருமான ஹார்க்கன் இவர்கள்தான் மற்ற இருவர்.

பன்னிரண்டு வயசுச் சிறுவனா யிருந்தபோதே டாக்டர் பெய்லியின் மனத்தில், 'மைட்ரல் ஸ்டெனோசிஸி'னால் இறந்துபோன தம் தந்தை பட்ட கஷ்டம் நன்றாகப் பதிந்தது. அவர் வைத்தியத் தொழிலில் இறங்கும்போதே இதற்கு ஒரு வழி கண்டுபிடித்தே தீருவது என்று உறுதி பூண்டார். ஹார்க்கன், பெய்லி இருவருக்கும் சம வயதுதான். இருவருடைய ஆராய்ச்சியுங்கூடக் கிட்டத்தட்ட

ஒரே சமயத்தில்தான் பயன் அளித்தது. பெய்லி, 1948 ஜூன் 10-ஆம் தேதி ஹானிமான் ஆஸ்பத்திரியில் முதல் முறையாக வெற்றிகரமாக மைட்ரல் வால்வ் ஆபரேஷனை முடித்தார். பாஸ்டன் நகர ஆஸ்பத்திரியில் ஹார்க்கன் அதே ரண சிகிச்சையை, அதே ஜூன் 16-ஆம் தேதி செய்து வெற்றி கண்டார். சிகிச்சை பெற்ற நோயாளிகள் இன்னும் உயிரோடு இருக்கிறார்கள். பெய்லியின் துணைவரான டாக்டர் ராபர்ட் பி. க்ளோவர், டாக்டர் தாமஸ் ஜே. ஈ. ஓ'நெய்ல் இவர்களும் இந்தக் கலையை எவ்வளவோ வளர்த்திருக்கிறார்கள்.

பெய்லியும் அவர் துணைவர்களும், லண்டன் வைத்தியர் எச். எஸ். ஸௌட்டார் என்பவரின் முறையைச் சிறிது மாற்றி, ஆள் காட்டி விரலையும் ஒரு மெல்லிய கத்தியையும் இருதயத்துள் நுழைத்துச் சிகிச்சை செய்தார்கள். பெய்லி தமது முறைக்குக் 'காம்மிஸரோட்டமி' என்று பெயர் சூட்டினார். தமக்கு முன்பு இந்தத் துறையில் பிரபலமான காலஞ்சென்ற எலியட் கட்லர் என்பவரைப் பின்பற்றி, 'க்ளிப்' போன்ற ஒரு கருவியை ஹார்க்கன் உபயோகித்தார். இந்த முறை 'வால்வுலோ பிளாஸ்டிக்ஸ்' என்று பெயர் பெற்றது. ஆனாலும் பின் காலத்தில் ஹார்க்கன் ஒற்றை விரல் முறைக்கே வந்துவிட்டார்.

ஆரம்ப காலத்தில் நிபுணர்களுக்குக் கிடைத்த வெற்றிகள் எல்லாம் அடுத்து வந்த பல தோல்விகளுக்கு நடுவில் மறைந்துபோயின. 1948-க்கும் 1949-க்கும் இடையில் வந்த பெருவாரியான நோயாளிகள், சிகிச்சையின் போதோ, சிகிச்சை முடிந்த உடனே சில நாட்களுக்குள்ளேயோ இறந்து போனார்கள். 1955-ஆம் வருஷம் டெட்ராயிட் நகரில் ஹென்ரி ஃபோர்டு ஆஸ்பத்திரியில் நடந்த அகில உலக இருதய ரத்தக்குழாய் ரண சிகிச்சையாளர் கூட்டத்தில், லண்டனைச் சேர்ந்த ஸர் ரஸ்ஸல் ஸி. ப்ராக் என்பவர் அந்தத் துரதிருஷ்டவசமான பழைய நாட்களைப்பற்றிக் குறிப்பிட்டார். அப்

டோல்வி டோண்டோ சிகிச்சை செய்து கொள்ளுவதற்காகப் பாஸ்டன் நகருக்கு வந்ததும் பிரிட்டிஷ் கான்ஸுலேட் காரியாலயத்தைச் சேர்ந்த மிஸஸ் கிரிஸ்டைன் ஸ்காட்ஸன் வந்து சந்திக்கிறாள்.

போது அவரும் துணைவர்களும் சேர்ந்து கைஸ் ஆஸ்பத்திரியில் செய்த 'மைட்ரல் வால்வ்' ரண சிகிச்சையில் சேர்ந்தாற்போல நான்கு பெண் நோயாளிகள் மரணம் அடைந்துவிட்டார்களாம்.

''ஒரே அவநம்பிக்கை தோன்றியது. எங்கள் உற்சாகமெல்லாம் குன்றிப் போயிற்று. 'இந்த இரண்டில் ஒன்றுதான் செய்யமுடியும்: விஷயத்தையே அடியோடு விட்டுவிடுவது அல்லது கவலைப்படாமல் மேலே செல்லுவது' என்று நான் என் நண்பர்களிடம் சொன்னேன். இதை விடுவது பைத்தியக்காரத்தனம் என்று பட்டது. எனவே, நாங்கள் தொடர்ந்து சிகிச்சையை நடத்தவேண்டியதாயிற்று. வரிசையாக முப்பது சிகிச்சைகளில் வெற்றி பெற்றோம்'' என்று அவர் சொன்னார்.

''இந்தச் சிகிச்சை இப்படி முன்னேறுவதற்கு வைத்தியர்களின் சலியாத உறுதி முக்கியமான கார

ணமானாலும், இன்றைக்கோ நாளைக்கோ என்னும்படி நோயில் அடிபட்டு நலியும் நோயாளிகள் காட்டிய தைரியமும் ஆர்வமும் அதற்கு உதவியாயிருந்தன. திக்கற்று மனம் கசந்துபோன பிணியாளிகள் எல்லாத் தடையையும் மீறிக்கொண்டு வைத்தியரிடம் வந்து நிர்ப்பந்தப்படுத்தியதாலும் தான் 'மைட்ரல் வால்வ்' சிகிச்சை முன்னேற வாய்ப்புக் கிடைத்தது. வைத்தியர்கள் மட்டும் இதற்குக் காரணமில்லை'' என்று டெட்ராயிட் கூட்டத்தில் ப்ராக் சொன்னார்.

டோல்வி டோன்டோ என்ற நாசுக்கான உடல் படைத்த மேற்கிந்திய அழகி ஒருத்தியின் இருதயத்தில் இடது, வலது ஆரிக்கிள்களின் நடுவே ஒரு துவாரம் (ஸெப்டல் டிஃபெக்ட்) இருந்தது. இது 'மைட்ரல் ஸ்டெனோஸிஸ்' அல்ல என்றாலும், அவள் கதை ப்ராக் சொன்ன உண்மையை உறுதிப்படுத்துகிறது. சொந்த ஊரான ஸ்பெயின் நாட்டு டிரினிடாட் துறைமுகத்தில் அவள் வருஷக்கணக்காக இதற்கு வைத்தியம் செய்துகொண்டும் புண்ணியமில்லை. இங்கிலாந்துக்குக்கூடப் பல வருஷங்களுக்கு முன் சென்று ஏமாற்றத்தோடு திரும்பிவிட்டாள். அப்புறம் டாக்டர் ஹார்க்கனும் அவளுடைய உள்ளூர் வைத்தியரும் அவள் நோயைப்பற்றிக் கடிதம் பரிமாறிக் கொண்டார்கள். ஆமை வேகத்தில் ஊர்ந்த கடிதப் போக்குவரத்தை அந்தப் பெண்ணால் பொறுக்க முடியவில்லை. தன் இருதயம் வெகு நாள் தாங்காது என்று அவளுக்குப் பயம்.

1955-ஆம் வருஷம் ஜுலை மாதம் ஒரு நாள் தான் அதுவரை தையல் சொல்லிக் கொடுத்துச் சம்பாதித்த பணத்தை அவள் எடுத்துக் கொண்டாள். ஏழு வயசு மகனைத் தன் அம்மாவிடம் ஒப்படைத்தாள். இரண்டு வைத்தியர்களிடமும் ஒரு வார்த்தையும் சொல்லாமல் விமானத்தில் ஏறி அமெரிக்காவுக்குக் கிளம்பிவிட்டாள். கொஞ்சங் கொஞ்சமாகச் செத்துக் கொண்டிருக்கும் தனக்கு இதுதான் கடைசிச் சந்தர்ப்பம் என்பது அவள் எண்ணம். ஃப்ளோரிடாவில் இறங்கி பாஸ்டன் நகருக்குப் பஸ் பிடித்தாள். இரவு பகலாக மூன்று நாள் பிரயாணம் செய்து கடைசியில் பார்க் ஸ்கொயர் பஸ் ஸ்டாண்டில் இறங்கும்போது, டாக்டருக்கோ, ஆஸ்பத்திரிக்கோ ஃபோன் பண்ணக்கூட முடியாதபடி உடல் தள்ளாடிப் போயிற்று. பஸ் டிரைவர்தான் டாக்ஸி பிடித்து அவளைப் பீட்டர் பென்ட் பிரிகாம் ஆஸ்பத்திரியில் ஹார்க்கனிடம் கொண்டு போய்ச் சேர்த்தான். அவளுக்கு அங்கே பிராணவாயு ஊட்டி மாரடைப்புக்குச் சிகிச்சை செய்தார்கள்.

அவளுடைய இருதய நிலையைப் பரிசோதனை செய்வதிலும் ஆராய்வதிலும் பல வாரங்கள் சென்றன. கடைசியில் ஆகஸ்ட் மாத முற்பகுதியில்தான் ஹார்க்கனும் அவருடைய துணைவர்களும் டோன்டோவுக்கு ரணசிகிச்சை செய்தார்கள். முதலில் குறைந்த உஷ்ணநிலையில் அவளுக்கு மயக்க மூட்டி அவள் உடலைப் பனிக்கட்டிகள் போட்ட தொட்டியில் தோய்த்துக் குளிர வைத்தார்கள். 'ஹைப்போ தெர்மியா' என்ற இந்த முறையால் உடல் தன் ஊட்டத்துக்காக எடுத்துக்கொள்ளும் ரத்தத்தின் அளவு குறையும். இதனால் இருதயத்திலிருந்து சரியான அளவு தூரத்தில், ரத்தக்குழாய்களை ரத்தம் ஓடாதபடி இறுக்கிக் கட்டிவிட்டு, வலது ஆரிக்கிளைத் திறந்து இருதயத்துக்கு உட்புறம் இருந்த துவாரத்துக்குத் தையல் போட முடிந்தது. பின்பு அவளுடைய தேகம் சாதாரண உஷ்ணநிலைக்கு வருவதற்காக, அப்படியே வெதுவெதுப்பான நீரில் அவளை அமிழ்த்தினார்கள். கூடிய சீக்கிரம் கணிசமான முன்னேற்றம் அவள் உடல் நிலையில் தென்பட்டது. இரண்டு மாதம் கழித்து அவள் உடம்பைத் தேற்றிக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டுப் போனாள். அதற்குள்ளேயே அவள் நிறை கிடுகிடுவென்று 33 பவுண்டு அதிகமாகிவிட்டது.

டோல்வி டோன்டோவுக்கு நடந்த 'ஸெப்டல் டிஃபெக்ட்' ரண சிகிச்சையைவிட, 'மைட்ரல் ஸ்டெனோஸிஸ்' ரண சிகிச்சையில்

அபாயம் இன்னுங்கூடக் குறைவு. இருதயத்துக்குள்ளே நிகழும் ரத்தச் சலனம், இருதயத்துக்கும் அதன் வால்வுகளுக்கும் உள்ள தொடர்பு இவற்றைப்பற்றி அதிகம் தெரியத் தெரிய வைத்தியர்களுக்குக் கத்தி போடும் திறமை அதிகரிக்கிறது. கார்னெல் சர்வகலாசாலை ரண சிகிச்சைப் பேராசிரியர் ஃப்ரான்க் க்ளென் என்பவர் சமீபத்தில் நடந்த அமெரிக்க ரண வைத்தியக் கல்லூரிக் கூட்டம் ஒன்றில், ''இருதய வியாதிகளால் இறப்பவரின் தொகை 1955-ஆம் வருஷக் கணக்குப்படி 5 சதவிகிதமாகி விட்டது; ரண சிகிச்சையில் உள்ள அபாயமும் குறைந்திருக்கிறது'' என்று சொன்னார்.

டாக்டர் ஹார்க்கனின் கூற்றுப்படி, நோய் மிகவும் முற்றிப் பிழைக்க முடியாதவர்களைத் தவிர - மொத்த நோயாளிகளில் இந்தத் தொகை கால் பாகந்தான்- மற்றவர்களின் மரண விகிதம் நூற்றுக்கு ஒன்றே. சாதாரண அடிவயிற்று ஆபரேஷன்களில் ஏற்படும் மரண விகிதமும் கிட்டத்தட்ட இவ்வளவே. பார்க்கப் போனால், வீங்கி எரிச்சல் கொடுக்கிற அல்லது கல் விழுந்த பித்த நீர்ப் பையைவிடச் சுளுவாக இருதயத்துக்கு ரண சிகிச்சை செய்துவிடலாமாம்.

டாக்டர் ஹார்க்கன் தம்மிடம் வரும் 'மைட்ரல் ஸ்டெனோசிஸ்' நோயாளிகளை நான்கு விதமாகப் பிரிக்கிறார். நோயின் சின்னங்கள் வெளியே தோன்றும் அளவுக்கு முற்றாதவர் முதல் பிரிவினர். இவர்களுக்குப் பொதுவாக ரணசிகிச்சை செய்வதில்லை. நான்காவது பிரிவில் உள்ளவர் ஒரேயடியாக நோய் முற்றிப்போய் இருதய அடைப்பு (க்ரானிக் கன்ஜஸ்டிவ் ஃபெய்லியர்) ஏற்பட்டவர். பெரும்பான்மையான நோயாளிகள், ரணசிகிச்சை அளிக்கப்படும் மூன்றாம் பிரிவிலே அடங்குகிறார்கள். 'இவர்களிடம் தென்படும் நோய்ச் சின்னங்கள், பார்ப்பவர்களுக்கே படும்படி இவர்களை ஒடுக்கிக்கொண்டே வரும் அளவுக்கு முற்றியிருக்கும்' என்று ஹார்க்கன் சொல்லுகிறார். அவருடைய முதல் 500 நோயாளிகளில் 342 பேர் இந்தப் பிரிவினர்தான். இவர்களில் சிகிச்சை பெற்றவரின் மரணவிகிதம் நூற்றுக்குப் பதினான்காக இருந்து, வர வரக் குறைந்து மூன்றுக்கு இறங்கியது. இவர்களுக்கு அப்புறம் ஹார்க்கன் எத்தனையோ பேருக்கு ரணசிகிச்சை செய்துவிட்டார். கடைசியாக வந்த 400 மூன்றாம் பிரிவு நோயாளிகளில் தவறிப்போனவர் இரண்டே பேர்.

ஆனால், நான்காம் பிரிவினரான முற்றிய நோயாளிகளைப்பற்றிய புள்ளி விவரம் இப்படியில்லை. ரண சிகிச்சை அறையிலேயோ, சிகிச்சை முடிந்த சில நாட்களிலேயோ மரிக்கும் நான்காம் பிரிவு நோயாளிகளின் தொகை நூற்றுக்கு இருபத்தைந்துக்குக் குறையவில்லை என்று வருத்தத்தோடு குறிப்பிடுகிறார்கள்.

''எனவே, 'மைட்ரல் ஸ்டெனோசிஸ்' இந்த அளவுக்கு முற்றுவதற்கு முன்பே நோயாளிகளுக்கு ரண சிகிச்சை செய்வது நல்லது'' என்று பாஸ்டன் வைத்தியர்கள் கூறுகிறார்கள். ஆனாலும், நோய் மிக்கடுமையானாலொழிய, இருதய நோயாளிகளுக்கு அவசரப்பட்டு ரண சிகிச்சை செய்யக்கூடாது என்பது அவர்கள் கருத்து.



டோல்லி டோன்டோவை டாக்டர் ஹ்யூ வில்ஸன் பரிசோதனை செய்கிறார்

மிக முற்றிய நோயாளிகளில் சிகிச்சைக்குப்பின் நாலில் மூன்று பேர்தான் தேறுவர் என்றாலும், எதற்கும் ஓர் ஆசை அவர்கள் ரண சிகிச்சை செய்துகொண்டு பார்க்கலாம். ஏனென்றால், ஹார்க்கன் சொல்லுவதுபோல அவர்கள் 'தீர்ந்து போன இருதய நோயாளிகள்.' ரண சிகிச்சைக்கு வந்து கடைசி நிமிஷத்தில் பயந்து மறுத்துவிட்டுப் போன இது போன்ற பத்தொன்பது நோயாளிகளில் பதினேழு பேர் ஒரே வருஷத்துக்குள் இறந்துவிட்டார்கள்.

என்ன காரணத்தினாலோ இந்த 'மைட்ரல் ஸ்டெனோசிஸ்' நோய் ஆண்களை விடப் பெண்களையே அதிகமாய்ப் பாதிக்கிறது. இந்தச் சனியன் பிடித்த நோய் மிகவும் பரிதாபகரமான நிலைக்குக் கொண்டு போய் விடுவதுண்டு. பொதுவாகக் குழந்தைப் பருவத்தில் தாக்கும் பாரிசவாயு ஜுரமே இதற்குக் காரணம் என்கிறார்கள். இது அப்போதே வருவதில்லை. நோயாளி இருபது அல்லது முப்பது வயசுப் பெண்ணாக இருக்கும் போதுதான் வந்து தொல்லை கொடுக்கிறது. உடல் முழுவதும் ரத்தத்தைப் பாய்ச்சுகிற இருதயத்தில் பழுதுற்ற வால்வு காரணமாக வேலை தடைப்படுகிறது. நாளுக்கு நாள் அவளுக்குப் பலவீனம் அதிகரிக்கிறது. மூச்சு வாங்காமல் அவளால் மாடிப் படி ஏற முடியாது. பொழுது விடிந்ததும் விடியாததுமாகக் களைப்பு மேலிடுகிறது. கணுக்கால்கள் வீங்கிப் போகின்றன. நோய் இன்னும் தீவிரம் அடையும்போது, நுரையீரலிலிருந்து இருதயத்துக்கு வரும் ரத்தக்குழல்களில் ரத்தத்திலுள்ள திரவமோ அல்லது ரத்தமேயோ பின்னோக்கிப் பாய்ந்து, நுரையீரல்களுக்கு நடுவே காற்றுத் தங்கியிருக்கும் இடங்களில் புகுந்துகொள்கிறது. இதற்கு நுரையீரல் நெருக்கம் (பல்மனரி எடீமா) என்று பெயர். இதன் காரணமாக மூச்சுத் திணறல், மூக்கின் வழியாகக் கொர கொரப்புச் சப்தம், இருமும்போது ரத்தத் துளி விழுவது எல்லாம் வருகின்றன. எப்போது உடலுக்கு அதிக வேலைத் தொந்தரவும், மனத்தில் உணர்ச்சிக் கொந்தளிப்பும் நேருகின்றனவோ, அப்போதெல்லாம் இந்தப் பயங்கர நிகழ்ச்சிகள் உடனே தொடர்கின்றன.

ஹார்க்கன் நோயாளிகளின் உடல் நோயைக் கருவிகள் கொண்டு தீர்ப்பதோடு மட்டும் நின்று விடுவதில்லை. அவருடைய தளரா ஊக்கமும் நோயாளிகளிடம் அவர் காட்டும் அன்புமே அவர்களுடைய நோயைப் பாதி தீர்த்து விடுகின்றன. எந்த ரண சிகிச்சைக்கு முன்னாலும் நோயாளியின் குறையைப் போக்க முடியும் என்று நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக அவர் அவளை நன்றாகப் பரிசோதிப்பார். முதலில் எக்ஸ்-ரே படங்களும், மின்சார உதவியால் இருதயத்தைப்பற்றிப் பிரத்தியேக ஆராய்ச்சிக் குறிப்புகளும் (எலக்ட்ரோ கார்டியோக்ராம்) எடுக்கிறார். பின்பு, நுண்ணிய பிளாஸ்டிக் அழுத்தமானி (கதீட்டர்) ஒன்றைக் கையிலுள்ள ரத்தக் குழாய்கள் மூலமாகவோ, முதுகில் குத்திய துவார ஊசி மூலமாகவோ இருதய அறைக்குள் நுழைக்கிறார். இருதயத்தில் கெட்டுப்போன வால்வின் பக்கத்தில் ரத்த அழுத்தம் என்ன இருக்கிறது என்று இதன் மூலம் அறிந்து வால்வின் அளவை மதிப்பிட்டுக் கொள்ளலாம். ரண சிகிச்சையறைக்கு நோயாளியை அனுப்பிய வுடனே அவளைக் கவனித்துக் கொள்ள ஒன்பது பேர் - நாலு வைத்தியர்கள், மயக்க மருந்து ஊட்டும் இருவர், மூன்று நர்ஸுகள் இத்தனை பேரும் - இருக்கிறார்கள்.

ஹார்க்கன் முதலில் மார்பின் மேற்புறத்திலிருந்து இடது மார்பு வழியாகக் கீழே தோள்பட்டை எலும்பு வரையில் ஒரு கோடு போட்டுக்கொள்கிறார். பின்பு வேகமாகவும் உறுதியாகவும் தோல், கொழுப்பு, சதை இவற்றை வரிசையாக அறுக்கிறார். இதற்குள் அவருடைய துணைவர்கள், ரத்தம் கசியும் இடங்களை முடிச்சுப் போட்டோ தீய்த்தோ விடுகிறார்கள்.

நுரையீரலை ஒரு புறமாக ஒதுக்கி, 'பெரிகார்டியல் ஸாக்' என்ற இருதய உறைத் தசையைக் கீறிப் பிளந்து ஊசியால் தைத்துப் பிடித்தவுடன், இருதயம் கண்ணுக்குப் புலப்படுகிறது. செக்கச் செவேலென்று பளபளத்துக் கொண்டு அது துடிப்பதைத் தெளிவாகக் காணலாம். இருக்கும் இடத்திலிருந்து நகர்த்தாமல் மெதுவாக ஹார்க்கன் அதையும் அதன் மேலுள்ள பெரிய ரத்தக் குழாய்களையும் துழாவுகிறார்.



டோல்லி டோண்டோவின் இருதயத்துக்குள் டாக்டர் ஹார்க்கன் ரண சிகிச்சை புரிகிறார்.

இருதயத்துக்கு மேலே இடது ஆரிக்கிளுக்குப் பின்புறம், முனையில் காது போன்று மெல்லிய, மேற்புறமாக மடிந்த ஒரு மடிப்பு இருக்கிறது. இதன் வழியாகத்தான் ஆள்காட்டி விரலை உள்ளே நுழைத்து வால்வைக் கண்டுபிடித்து வைத்தியர் சிகிச்சை புரிய வேண்டும். முதலில் கீழே மடிப்பு ஆரம்பிக்கும் இடத்தில் இதற்காக இரண்டு வளைவான கிளிப்புகளைத் துணைவர்கள் போடுகிறார்கள். பிறகு அதைச்சுற்றி 'சுருக்குப் பைத் தையல்' (பர்ஸ் ஸ்ட்ரிங் ஸூச்சர்) போடுகிறார்கள், இந்தத் தையல் போட்ட தூரத்தை இஷ்டமான அளவுக்குச் சுருக்கவும் பெரிதாக்கவும் முடியும். மடிப்பின் நுனியில் விரல் நுழையும் அளவுக்குத் துளை இடுகிறார். ஆள் காட்டி விரலை டாக்டர் உள்ளே நுழைத்ததும் அதைச் சுற்றி ரத்தம் கசியாதபடி 'சுருக்குப் பைத் தையலை' இறுக்கிவிட்டு, மெதுவாகக் கிளிப்புகளின் பிடியைத் துணைவர்கள் தளர்த்துகிறார்கள். சுட்டு விரல் நுனியால் ஹார்க்கன், வால்வ் திறப்பைத் துழாவுகிறார்.

அபூர்வமாகச் சில சமயம், பாதிச் சிகிச்சையின்போது இருதயத் துடிப்பு நின்றுவிடுவதுண்டு. உடனே வைத்தியர் இருதயத்தைக் கையில் பிடித்து, விட்டு விட்டு அழுத்தி, ரத்தத்தை உடலுக்குப் பாய்ச்சுகிறார். கண்ணுக்குத் தெரியாத 'பேஸ்மேக்கர்' என்ற நடை இயக்கும் இயற்கைச் சக்தி ஏற்றுக் கொள்ளும்வரை, ஒரு மணி நேரமோ அதற்கும் மேலோ சென்றாலும் வைத்தியரே இப்படி ரத்த ஓட்டத்தை நடத்த வேண்டும். பாஸ்டன் வைத்தியர் பால் எம். ஸோல் என்பவர் கண்டுபிடித்த மின்சார நடை இயக்கும் கருவியை இதற்கு உபயோகிக்கலாம் என்றாலும், மனிதக் கைதான் இந்தச் சமயங்களில் அதைவிட உயர்ந்த கருவி.

அநேகமாகக் கைவிரலை வைத்தே சுருங்கிப் போன வால்வுத் துளையை நிபுணர் அகலமாக்க முடியும். 'ஃபிங்கர் ஃப்ராக்சர்' என்று இந்த முறையைக் குறிக்கிறார்கள். இந்த முறையைக் கைக்கொள்ளும்போது, விரலால் வால்வைப் பாதி திறந்துவிட்டுத் தம் 'ரொட்டிக் கத்தி வால்வுலோடோம்' என்ற கருவியை ஹார்க்கன் எடுத்துக்கொள்வார். இது மெல்லிய, வளையக்கூடிய, கால் அங்குல அகலமான அலகு உள்ள, அலைபோல் வளைந்த ஓரமும் தட்டையான பிடியும் கொண்ட கூர்மையான கத்தி. விரலின் மேற் புறத்தோடு சேர்த்து இதை நுழைத்து, விரலை இருதயத்திலிருந்து எடுக்காமலே, அறுக்கும் நுனி விரலுக்குப் பக்கவாட்டில் செங்குத்தாக வரும்படி திருப்பிக்

கொள்கிறார். பின்பு விரலையும் கத்தியையும் ஒன்றாகச் சுழற்றி, வால்வின் ஓரங்களைப் பெரிதாகக் கிழிக்கிறார். இது முடிந்தபின், போதுமான அளவு விரலை இருதயத்திலிருந்து அவர் எடுத்ததும், அவருடைய துணைவர்கள் மடிப்பின் கீழ்ப் புறத்தைக் கிளிப்பால் இறுக்குகிறார்கள். அவர்கள் ஏற்கனவே விரல் நுழைவதற்காகப் போட்ட துளையைச் சுற்றிச் சுருக்குப் பைத் தையலைப் போட்டு இறுக்கிக் கொண்டிருக்கும்போதே, ஹார்க்கன் மெதுவாக முழு விரலையும் வெளியே இழுத்துவிடுகிறார். கிளிப்புக்குமேலே இப்போது அதிகப் படியாகக் கிடக்கும் மடிப்பைக் கத்தரித்து எறிந்துவிட்டு, துளையை நிரந்தரமாகத் தைத்துவிடுகிறார்கள்.

பக்கவாதத்துக்குக் காரணமான இந்த ரத்த உறைவு நோயாளிக்கு ஏற்பட்டுவிடவில்லை என்று உறுதிப்படுத்திக்கொள்ளுவதற்காக, அவள் மயக்கம் தெளிந்து எழும்போது ஏதாவது பேச்சுக் கொடுத்துப் பார்க்கிறார்கள். ஒவ்வொரு கையையும் காலையும் அசைத்துக் காண்பிக்கச் சொல்லுகிறார்கள். அவளுக்குக் கொடுத்திருக்கும் மயக்க மருந்தின் வேகம், வைத்தியர்கள் தையல் போட்டு முடிந்தவுடனே அகன்றுவிடும். விழிப்புக்கும் உறக்கத்துக்கும் நடுவே உள்ள அந்தக் கணத்தில், சிகிச்சை மேஜைமேல் ஹார்க்கன் குனிந்து அவளிடம், ''இதோ பார், எல்லாம் சரியாகப் போயிற்று. உன் இருதயத்தைச் செப்பனிட்டுவிட்டோம். ஜம்மென்று தேறிவிடப் போகிறாய், பாரேன்'' என்று உற்சாகமாகச் சொல்லுகிறார். கறக்கமாய்க் கண்ணைத் திறந்து பார்த்து, ஒரு புன்னகை செய்துவிட்டுத் தூங்கிப் போகிறாள் அவள். இதுபோன்ற இருதய நோயாளிகளைக் கவனிக்கவென்றே பிரத்தியேகமாகப் பயிற்சி பெற்ற நர்ஸுகள் இதே உற்சாகம் அவளுக்கு நீடிக்கவேண்டித் துணை புரிகிறார்கள்.

மஸாச்சுஸெட்ஸ் மாகாணத்தில் வின் என்ற இடத்தைச் சேர்ந்த வால்ட்டர் அபெர்நதி என்பவரைக் கண்டு, அவர் செய்துகொண்ட இருதய ரண சிகிச்சை பற்றிக் கேட்பதற்காக நாங்கள் சென்றபோது, அவர் மஸாச்சுஸெட்ஸ் பொது மராமத்து இலாகாவில் போக்குவரத்து ஸர்வேயைக் கவனித்துக்கொண டிருந்தார். அவர் 'மைட்ரல் ஸ்டெனோசி'ஸுக்காகச் சிகிச்சை பெறவில்லை. அந்த வால்வு வழியாக அவருக்கு ரத்தக் கசிவு இருந்தது. இதுபோல் அரைகுறையாக மைட்டர் வால்வுத் துளை அடைத்துக்கொள்வதை 'மைட்ரல் இன்ஸஃபிஷியன்சி' என்பார்கள். இதில் ஒவ்வோர் இருதயத் துடிப்பிலும் ஏராளமான அளவு ரத்தம் பின்புறமாக ஆரிக்கிளுக்குள் செல்லுவதால் நோயாளிக்கு அளவு கடந்த சோர்வும் நுரையீரல் வியாதியின் அறிகுறிகளும் உண்டாகின்றன.

ரண சிகிச்சைக்கு ஒன்பது மாதங்களுக்கு முன்னால் அபெர்நதி தம் மனைவியின் கைமேல் சார்ந்துகொள்ளாமலோ, சுவர் அல்லது மேஜை நாற்காலிகள் இவற்றைப் பிடித்துக்கொள்ளாமலோ அறையில் நடக்கக்கூட முடியவில்லை. 1952-இல் டாக்டர் ஹார்க்கன் தான் அபெர்நதியின் கசியும் வால்வைச் சரி செய்தார். இரண்டு அங்குல நீளமுள்ள, மெல்லிய குடுவை போன்ற அமைப்புள்ள பிளாஸ்டிக் கட்டையை வால்வு திறக்கும் இடத்தில் அவர் செருகினார். இந்தப் 'பாட்டில் பாஃபில்' மீது விரிந்து கிடந்த மைட்டர் வால்வு இதழ்கள் சரியாகக் குவிந்து அபாயகரமான ரத்தக் கசிவைத் தடுத்தன.

ஃபிலடெல்ஃபியாவைச் சேர்ந்த டாக்டர் பெய்லி இதுபோலக் கசியும் வால்வுகளில் கட்டை வைத்து அடைக்கும் இன்னொரு முறையைக் கண்டுபிடித்தார். அவர் பிளாஸ்டிக் கட்டைக்குப் பதில் மெல்லிய வளையக்கூடிய விலா எலும்பிலிருந்தாவது, பெரிகார்டியம் என்ற மிருதுவான இருதய உறைத்தசையிலிருந்தாவது இதைத் தயாரிக்கிறார். இதை மைட்ரல் வால்வுக்கு மட்டும் அல்லாது இருதயத்தில் வலது புறம் இருக்கும்

'ட்ரைகஸ்பிட்' என்ற வால்வுக்கும், அயோர்ட்டாவிலுள்ள வால்வுக்குங்கூட அவர் உபயோகித்தார்.

கட்டை வைக்கும் இந்த முறையில், ஹார்க்கன், பெய்லி இருவருக்கும் திருப்தி இல்லை. உடலிலேயே இதைச் சீர்திருத்திவிடும் ஒரு சிகிச்சையைக் கண்டு பிடிக்க அவர்கள் முயன்றுகொண்டிருக்கிறார்கள். ஃபிலடெல்ஃபியா ப்ரெஸ்பிடீரியன் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் க்ளோவரும், ஜூலியோ ஸி. டேவிலாவும் இந்த மைட்டர் வால்வுத் துளையைச் 'சுருக்குப் பைத் தையல்' மூலமாகக் குறுக்க முடியும் என்று கண்டார்கள். இதழ்கள் சரியாகக் குவியும் வரையில் நூலை இறுக்கி விட்டுப் பின்பு தைத்துவிடலாம்.

ஹானிமான் ஆஸ்பத்திரியிலும் வைத்தியக் கல்லூரியிலும் பெய்லியோடு உழைத்த ஹென்ரி டி. நிக்கோலஸ் என்பவர் மைட்டர் வால்வுத் துளையைக் குறுக்கப் புது வழி ஒன்று கண்டு பிடித்திருக்கிறார். துளையைச் சுற்றித் தையல் போடாமல் அவர் அதன் இரண்டு எதிர்ப்புற ஓரங்களையும் சேர்த்து 82 பவுண்டு நிறை தாங்கவல்ல தூண்டில் நரம்பால் இழுத்துக் கட்டித் தைத்துவிடுகிறார்.

ஆரம்பத்திலேயே சொன்னது போல் இன்று வைத்தியர்களின் சிகிச்சைக்கு அடங்காத எந்த இருதய நோயும் கிட்டத்தட்டக் கிடையாது. சில நோய்கள் மட்டும் அவர்களுக்கு அதிகத் தொல்லை தருவதென்னவோ உண்மை.

சரியாக மூடிக்கொள்ளாத அயோர்ட்டிக் வால்வுதான் வைத்தியர்களுக்கு இன்னும் தீர்க்க முடியாத பிரச்னையாக இருக்கிறது. வாஷிங்டனைச் சேர்ந்த சார்லஸ் ஏ. ஹப்னேஜல் கண்டு பிடித்த பிளாஸ்டிக் பந்து, இதற்கு ஒரு பரிகாரமாக இருந்தாலும் அதற்குச் சில ஆட்சேபங்களை மருத்துவர்கள் சொல்லுகிறார்கள். எனவே, வேறு வழிகளில் இப்போது முயன்றுகொண்டிருக்கிறார்கள்.

இருதயத்துள்ளே நிகழ்த்தும் ரண சிகிச்சையைப்பற்றி மட்டுமே இங்கே நாம் பார்த்தோம். இருதயத்துக்கு வெளிப்புறம், கொரோனரி ஆர்ட்டரி என்ற ரத்தக் குழாய் வியாதியினால் ரத்த ஓட்டம் குறைந்துபோன இருதயத் தசைகளுக்கு அதிக ரத்தம் செலுத்த வேண்டி நடக்கும் பல சிகிச்சைகளைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. கடந்த இருபது ஆண்டுகளாகக் குறிப்பிடத்தக்க பல புது முறைகளை இந்தத் துறையில் க்ளீவ்லாந்தைச் சேர்ந்த க்ளாட் எஸ். பெக் கண்டு பிடித்திருக்கிறார். மார்புத் தசையை எடுத்து இருதயத்தில் ஒட்ட வைப்பது, கொரோனரி ரத்த ஓட்டத்தில் மார்பிலிருந்து ஒரு ரத்தக் குழாயை இணைப்பது, பொடி செய்த அஸ்பெஸ்டாஸ் அல்லது எலும்புத் தூளைப் 'பெரிகார்டியல் ஸாக்' என்ற இருதய உறைத்தசையில் தூவிக் குழாய்களில் ரத்த ஓட்டத்தைத் தூண்டுவது போன்றவை அவற்றில் சில. இன்னும் பல முன்னேற்றங்கள் இந்தத் துறையில் கூடிய சீக்கிரமே தோன்றலாம். மிகப் பெருவாரியாகக் காணும் 'கொரோனரி த்ராம்போஸிஸ்' என்ற வியாதியை அதன் முற்றிய நிலையில்கூட, ரண சிகிச்சையால் ஒழித்துக்கட்டும் நாள் வரலாம். தொட்டறியும் உணர்ச்சியை மட்டுமே நம்பிக்கொண்டு, இருதயத்துக்கு இடையே செய்யும் ரண சிகிச்சைகளில் இறங்க வேண்டியிருப்பது எப்போது அகலும் என்று வைத்தியர்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். இந்த விஷயத்தில் செயற்கை இருதய-நுரையீரல் தயாரிப்பாளர்களிடமிருந்து இவர்களுக்கு உதவி கிட்டும்போல இருக்கிறது. நோயாளியின் ரத்த ஓட்டத்தைக் கவனித்துக்கொள்ளவும், அதற்கு ஆக்ஸிஜன் ஊட்டவும் ஒரு யந்திரம் கண்டு பிடிக்கப் பெற்றால், நிபுணர் ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாக, திறந்த, ரத்த ஓட்டமற்று உலர்ந்த இருதயத்தில் தைரியமாகச் சிகிச்சை செய்யலாம். அந்த நாளும் வந்துவிட்டால், கெட்டுப் போன இருதயங்களைச் செப்பனிடுவது பெரிதும் சாத்தியமாகும்.

பீமனும் துரியோதனனும்

★

மனைவிமாருடன் பாண்டு கானகத்தில் முறை தவறாமல் தவம் செய்துவந்தான். ஒரு சமயம் சிறந்த முனிவர்களின் கூட்டம் ஒன்று பிரம்மலோகம் போய்க் கொண்டிருந்தது. பாண்டு அவர்களோடு தானும் அங்கே புறப்பட்டான். உடனே அவனைத் தடுத்து, ''புத்திரன் இல்லாதவனுக்கு நற்கதி இல்லை. அவனுக்குப் பிறக்கும்பொழுதே ஏற்பட்ட பிதுருக்களின் கடன் தீராததால் நற்கதி கிடைப்பது அரிது. அதனால் கொஞ்சநாள் உலகில் வாழ்ந்து தேவர்களை வழிபட்டுப் பிள்ளைகளை அடைந்தபிறகு நீ சுவர்க்கம் செல்லலாம்?'' என்றார்கள் அவர்கள்.

முனிவர்களின் வார்த்தையை மதித்துப் பாண்டு திரும்பிவிட்டான். விரதம் முதலியவற்றோடு தேவரை இடைவிடாமல் வழிபட்டான். அவர்களுடைய அருளினால் குந்தியிடம் தர்மபுத்திரன், பீமன், அர்ஜுனன் என்ற மூன்று புதல்வர்களையும் மாத்ரியிடம் நகுலன், சகதேவன் என்ற இரண்டு பிள்ளைகளையும் அடைந்தான். இவர்கள் ஓடையில் தாமரை வளருவதுபோல் வளர்ந்து வந்தார்கள். குழந்தைகளுடன் அரசன் மகிழ்ச்சியாகக் காலங் கழித்தான். வசுதேவர் சொல்லியனுப்பவே கச்யபர் என்பவர் காட்டில் வந்து குந்தியின் மக்களுக்குப் பெயரிடுவது முதலிய சுபச் சடங்குகளைச் செய்தார்.

ஒரு நாள் காமவசப்பட்டு மாத்ரியுடன் இன்பத்தில் ஈடுபட்ட பாண்டு கிந்த முனிவரின் சாபத்தால் உயிர் துறந்தான். மகரிஷிகளின் உபதேசத்தால் குந்தி குழந்தைகளைக் காப்பாற்றவேண்டி உயிர் வாழத் தீர்மானித்தாள். மாத்ரி கணவனுடன் பரலோகம் சென்றாள்.

குந்தியை மைந்தர்களுடன் ரிஷிகள் ஹஸ்தினாபுரத்துக்கு அழைத்து வந்து பீஷ்மர் முதலியோரிடம் ஒப்புவித்தார்கள். திருதராஷ்டிரன்

ராமாயணத்தைப்போல் பிரசித்தமானது பாரதம். பாண்டவர், கௌரவர் வரலாற்றை மட்டும் அல்ல; கீதை மொழிந்த கண்ணனின் கருணைச் செயல்களையும் இதில் காணலாம்.

பாண்டுவுக்கும் மாத்ரிக்கும் ஈமச் சடங்குகளை முறைப்படி செய்வித்தான். பீஷ்மர் முதலியோர் பாண்டுவின் பிரிவை எண்ணி உள்ளம் கலங்கி வருந்தினார்கள். பிறகு ஒருவாறு தேறினார்கள்.

பாண்டவர் பிறந்து சில நாட்களில் வியாச முனிவரின் அருளால் திருதராஷ்டிரனுக்குக் காந்தாரியிடம் நூறு புதல்வர்களும் ஒரு மகளும், பணிப் பெண்மூலம் ஒரு பிள்ளையும் பிறந்தார்கள். திருதராஷ்டிரனுடைய மூத்த பிள்ளையால் உலகத்துக்கே தீங்கு வரும், அதனால் உலக நன்மையைக் கருதி அந்த மகனை உதறித் தள்ளுவது நல்லது என்று விதுரர் முதலியவர்கள் கூறினார்கள். திருதராஷ்டிரன் மகனிடம் அன்பு கொண்டு அப்படிச் செய்யத் துணியவில்லை. திருதராஷ்டிரன் தன் புதல்வர்ளுக்குத் துரியோதனன், யுயுத்ஸு, துச்சாசனன் என்றெல்லாம் பெயர் வைத்தான். மகளுக்குத் துச்சலை என்று பெயர் சூட்டினான். அவர்களும் நன்றாக வளர்ந்துவந்தார்கள். பாண்டுவின் புதல்வர்கள் தந்தையின் அரண்மனையில் துரியோதனாதியர்களுடன் சிறந்த போகங்களை அநுபவித்துக்கொண்டு இன்பமாக வளர்ந்தார்கள்.

எந்த விளையாட்டிலும் துரியோதனாதியர்களைவிடப் பாண்டவர்தான் வெற்றி அடைந்தார்கள். வேகமாகச் செல்லும் பொருள்மேல் குறி வைத்து அடிப்பது, பொருள்களைப் பிளப்பது, புழுதியில் இழுப்பது எல்லாவற்றிலும் திருதராஷ்டிரனின் மக்களைப் பீமசேனன் வென்றுவிடுவான். அவனுடைய உடல்வலிமை அத்தகையது. அவன் பிறந்த பதினோராம் நாள் தாயின் மடியிலிருந்து உருண்டு கீழே விழுந்தபொழுது அடியில் இருந்த கல்தான் துண்டு துண்டாகச் சிதறியது. அவனுக்குச் சற்றும் காயம் ஏற்படவில்லை. துரியோதனாதியர் விளையாடும் பொழுது பீமன் அவர்கள் தலை



மயிரைப் பிடித்து முட்ட வைப்பான். கழுத்தில் பிடித்து அழுத்திக்கொண்டு தரையில் அவர்களை இழுப்பான். அவர்கள் முழங்கால், தலை, கண்கள் இவை தரையில் உராய்வதால் கதறுவார்கள். பிறகு தான் பீமன் அவர்களை விடுவான். பத்துப் பேர்களை ஒரே சமயத்தில் கைகளால் பிடித்து நீரில் அழுத்துவான். அவர்கள் துடிக்கும் பொழுது வெளியே எடுப்பான். துரியோதனாதியர் மரத்தில் ஏறிப் பழங்களைப் பறிக்கும்பொழுது காலால் மரத்தை உதைத்து உலுக்கி அவர்களைப் பயப்படச் செய்வான். கீழே தள்ளுவான். அவர்களுக்குப் பீமனிடம் கோபம் வந்தாலும் பதிலுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை. இவ்வாறு குழந்தைத்தனத்தால் பீமன் திருதராஷ்டிரனின் மக்களுக்கு இடையூறே செய்துவந்தான். ஆனால் அவர்களிடம் அவனுக்குச் சிறிதும் துவேஷம் இல்லை.

துரியோதனன் எப்பொழுதும் பீமனிடம் கெட்ட எண்ணத்தையே காட்டிவந்தான். பீமனைக் கொன்றுவிட்டால் தர்மனையும் அர்ஜுனனையும் அடக்கித் தானே அரசனாகி விடலாம் என்று பல முறை எண்ணினான். அறிவின்மையினாலும் ஐசுவரிய மதத்தாலும் அவனுக்கு இத்தகைய எண்ணம் ஏற்பட்டது. பீமனுக்குத் தீங்கு இழைக்கச் சமயத்தை எதிர்பார்த்திருந்தான்.

ஒரு நாள் துரியோதனன் பிரமாணகோடி என்னும் இடத்தில் ஜலக்கிரீடைக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்து அனைவரையும் அங்கே அழைத்துச் சென்றான். எல்லாரும் நீரில் விளையாடிக் களைப்புற்றுக் கூடாரங்களிலே இளைப்பாறினார்கள். பீமன் அதிகமாக நீரில் விளையாடியதாலும், தன் தோழர்களில் பலரை வெள்ளத்தின் நடுவே எடுத்துச் சென்று விளையாடி மீண்டும் கரைக்கு அழைத்து வந்ததாலும் மிகவும் களைப்புற்று ஆற்றின் கரையிலேயே படுத்து உறங்கிவிட்டான். களைப்பு மிகுதியால் இறந்தவன்போல் செயலற்று உறங்கும் அவனைத் துரியோதனன் கொடிகளைக் கொண்டு கட்டிக் கங்கையில் உருட்டிவிட்டான். பீமன் விழித்துக்கொண்டு கட்டுக்களை அறுத்து நீரிலிருந்து கரையேறினான். ஆனால் இதைத் துரியோதனன் செயல் என்று உணரவில்லை. மீண்டும் அங்கேயே படுத்து உறங்கி விட்டான்.

காலையில் கௌரவர்களும் பாண்டவர்களும் விழித்துக்கொண்டார்கள். பீமன் கங்கைக் கரையில் உறங்குவதைக் கண்டு துரியோதனன் வருத்தமுற்றான். மீண்டும் உறங்கிக் கிடக்கும் அவனைக் கொடிய விஷப் பாம்புகளை விட்டுக் கடிக்க வைத்தான். அவன் தோலைக்கூடப் பாம்புகளால் பிளக்க முடியவில்லை. விழித்துக் கொண்ட பீமன் பாம்புகளை நசுக்கினான். அருகிலிருந்த துரியோதனனுடைய தேர்ப்பாகனையும் இடது கையால் நசுக்கிக் கொன்றான்.

மற்றொரு நாள் துரியோதனன் சௌபலனுடன் சேர்ந்து பீமனுடைய உணவில் காலகூடம் என்ற கொடிய விஷத்தைக் கலந்து கொடுக்க ஏற்பாடு செய்தான். ஆனால் அது ஜீர்ணமாகி அவனுக்குச் சற்றும் கெடுதல் விளைக்காமல் இருந்தது. துரியோதனன் இதைக் கண்டு திகைத்தான். பீமனை எவ்வாறு கொல்வது என்று அறியாமல் இரவும் பகலும் உறக்கமின்றி யோசித்தான். கர்ணன், சகுனி, சௌபலன் இவர்களுடன் கலந்து பல உபாயங்களை ஆராய்ந்தான். பாண்டவர்கள் இதை அறியவில்லை. திருதராஷ்டிரனுக்கும் பணிப் பெண்ணுக்கும் பிறந்த மகனாகிய யுயுத்ஸு இந்தச் செய்தியைப் பாண்டவரிடம் கூறினான். ஆனால் விதுரர் சொன்னதன்மேல் அவர்கள் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருந்தார்கள்.

பிறகும் துரியோதனாதியர் பீமனை எப்படிக் கொல்வது என்றே யோசித்தார்கள். ஜலக்கிரீடை செய்வதாகப் பிரமாணகோடிக்குச் சென்று கங்கை நீரில் சூலத்தை நட்டுவைத்தார்கள். அதில் தூங்கும் பீமனை மாட்டிக் கொன்றுவிடலாம் என்று முடிவு செய்தார்கள். பிரமாணகோடியில் தோட்டத்

திலே துணி, கம்பளி இவற்றால் கூடாரங்களை அமைத்தார்கள். சாப்பாடு முதலியவற்றைத் தயார் செய்து துரியோதனனிடம் தெரிவித்தார்கள் ஆட்கள். அப்போது துரியோதனன் தீய நோக்கத்தோடு பாண்டவர்களிடம், "தோட்டமும் காடும் சூழ்ந்த கங்கைக் கரைக்குச் சென்று எல்லாரும் ஜலக்கிரீடை செய்வோம்" என்றான். யுதிஷ்டிரரும் அதற்கு இணங்கினார். பெரிய தேர்களிலும் சிறந்த குதிரைகளிலும் ஏறிக்கொண்டு எல்லாரும் பிரமாணகோடிக்குச் சென்றார்கள். சிங்கங்கள் குகைக்குள் நுழைவதுபோல் அனைவரும் அந்தத் தோட்டத்துக்குள் சென்றார்கள். அழகிய அரண்மனைகளும், ஓடைகளும், அவற்றில் மலர்ந்த தாமரைகளும் நிறைந்து விளங்கும் தோட்டத்தைச் சுற்றிவந்து விளையாடினார்கள். பிறகு அனைவரும் ஓர் இடத்தில் அமர்ந்து விளையாட்டாக ஒருவர் மற்றொருவருடைய வாயில் உணவை ஊட்டிக்கொண்டார்கள். கெட்ட எண்ணமுடைய துரியோதனன் பீமனுடைய உணவில் காலகூட விஷத்தைக் கலந்திருந்தான். அவன் பீமனிடம் சென்று அவனை உபசரித்து இனிமையாகப் பேசித் தானே பீமனுடைய வாயில் அந்த உணவை ஊட்டினான். பீமனும் இதை உணராமல் அந்த உணவை உட்கொண்டான். துரியோதனன் உள்ளுக்குள் சிரித்துக்கொண்டு காரியத்தை முடித்துவிட்டதாக மகிழ்ந்தான்.

பிறகு எல்லாரும் சேர்ந்து நீரில் விளையாடினார்கள். மாலை ஆனதும் அனைவரும் களைப்புற்றுக் கூடாரங்களிலேயே இரவு தங்கி இருக்கத் தீர்மானித்தார்கள். பீமன் ஏராளமாகப் புசித்து நீரில் விளையாடினான். நீரின் நடுவே அழைத்துப் போனான் மற்றவர்களையும். பிறகு கரையேறிக் களைப்புற்று இறந்தவனைப்போல் அசைவற்று உறங்கினான்.

துரியோதனன் பீமனைக் கயிற்றால் கட்டினான். கங்கை நீரில் சூலம் நட்டுப் பீமனைக் கரையிலிருந்து நீரில் பிடித்துத் தள்ளினான். ஆனால் சூலத்தில் பீமன் உடல் படவில்லை. நீரில் மூழ்கிவிட்டது பீமன் உடல். அப்படியே பாதாளத்துக்கு அவனை நீர்ச்சுழல் இழுத்துச் சென்றது. அவன் உடம்பு பட்டுப் பாம்புக் குட்டிகள் பல நசுங்கின. அதனால் கொடிய விஷமுடைய பல பாம்புகள் ஒன்று சேர்ந்து பீமனைக் கடித்தன. பாம்பு விஷம் பட்டவுடன் அவன் உடலில் இருந்த காலகூட விஷம் விலகிவிட்டது.

உடனே பீமன் எழுந்து கட்டுக்களை அறுத்துப் பாம்புகளை நசுக்கினான். இதைக் கண்டு பாம்புகள் தம் அரசனாகிய வாசுகியிடம் சென்று முறையிட்டன. உடனே வாசுகி மற்றப் பாம்புகளுடன் வந்து பீமனைப் பார்த்தான். ஆரியகன் என்ற பாம்பும் அவனைப் பார்த்துக் குந்தியின் மூலம் தனக்கும் பீமனுக்கும் உள்ள உறவை நினைத்து மகிழ்ந்தது. வாசுகி ஆரியகனிடம், "இவனுக்கு நாம் என்ன கொடுக்கலாம் நிதிக் குவியல், ரத்தினங்கள் இவற்றைக் கொடுப்போமா?" என்று கேட்டான். அதற்கு ஆரியகன், "நாகராஜனே, தாங்கள் திருப்தி அடைந்திருந்தால் இவனுக்கு 'ரச'த்தைக் கொடுங்கள். ஒவ்வொரு ரசக் குடத்திலும் ஆயிரம் யானைகளின் பலம் அடங்கியிருக்கிறது. அதனால் இவனுக்குப் பலன் உண்டு. பணக்குவியலால் இவனுக்கு ஆகவேண்டியது என்ன?" என்றான்.

வாசுகி, "அப்படியே ஆகட்டும்" என்றான். பிறகு பீமனைப் பாம்புகள் உபசரித்து ஆசீர்வதித்தன. பீமன் பரிசுத்தனாகக் கிழக்கு நோக்கி அமர்ந்து, ஒரே மூச்சில் ஒரு குடம் 'ரச'த்தைக் குடித்தான். இப்படி எட்டுக் குடங்களையும் குடித்துப் பாம்புகள் கொடுத்த படுக்கையில் எட்டு நாட்கள் தொடர்ந்து படுத்து உறங்கினான்.

கொடிய புத்தி உடைய துரியோதனன் பீமனைப் பாம்பு மடுவில் போட்டுவிட்டுக் காரியம் முடிந்துவிட்டதாக எண்ணினான். பொழுது விடிந்தவுடன் பீமன் முதலிலேயே ஹஸ்தினபுரம் சென்றுவிட்டான்

என்று துரியோதனன் அனைவருக்கும் தெரிவித்தான்.

யுதிஷ்டிரர் ஏதோ கெடுதல் வந்துவிட்டதாக ஊகித்தார். ஒன்றும் புரியாமல் தாயிடம் வந்து வணங்கி, ''அம்மா, பீமன் இங்கே வந்தானா?'' என்று கேட்டார். அவள், ''இல்லையே!'' என்றதும் அந்தச் சகோதரர்கள் கலங்கினார்கள். விரைவில் சென்று பல இடங்களிலும் தேடிப் பார்த்தார். பீமனைக் காணாமல் வருத்தமுற்றுத் தாயிடம் விஷயத்தைச் சொன்னார்கள். உடனே குந்தி விதுரனை அழைத்து வந்து, ''பீமனைக் காணவில்லை. தோட்டத்திலிருந்து மற்ற எல்லாரும் ஒன்றாக வந்தார்கள். பீமன்மட்டும் வரவில்லை. துரியோதனனுடைய பார்வையைக் கவனித்தால் எனக்கு என்னவோ சந்தேகமாக இருக்கிறது. தூங்கும்போது என் மகன் பீமனை அவன் கொன்றுவிட்டான் என்று படுகிறது'' என்றாள். விதுரர், ''அம்மா, அப்படிச் சொல்லாதே! நீ உன் மற்றப் புதல்வர்களையும் காக்க வேண்டும் அல்லவா? துரியோதனனைப் பகைத்துக்கொண்டால் அவன் மற்றவரையும் கொன்றுவிடக்கூடும். முனிவர்கள் முன்பே உன் பிள்ளைகள் நீண்ட ஆயுள் உடையவர் என்று கூறியிருக்கிறார்கள். அதனால் கவலைப்படாதே! பீமன் வருவான்; உனக்கு மகிழ்ச்சியூட்டுவான்'' என்று கூறிச் சமாதானம் செய்தார். குந்தி மன வருத்தத்துடன் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தாள்.

எட்டாவது நாள் பீமன் விழித்துக்கொண்டான். அவன் உண்ட ரசம் ஜீர்ணமாகிவிட்டதால் அளவிட முடியாத பலம் உடையவனாகிவிட்டான். பாம்புகள் விஷத்தை அகற்றும் பல செடி கொடிகளால் அவனை அலங்கரித்தன. அவை கொடுத்த பாயசத்தை அவன் குடித்தான். பிறகு அவை அவனைத் தூக்கிப் பிரமாணகோடியிலே கங்கைக் கரையில் கொண்டு வந்து சேர்த்துவிட்டு மறைந்தன.

பீமன் தன் வீட்டுக்கு வந்தான். தாயையும் தமையனாரையும் வணங்கினான். அவர்கள் அவனைத் தழுவி உச்சி மோந்தார்கள். அர்ஜுனனைப் பீமன் தழுவிக்கொண்டான். நகுல சகதேவரும் அர்ஜுனனும் அவனை வணங்கினார்கள். நடந்ததை அப்படியே கூறினான் பீமன். பாண்டவர் விஷயத்தை வெளியிடாமல் மீண்டும் பீமனைக் காப்பதில் சிரத்தை கொண்டார்கள். அவ்வப்பொழுது விதுரர் தகுந்த புத்தி சொல்லி வந்தார், அவர்களுக்கு.

துரியோதனன், பீமன் திரும்பி வந்திருப்பதைப் பார்த்துப் பெருமூச்சு விட்டான்; கவலை கொண்டான். நாளுக்கு நாள் பீமனை எப்படிக் கொல்வது என்று யோசிக்கலானான். பாண்டவர் துரியோதனனுடைய செய்கையை அறிந்தும் விதுரர் எச்சரிக்கவே அதை வெளியிடாமல் இருந்தார்கள்.

அநாதை

ஒருவன் தன் பெற்றோர் இருவரையும் கொன்றுவிட்டானாம்; கோர்ட்டிலே, ''நான் தாய் தந்தையற்ற அநாதை'' என்று வாதித்தானாம். இது பிரபல அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் சொன்ன ஒரு வேடிக்கைத் துணுக்கு.

இந்தப் பண்டத்தைப் பற்றிப் பராபரியாய் என்ன என்னவோ தப்பபிப்பிராயங்கள் உண்டு; உண்மையை இது விளக்குகிறது.

பெருங்காய ரகசியம்

கே. ஏ.

வருஷந்தோறும் சுமார், கோடி ரூபாய் பெறுமானம் உள்ள பெருங்காயம் வெளிநாடுகளிலிருந்து நம் நாட்டில் வந்து இறங்குகிறது.

பெருலா என்னும் ஒரு வகைப் பயிர் வெளியிடும் திரவப்பொருள் தான் பெருங்காயம். ஈரம் இல்லாத லேசான காற்று உள்ள பிரதேசங்களில் - ஈரானின் கிழக்குப் பகுதியிலும் ஆப்கனிஸ்தானத்தின் சில பகுதிகளிலும் - இது பயிராகிறது. காச்மீர்க் கணவாய்களின் ஓரத்தி இருக்கும் பெனிஹால் வழியிலும் பெருங்காயம் போன்ற திரவத்தை வெளியிடும் செடிகள் இருக்கின்றன. இந்தியா இரண்டாகப் பிரிவதற்குமுன், இந்த நாட்டுக்கு வரும் பெருங்காயத்தில் பெரும் பகுதியும் ஆப்கனிஸ்தானத்திலிருந்து கைபர் கணவாயின் மூலம் தரைமார்க்கமாய் வந்துகொண்டிருந்தது. இப்போது வரும் பெருங்காயம் முழுவதும் பம்பாய்த் துறைமுகத்தின் வழியாகவே நம் நாட்டுக்கு வருகிறது. ரப்பர் மரத்திலிருந்து ரப்பர்ப் பாலை எடுப்பது போலவே, பெருங்காயத்தையும் செடிகளிலிருந்து எடுக்கிறார்கள். நாலு அல்லது ஐந்து வருஷம் வளர்ந்த பெருலாச் செடிகள் நாலைந்தடி உயரமும் அரை அடி சுற்றளவும் உள்ளவையாக இருக்கும். புதர்போல் வளரும். இந்தச் செடிகளிலிருந்து பெருங்காயத்தை எடுக்கிறார்கள். மார்ச், ஏப்ரல் மாதங்களில் செடிகளில் பூ மலருகிறது. அடிப் பகுதியைச் சுற்றி இருக்கும் மண்ணைத் தோண்டி அப்புறப்படுத்திய பின், வேரின் மேல்பாகம் தெரியும். பட்டையைச் செதுக்கி ஆர்க்குகளும் மண்ணால் செய்த தொப்பிகளும் கொண்டு அதை மூடி வைப்பார்கள். பிறகு, வேரிலிருந்து வடியும் பாலை ஒரு பாத்திரத்தில் சொட்டுச் சொட்டாகப் பிடிப்பார்கள். பாலை உலர விடுவார்கள். ஈரமாக இருக்கும் நிலையில் பாலைத் தொட முடியாது. அது பிசின் ஆனதால் கையை வைத்தால் காய்ந்து வற வற என்று இழுக்கும். பால் காய்ந்தபின் செதுக்கி எடுப்பார்கள். சில சமயங்களில் மண்ணையும் சேர்த்து உருக் கொடுத்து அதை எடுக்கச் சுலபமாகச் செய்துகொள்வார்கள். விற்பனையாகும் சரக்கில் இது போன்ற மண்ணும் மரப்பட்டையும் நிறைந்திருக்கின்றன. ஒரு தடவை வெட்டிப் பாலை எடுத்த பின், அதே செடியில் இன்னும் சற்றுக் கீழே வெட்டி மறுபடியும் பால் எடுப்பார்கள். ஒரு செடியில் இப்படி மூன்று முறை எடுப்பார்கள். காய்ந்த பின் விழுதாக உருட்டி மேலே கோணியோ, தோலோ வைத்துக் கட்டி மரப் பெட்டிகளில் அடைத்து ஏற்றுமதி செய்கிறார்கள். ஒரு மரத்தில் மூன்று மாதம் வரைக்கும் இப்படிக் கிடைக்கும் பெருங்காயத்தின் நிறை இரண்டு மூன்று பவுண்டு இருக்கும்.

பெருலாச் செடிகள் பல வகைப்படும். இவற்றில் கிடைக்கும் பெருங்காயத்தை ரக வாரியாகப் பிரிக்கிறார்கள். அது அதற்குத் தகுந்தபடி விலை வைக்கிறார்கள். முக்கியமாய்ப் பெருங்காயம் இரண்டு வகைப்படும். ஒரு வகை ஐரோப்பாவில் செலவாகிறது. அங்கே அதை மருந்துப் பொருளாக உபயோகிக்கிறார்கள். நம் நாட்டில்

காப்பிரைட்: கர்மவீர் (கன்னடம்), ஹுப்ளி.

சாதாரணமாக எல்லாரும் உபயோகிக்கும் மசாலாதான் பெருங்காயத்தின் மற்றொரு வகை. இது அதிக மணம் உள்ளது. வியாபாரத்தில் உயர்ந்த ஸ்தானத்தை வகிக்கும் பெருங்காயத்தை விட மட்டமான 'ஹிங்க்ரா' என்ற வகை ஐரோப்பாவில் உபயோகமாவது போலவே ஆயுர்வேத மருந்துகளிலும் உபயோகப்படுகிறது.

பெருங்காயத்தில் பல வகையும் கலப்பும் உண்டு. மார்க்கெட்டில் விற்கும் வகை கலப்பினுல் வந்தது தான். இதில் மேலே கண்ட இரண்டு வகையையும் கலந்து விடுகிருர்கள். ஒன்று மிக மலிவு. இதுதான் காரணம். அந்த அந்த நாட்டுப் பெயரால் ஈரானி, பட்டான் என்ற இரண்டு வகைப் பெருங்காயம் வழங்குகிறது. அவற்றிலும் பல பிரிவுகள் இருக்கின்றன. வாசனை தீவிரமாயிருப்பதும் குறைந்திருப்பதுமே இந்தப் பிரிவுக்குக் காரணம். அதிக வாசனையுள்ள பெருங்காயம் அருகில் இருந்தால் கண் எரியும்; உடம்பில் பட்டால் தோல் உரியும்.

இறக்குமதியாகும் பெருங்காயம் அந்த நிலையிலேயே நமக்குக் கிடைத்து விடுவதில்லை; கலப்பு முறையிலேயே கிடைக்கிறது. இதற்குப் 'பந்தானி ஹிங்க்' என்று பெயர். மூலப்பொருளோடு வேறு வேறு அளவில் கோந்தும் மாவுப் பொருள்களும் சேர்க்கிருர்கள். இதையே சிறு சிறு டப்பிகளில் வியாபாரிகள் அடைத்துத் தங்கள் வியாபார மார்க் ஒன்றை விளம்பரப்படுத்தி விற்கிருர்கள். இந்தக் கலவையில் பெருங்காய விகிதம் எவ்வளவு என்பதை ஊகிக்க முடியாது. மனிதன் போகப் பிரியன். சுகாநுபவத்துக்கு வாசனையும் ஒரு சாதனந்தானே! மனிதனுடைய இந்தப் பலவீனம் காரணமாகவே நாளுக்கு நாள் பெருங்காய வியாபாரம் முன்னேறி வருகிறது.

பால் பெருங்காயம், கறுப்புப் பெருங்காயம் என்ற இரண்டே பிரிவுகள் ஜனங்களுக்குப் பழக்கமானவை. பால் பெருங்காயம் தண்ணீரில் கரைகிறது; கறுப்புப் பெருங்காயம் எண்ணெயில் பொரிகிறது. 'இந்த இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?' என்ற கேள்வி எல்லாரும் கேட்பதுதான். பெருங்காயத்தின் ரசாயனச் சேர்க்கையிலும் செய்யும் முறையிலும் மாறுபாடு அதிகமாக இல்லை. எண்ணெய், கோந்து, பெருங்காயப் பால் இவற்றின் கலப்புத்தான் இரண்டு வகையிலும் இருக்கிறது. கோந்து அதிக அளவில் சேர்ந்தால், அது தண்ணீரில் கரைகிறது. பெருங்காயப் பால் அதிகமாய்ச் சேர்த்தால், அது எண்ணெயில் பொரிகிறது.

கந்தகச் சத்து நிறைந்திருக்கும் பொருளோடு எண்ணெயில் கரையும் பொருளும் சேர்ந்திருப்பதே பெருங்காயத்தின் தனிப்பட்ட வாசனைக்குக் காரணமாகிறது. இதேமாதிரி, கந்தகச் சத்து நிறைந்த பொருள் வெங்காயத்திலும் வெள்ளைப் பூண்டிலும் இருக்கிறது. கந்தகச் சத்துள்ள பொருள்கள் இயற்கையாகவே தீவிரமான, வெறுப்பான வாசனை கொண்டவை. ஓரளவு சுத்தப்படுத்துவதாலும் வேறு ஆகாரப் பொருள்களுடன் கலப்பதாலும், இவை ஆகாரத்துக்கு மனேகரமான வாசனையையும் ருசியையும் கொடுக்கின்றன. வெள்ளைப் பூண்டையும் வெங்காயத்தையும் சுத்தப்படுத்திப் பெருங்காயம் போல் உணவுக்கு வாசனை பெறுவதும் சாத்தியமே.

வாசனையைக் கொடுப்பதோடு, பெருங்காயம் மருந்தாகவே பயன்படுவதில் பிரசித்தி பெற்றது. பிரசித்தி பெற்ற ஆயுர்வேத மருந்துகளுள் 'ஹிங்குவாஷ்டகம்' என்பதில் பெரும் பகுதி பெருங்காயந்தான் சேர்ந்திருக்கிறது. சாதாரண அஜீர்ணத்துக்குப் பெருங்காயம் சாப்பிட்டாலே அஜீர்ணம் குணமாகிவிடும். வயிற்றில் கிருமிகள் சேராதபடி தடுக்கும் குணமும் பெருங்காயத்துக்கு உண்டு.

மாடு கன்றுகளுக்கு அஜீர்ணம் ஏற்பட்டால்கூடப் பெருங்காயம் புகட்டிக் குணப்படுத்துவது எல்லாருக்கும் தெரிந்த வைத்தியம்.

நகர யந்திர வாழ்க்கையில் ஒரு தினசரிக் காட்சி—

அரைத் தூக்கம்

ப. ந. பாளந்தே

அரைத் தூக்கமா! அதில் என்ன விசேஷம் இருக்கிறது என்று வாசகர்கள் நினைக்கலாம். அதில் எவ்வளவோ இருக்கிறது. பிராணிகளுக்கும் மாணவர்களுக்கும் இது தெரியாததல்ல. நாம் எல்லாருமே அரைத் தூக்கம் போடுகிறோம். அதனுல் பிறருக்கு எவ்வளவு பொழுது போக்காக இருக்கிறது என்பது அரைத் தூக்கம் போடுகிறவருக்குத் தெரிவதில்லே.

அரைத் தூக்கம் போடுவது ஒரு கலே. தூக்க மயக்கத்தில் இருந்தபோதிலும், நாம் விழித்துக்கொண்டிருப்பதாகப் பிறர் கருதும்படி செய்வதுதான் அந்தக் கலே. பம்பாயிலும் முக்கிய நகரங்களிலும் வாழ்கிறவர்களுக்கு இந்தக் கலே தெரியும். நமது யந்திர வாழ்க்கையில் முழுத் தூக்கம் போடுவதற்கு நேரம் கிடைப்பதில்லே. படுக்கையிலிருந்து எழுந்திருக்கச் சிறிது தாமதம் உண்டாலுல் பின்பு எல்லா வேலேகளுமே தடைப்பட்டுவிடும்; நம்மோடு குடித்தனம் இருப்பவர்களுக்கும் அதனுல் சிரமம். எழுந்திருக்கக் கொஞ்சம் தாமதமாலுல் பல் துலக்குவதற்குக் குழாயடியில் 'க்யூ' வரிசையில் நிற்க வேண்டும். முக க்ஷவரத்துக்காகச் சோப்பு அப்பிக்கொள்ளும் நேரத்தில் உள்ளிருந்து காபி வரும். ஒரு பக்கம் ரேஸரை ஓட்டிக் கொண்டே மறு பக்கம் காபி குடிக்க வேண்டியதுதான்!

அடுத்தபடி ஸ்நானம். நீங்கள் போகும் சமயத்தில் குழந்தைகள் ஒவ்வொன்ருகக் குளித்துக்கொண்டு இருக்கும். எப்படியோ குளித்து வெளிவந்தவுடனே உங்கள் மனைவி இலே போட்டுப் பரிமாறி வைத்திருப்பாள். ஆனந்தமாக உண்ணும் சமயத்தில் சூடான சோறும் சாம்பாரும் உங்கள் கையை வேக வைத்துவிடும். நீங்கள் ஏதாவது கோபமாகப் பேசினுல் உள்ளே உங்கள் மனைவி டிபன் பாக்ஸில் சுடச் சுடப் பலகாரத்தை வைத்துக் கொண்டே, ''இவ்வளவு அவசரமாக இருப்பவர்கள் சற்று முந்தி எழுந்திருப்பதுதானே?'' என்கிருள். நீங்கள் எரிச்சலோடு இரண்டே வாயாக அள்ளிப் போட்டுக்கொண்டு, லோகல் வண்டியைப் பிடிக்க லொங்கு லொங்கென்று ஓடுகிறீர்கள். அப்படிப் போயும் என்ன? 9-32 தவறி விட்டது. அடுத்த இரண்டும் வேகமாகச் செல்லும் வண்டிகள். ஸ்டேஷனில் நிற்பதில்லே. 9-50-இல்தான் நீங்கள் போக வேண்டும்.

இரவு நன்ருகத் தூங்காத குறையை நீங்கள் அவ்வப்போது அரைத் தூக்கம் போட்டுத்தான் சரிப்படுத்த வேண்டும். காலேயில் படுக்கையிலிருந்து எழும்போதே நாம் அரைத் தூக்கம் போடுகிறோம். ஜில்லென்று காற்று வீச, அப்போதுதான் நமக்கு நல்ல தூக்கம் வருகிறது. அலாரம் மணி அடித்தால் நமக்கு எரிச்சலாக வருகிறது; 'சனியன்!' என்று சொல்லிக்கொண்டே அதன்

காப்பிரைட்: வஸந்த் (மராட்டி: ஜனவரி '57), பம்பாய்-4.

வாயை அமுக்குகிறோம். ஆனால் நம் வீட்டுக்காரி அலாரம் அடித்த வுடனே வீட்டு வேலையைத் தொடங்கிவிடுகிறாள். காபியும் கையுமாக அவள் வந்து உங்களை எழுப்புகிறாள். ''அடடே! இவ்வளவு நேரம் ஆகிவிட்டதா?'' என்று சொல்லியபடியே நீங்கள் எழுந்திருக்கிறீர்கள்.

எழுந்திருக்க நேரமானாலும் பரவாயில்லை; முக க்ஷவரம் செய்து கொள்ளாமலே அன்று ஆபீசுக்குப் போய்விடலாம். லோகல் வண்டியிலோ பஸ்ஸிலோ நீங்கள் பத்துப் பதினைந்து நிமிஷம்முதல் அரை மணிக்குமேல் தூங்க முடியாது; அதுவும் உங்களுக்கு உட்கார இடம் கிடைத்தால்தான். இல்லாவிட்டால் நின்றபடியே தூங்கி வழிய வேண்டும். ஆயினும் இந்த லோகல் வண்டித் தூக்கம் சுக மானதுதான்! உங்கள் எதிரிலேயே பாருங்களேன்; அதோ ஒரு வியாபாரி ஜன்னலருகில் கையை மடக்கி, முகத்தை உள்ளங் கையில் புதைத்துக்கொண்டு ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறார். அவர் சிந்தனையா செய்கிறார்? ஊஹும், தூக்க மயக்கம். வண்டிக்குப் பிரேக் போட்டதுமே, சாய்ந்து சாய்ந்து இறங்கி வந்த அவர் தலை ஜன்னலில் முட்டுகிறது. அவர் திடுக்கென்று விழித்துக் கொண்டு சுற்றுமுற்றும் பார்க்கிறார். கைக் குட்டையால் முகத்தைத் துடைத்துக்கொண்டு, ஏதோ வியாபாரக் காகிதங்களை எடுத்துப் படிக்க ஆரம்பிக்கிறார். சிறிது நேரத்துக்கெல்லாம் மீண்டும் அவர் கொர்..கொர்..

அடுத்த ஸ்டேஷனிலிருந்து வண்டி புறப்பட்டுவிட்டது. இப்போது உங்கள் தோள்மேல் ஒருவர் அன்போடு தலையைச் சாய்க்கிறார். ''ஐயா பால்காரரே, நேராக உட்காருங்களேன்!'' என்று நீங்கள் அவரை எழுப்புகிறீர்கள். அவர் கண்ணைப் பாதி திறந்துகொண்டே சற்று நேராக உட்காருகிறார்; ஆனால் மறுபடியும் அவர் தலை உங்கள் தோள்மேல் சாய்கிறது. மீண்டும் நீங்கள் எழுப்புகிறீர்கள். அவரோ நீங்களோ வண்டியை விட்டு இறங்கும்வரையில் இது நடக்க வேண்டியதுதான்!

நீங்கள் இப்படிப் பால்காரரைச் சரிப்படுத்திக்கொண் டிருக்கையில் எதிரே உங்கள் காலில் ஏதோ அடிபடுகிறது. எதிரில் இருப்பவர் ஜன்னலில் தலையைச் சாய்த்துத் தூங்கியபடியே காலைச் சற்று நீட்டிக்கொள்ள முயலுகிறார். டங்கென்று அவர் கால் உங்களை முட்டியதற்குக் காரணம் இது தான்.

இப்படிப் பல பேர் தாக்கும் போது உங்களால் உட்கார முடிவதில்லை. எழுந்து ஒரு மூலையைப் பிடித்துக்கொண்டு நிற்கிறீர்கள். இவ்வளவு நேரம் உட்கார்ந்து அவஸ்தைப்பட்டுக் களைத்துப் போன உங்கள் கண் உங்களை அறியாமல் சுழற்றுகிறது. நீங்கள் நின்றபடியே தூங்கி வழிந்து அந்தப் பால்காரருடைய மடியில் போய் விழுகிறீர்கள். இதற்குக் காரணம் வண்டி ஒரு ஸ்டேஷனில் நின்றதுதான்; நீங்கள் விழித்துக் கொண்டு, 'யாராவது சிரிக்கிறார்களா?' என்று சுற்று முற்றும் பார்க்கிறீர்கள். உம்; அவனவன் தன் அரைத் தூக்கத்தில் மூழ்கியிருக்கிறான். ஆனால் கறுப்புக் கண்ணாடி அணிந்த ஒருவர் உங்களைக் கூர்ந்து பார்ப்பதாக உங்களுக்குத் தோன்றுகிறது. உங்களுக்கு வெட்கமாக இருக்கிறது. இதோ அடுத்த ஸ்டேஷன் வந்துவிட்டது; வண்டி குலுங்கி நிற்கிறது. அந்தக் கறுப்புக் கண்ணாடிக்காரர் தடாரென்று எதிர்ப்பெஞ்சில் மோதுகிறார். ''அட ராமா! இவ்வளவு நேரமும் ஐயா தூக்க மயக்கத்தில் இருந்தாரா!'' என்று உங்கள் வாய் முணுமுணுக்கிறது. இப்போது உங்களுக்கு ஆறுதலாக இருக்கிறது.

ஒரு வேடிக்கையான நிகழ்ச்சியை உங்களுக்குச் சொல்கிறேன். ஒரு பெரியவர் பம்பாயிலிருந்து புனாவுக்குப் புறப்பட்டார். விக்டோரியா டெர்மினஸில் வண்டி பிளாட்பாரத்தில் நின்றிருந்தது. அவர் ஜன்னலருகில் ஏன் போய் உட்கார்ந்தார் என்பது பிறகுதான் எனக்குத் தெரிந்தது. அவர் தம் சாமான்களைப் பெஞ்சின் அடியில் வைத்-

தார். தலைப்பாகையைக் கழற்றி ஜன்னல்மேல் வைத்து, அதன் மேல் தலையைச் சாய்த்துக்கொண்டு உறங்கலானார். பத்து நிமிஷங்கள் கழித்து வண்டி, ஏதோ மோதியதனால் குலுங்கியது. வண்டி புறப்பட இன்னும் வெகு நேரம் இருந்தது. விசாரித்ததில், எஞ்சினை வண்டியில் பூட்டியதாகத் தெரிந்தது. இந்த அதிர்ச்சியில் பெரியவர் திடுக்கிட்டு விழித்துக்கொண்டு, தலைப்பாகையையும் மூட்டையையும் எடுத்துக்கொண்டு இறங்க முயன்றார். ''என்ன, புனா வந்துவிட்டதா?'' என்று அவர் எங்களைக் கேட்டார். பத்து நிமிஷத்துத் தூக்கத்தில் அவர் பம்பாயிலிருந்து புனாவரைக்கும் பிரயாணம் செய்துவிட்டார்!

தூக்க மயக்கம் வருவது மனித இயல்பு; உடலின் இயற்கையான செயல் இது. நம்மை அறியாமல் அது வருகிறது. பெரும்பாலும் வேலையில் ஈடுபட்டிருக்கும்போது அது வருவதில்லை. நம் வீட்டுக்காரி சமையலில் முனைந்திருக்கும்போது தூக்க மயக்கம் வந்தால் எவ்வளவு சிரமமாக இருக்கும்! ஆனால் அது வருவதில்லை; வேலைகள் யாவும் முடிந்து அவள் சாப்பிட்டுச் சமையலறையைச் சுத்தம் செய்துவிட்டு, மாடிக்கு வந்த பிறகுதான் அது வருகிறது. அவள் தன் மடியில் குழந்தையைத் தூங்க வைக்கிறாள். குழந்தை தூங்குவதில்லை; ஆனால் அவளுக்குக் கண்ணைச் சுழற்றுகிறது.

ஆனால் எப்பொழுது பார்த்தாலும் இப்படித் தூக்க மயக்கம் வருவது சரியல்ல. என் நண்பர் ஒருவர் ஒரு டாக்டரிடம் டிரைவராக இருக்கிறார். ஒரு நாள் இரவு, டாக்டர் வெளியூரில் கேஸ் பார்த்துவிட்டுத் திரும்பினார். நடுநிசிக்கு மேல் ஆகிவிட்டதால் டிரைவருக்குத் தம்மை அறியாமல் தூக்கம் வந்தது. டாக்டர் பின் ஸீட்டில் உட்கார்ந்தபடியே தூங்கிவிட்டார். டிரைவரும் கண் அயர்ந்தார். கார் ஒரு மரத்தில் மோதிய பிறகுதான் இருவரும் விழித்தனர். நல்ல வேளையாக அவர்களுக்கு அடிபடவில்லை; கார் மட்டும் முன் பக்கத்தில் நசுங்கிப் போயிற்று.

ஒரு நாள் என் நண்பர் ஒருவர் அரசியலைப்பற்றிப் பேசலானார். அவர் காரண காரியங்களோடு ஏதோ ஒரு கருத்தை மும்முரமாக ஸ்தாபிக்கலானார். நான் அயர்ந்து அரைத் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டேன். ''இதைப்பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?'' என்ற கேள்வியோடு, முஷ்டி யுத்தம் செய்வதுபோல அவர் என் முகத்துக்கு எதிரே வந்தபோதுதான் நான் விழித்துக்கொண்டேன். நான் தூங்காதவன்போலச் சமாளித்துக்கொண்டு, ''நீங்கள் சொல்வது எனக்கு என்னவோ பொருத்தமாகத் தோன்றவில்லை'' என்றேன். ''உங்களுக்குத் தோன்றாதுதான்!'' என்று சொல்லிக்கொண்டே அவர் போய்விட்டார். அந்த மட்டும் அவர் நான் கண்ணயர்ந்ததைக் கவனிக்கவில்லையே என்று மகிழ்ந்தேன்.

சில பேருக்கு இப்படி அரைத் தூக்கம் வருவதில்லையாம். ஆனால் எனக்கு என்னவோ அரைத் தூக்கம் இல்லையென்றால் வாழ்க்கையே இல்லை என்று தோன்றுகிறது. இதென்ன ஸார், இந்தக் கட்டுரையைப் படிப்பதற்குள்ளேயே நீங்கள் அரைத் தூக்கம் போட ஆரம்பித்துவிட்டீர்களே! ஆகா! உங்கள் தலை எப்படி ஆடுகிறது! நான் போய் வருகிறேன்; நன்றாகத் தூங்குங்கள்.

விவாத மதிப்பு

விவாதம் என்பதே அற்பத்தனமாகும். ஏனென்றால், நல்ல சமூகமாயிருந்தால், எல்லாருக்குமே ஒரே மாதிரி அபிப்பிராயங்கள்தான் இருக்கும்.

—ஆஸ்கார் வொயில்டு



யானை பிடித்தல்

யானை பிடிப்பதை நேரே போய்ப் பார்த்து, போட்டோக்கள் எடுத்து, 'மஞ்சரி'க்குப் பிரத்தியேகமாக இந்த நண்பர் எழுதியிருக்கிறார்.

என். ராமகிருஷ்ணா

மைசூரில் காட்டு யானைகளைப் பழக்குகிறார்கள். பெரிய யானை மந்தை ஒன்று மதம் பிடித்து அலையத் தொடங்கினால் அக்கம் பக்கத்திலுள்ள கரும்புத் தோட்டம், நெல்வயல் எல்லாம் பாழாகவேண்டியதுதான். எப்படியாவது அவைகளைப் பிடித்து, பயிர்களும் குடியானவர்களும் நாசம் ஆகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டாமா? யானைகளுக்கு என்னதான் வலிமை இருந்தாலும் அவைகளை எளிதில் பழக்கிவிடலாம்; அப்புறம் அவை மிகவும் பொறுமையோடும் நன்றியோடும் இருந்து, நன்றாகவும் உழைக்கும்.

ஹிந்துஸ்தானியில் 'கெட்டா' என்று வழங்கும் குழியில் சிக்க வைத்து இந்தமாதிரி யானைகளைப் பிடிப்பது வழக்கம். அடிக்கடி யானைகள் நடமாடும் வழியில் 8 அல்லது 10 ஏக்கர்ப் பரப்பில் சுமார் 10 அடி அகலமும் 8 அடி ஆழமுங் கொண்ட V என்ற வடிவுள்ள குழிகளைத் தோண்டி வைப்பார்கள். முக்கியமான இடங்களில் மேல் பாகத்தில் இவைகளைச் சிறை பிடிக்கக் கதவுகள் அமைத்திருப்பார்கள். அவைகளில் காட்டு யானைகள் புகுந்ததும் குழிகள் இருக்கும் இடத்தை நோக்கி விரட்டுவார்கள். இந்தப் பரப்புக்குள் யானைகளுக்குத் தண்ணீர் வசதி கிடைக்கும்படி ஏற்பாடு செய்து ஓரளவுக்கு அவை தம் இஷ்டம்போல் திரியும்படி விடுவார்கள். இந்தமாதிரி குழிகளை மூங்கில் காடுகளில்தான் பொதுவாகத் தோண்டுவார்கள். அங்கேதான் யானைகளைப்

காப்பிரைட்: என். ராமகிருஷ்ணாவுக்கு உரியது.

பிடிக்க வசதியாக இருக்கும். மிகவும் அடர்த்தியான காடுகளில் யானைகள் வாழ விரும்புவதில்லை. அடர்த்தியில்லாத இந்தமாதிரி மூங்கில் காடுகளில்தான் இந்தப் பிரம்மாண்டமான பிராணிகள் சற்றுத் தாராளமாகச் செல்லமுடியும். இங்கே உள்ள வாசல்களின் அருகில் 'ஃபன்னல்' (Funnel) வடிவில் அமைத்த பரண்போன்ற வேலி அடைப்புகளை 200 முதல் 300 கஜ நீளத்துக்குக் கட்டியிருப்பார்கள். இந்த அமைப்புக்குப் பக்கத்திலேயே தரைமட்டத்தில் 100 அடி அகலத்துக்கு வட்டமாக இன்னும் ஒரு வேலி அமைத்திருப்பார்கள். 'கெட்டா' பகுதியிலிருந்து, உள்ளே அமைத்த இந்த வட்ட அமைப்புக்குள் நுழைய ஒரு பெரிய வாயில் உண்டு. இந்த வட்டத்துக்குள்ளேதான் பழக்கிய யானைகளைக் கொண்டு காட்டு யானைகளைக் கயிற்றால் பிணைத்துவிடுகிறார்கள். இன்னும் நடைப்பாதைகளை எல்லாங்கூடச் சுத்தமாக வைத்திருப்பார்கள். ஆட்கள் போய் வர வசதியாக இப்படி முன்னேற்பாட்டை யெல்லாம் கூலி ஆட்களையும் அநுபவஸ்தர்களையும் கொண்டு செய்து முடிப்பார்கள்.

பிறகு குறிப்பிட்ட ஒரு நாளில் காட்டு யானைகளைத் துரத்தி வளையத்துக்குள் விரட்டுவதற்காகக் 'குமுக்கி' என்ற பழக்கிய யானைகள் நூறுடன் ஆட்கள் அக்கம் பக்கம் காட்டில் நுழைவார்கள். வேலி போட்டிருக்கும் அடைப்பை நோக்கி யானைகள் வரும்படி விரட்டத் தொடங்குவார்கள். அது வரைக்கும் காட்டு யானை மந்தை கண்ணுக்குத் தட்டுப்படாமலே இருக்கும். இருந்தாலும் ஆட்கள் சற்றுத் தொலைவிலேயே உஷாராக நின்றபடி தங்களுக்கு முன்னால் வேலிப் பக்கம் அவை செல்லும்படி கவனித்துக் கொள்ளவேண்டும்; பறை முதலியவைகளைத் தட்டி விரட்ட வரும் ஆட்கள் புதர் மறைவில் பதுங்கிப் பதுங்கி, ஒரு வேளை காட்டு யானை மந்தை தங்களைத் தாக்கவந்தால் பாதுகாப்பாக ஏறிக்கொள்ள அக்கம் பக்கத்தில் மரங்கள் இருக்கின்றனவா என்று ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொண்டே முன்னேறுவார்கள்.

பழக்கிய யானைகளை அடைப்பின் இரு பகுதியும் சேரும் இடத்தில் வரிசையாக நிறுத்தி வைத்திருப்பார்கள். அடைப்புக்கு அருகில் ஆட்களும் வரிசையாக நின்று கொள்வார்கள். அங்கே செத்தை, சருகு, கட்டை இப்படி எரியக்கூடிய சில பொருள்களைச் சேகரித்து வைத்திருப்பார்கள். சொக்கப் பனை கொளுத்துவதுபோல் அதற்குத் தீ மூட்டித் தகதகவென்று அது எரியும் சமயம், தடாம் புடாம் என்று கண்டதையும் தட்டி ஆர்ப்பாட்டம் செய்வார்கள். வெற்று வேட்டும் வெடித்துத் தீர்ப்பார்கள். இவைகளை யெல்லாம் கண்டும் கேட்டும் யானைகள் மருண்டுவிடும்; மெல்ல அந்தக் காட்டு யானை மந்தையை, திறந்திருக்கும் வாசல் கதவுப் பக்கமாகப் போகும் பாதையில் செலுத்துவார்கள். அப்போது மிகவும் முன் யோசனையோடும், பொறுமையோடும், தந்திரமாகவும் நடந்துகொள்ள வேண்டும். சற்று எசகு பிசகாக ஏதாவது செய்துவிட்டால் எல்லாருமே சாக வேண்டியதுதான்!

ஒவ்வொரு மந்தைக்கும் ஒரு யானை தலைமை வகிக்கும். மற்றவை அந்த யானையைப் பின் தொடர்ந்து செல்லும். ஆகவே, அதன் மேலேயே கண்ணோட்டமாக இருக்க வேண்டும். எல்லா யானைகளும் வாசல் வழியாக அடைப்புக்குள் நுழைந்ததும், கதவை (மேல் பாகத்திலிருந்து கீழே இறக்கி) இறுக மூடிவிடுவார்கள். அங்கே காவல் காத்து வருவார்கள். சுமார் 25 அடி இடைவெளி விட்டுவிட்டு அடைப்பைச் சுற்றி இரவெல்லாம் தீ மூட்டிக்கொண்டேயிருப்பார்கள்.

அடைப்புக்குள் இருக்கும் மூங்கில் புதர், இன்னும் காட்டுச் செடி கொடிகள் இவைதான் இப்படிச் சிக்கிக்கொண்ட யானைகளுக்கு ஆகாரம். இனிமேல் அவை வலிமையோடு இருப்பதற்காக அவைகளின் தீனி விஷயத்தில் அக்கறை செலுத்துவார்கள்.

பிறகு ஒரு நாள் அவைகளைக் கயிற்றால் பிணைக்க ஏற்பாடு செய்



1. 'கெட்டா' என்ற குழி.

2. பரண் அமைத்த வட்ட வேலி அடைப்பு.

3. பழக்கிய யானைகள் இடுக்கு விடாமல் காட்டு யானைகளை மடக்கி நிற்கின்றன.

4. குழியில் அகப்பட்ட யானையைப் பழக்கிய யானையின் மேலிருந்து பாகன் கட்டுகிறான்.

5. வேலி அடைப்புக்குள் காட்டு யானைகளும் பழக்கிய யானைகளும் நிற்கும் காட்சி.









6. பிடிபட்ட யானையைப் பின்னால் இருக்கும் தூணோடு கட்டுவதற்காக வேலிப்பக்கம் செலுத்துகிறான்.

7. பிடிபட்ட யானையை முன்னும் பின்னும் கயிற்றால் கட்டியிருக்கிறார்கள்.

8. தட்டிக் கதவைத் திறந்து யானைகளை வெளியேற்றுகிறார்கள்.

9. காட்டு யானைக்குத் தண்ணீர் காட்டுகிறார்கள்.

10. பழக்கிய பின் சகஜமாகச் செல்லும் யானை.











வார்கள். இதற்கென்று அமைத்ததுதான் உள் அடைப்பு. இதைப் பற்றி ஏற்கனவே தெரிந்திருக்கும். இந்த உள் அடைப்பில் காட்டு யானைகள் புகவேண்டு மென்றால் சற்று அவைகளுக்குப் பாந்தமாக இருந்தால்தானே நுழையும்? ஆகவே, இதற்குள் கப்பும் கிளையுமாக நிறைத்துக் காடுபோல் தோன்றும்படி செய்வார்கள். முன்போலவே யானைமந்தைகளை விரட்ட ஆட்கள் கூடுவார்கள்; ஆனால் இப்போது அத்தனை ஆட்கள் தேவையில்லை. சில பேர் மட்டும் 'குமுக்கி' என்ற பழக்கிய யானைகளோடு 'கெட்டா' என்ற குழிகள் இருக்கும் பகுதியில் நுழைந்து, காட்டு யானைகளை வட்டமான இந்த உள் அடைப்புக்குள் விரட்டுவார்கள். அப்போது சுற்றிலும் எந்தவிதமான சந்தடியும் இல்லாதபடி பார்த்துக்கொள்வார்கள்.

காட்டு யானைகளும் அவைகளுக்குப் பின்னால் 'குமுக்கி' யானைகளும் இந்த அடைப்புக்குள் நுழைந்ததும் (மேலிருந்து கதவைக் கீழே விட்டு) வாசல் வழியை மூடிவிடுவார்கள். 'குமுக்கி' யானைகளின்மேல் அமர்ந்திருப்பவர்கள் வெகு உஷாராக இருக்கவேண்டும்; தப்பித் தவறிக் கீழே விழுந்துவிடலாம்; இல்லாவிட்டால் காட்டு யானைகள் அவர்களை உருட்டித் தள்ளிவிடலாம்.

காட்டு யானைகளைக் கட்ட 4 அங்குல கனத்துக்குச் சணலில் கெட்டியாகவும் உறுதியாகவும் கயிறு தயாரித்து வைத்திருப்பார்கள். பாகர்களை மேலே சுமந்தபடி குமுக்கி யானைகள் உள்ளே சுற்றி வந்து மெல்ல இரண்டொரு காட்டு யானைகளை உள்வேலி ஓரம் தள்ளிக்கொண்டு போகும்; அவற்றின் பின்பாகம் வேலியை ஒட்டியும் அவற்றின் முன்பாகம் வட்டத்தின் நடுப்பாகத்தைப் பார்ப்பது போலவும் நிறுத்திவிடும். பிறகு அக்கம் பக்கமும் சில 'குமுக்கி' யானைகள் நின்றுகொண்டு இந்தக் காட்டு யானைகளை நெருக்கும். இதனால் முன்னுக்கோ (பின்னுக்கோ) அக்கம் பக்கமோ நகரக்கூடக் காட்டு யானைகளால் முடியாது போய் விடுகிறது.

இப்படிப்பட்ட சமயம் பார்த்துக் கயிறு கட்டுவதில் தேர்ந்த ஆள் இந்தக் காட்டு யானைகளின் பின்னங்கால்களைக் கயிற்றால் கட்டிவிடுவான்; மறு நுனியை அடைப்புக்கு வெளியில் உறுதியாக நட்டிருக்கும் ஒரு கம்பத்தில், சற்றுக் கயிற்றைத் தளர்த்தியாக விட்டு முடிந்துவிடுவான். பிறகு இந்த மாதிரி பின்னங்காலில் கட்டிய யானையின் எதிரே ஒரு பெரிய சுருக்கைத் தயாராகத் தொங்க விட்டபடி காத்திருப்பார்கள். யானை பின்னங்காலைத் திமிறிக் கொண்டு தப்பப் பார்க்கும்போது துதிக்கையைத் தூக்கும். உடனே சுருக்கைத் துதிக்கையில் விட்டுக் கப்பென்று கயிற்றை இழுப்பான் பாகன். யானை சற்று முரடாக இருந்தால் கழுத்தில் பின்னும் இரண்டு மூன்று கயிறுகளைப் போட்டுக் கட்டி வழிக்குக் கொண்டு வருவார்கள்; முன்னங் கால்களிலும் இதே மாதிரி கயிறு கட்டிவிடுவார்கள். சும்மா வாயால் இதையெல்லாம் சொல்லிவிடலாம்; ஆனால் இப்படிச் செய்யும்போது எவ்வளவு அபாயத்தைச் சமாளிக்க வேண்டியிருக்கும் தெரியுமா? ஒவ்வொரு யானையையும் இப்படி வழிக்குக் கொண்டுவரக் கிட்டத் தட்ட இரண்டு அல்லது மூன்று மணி நேரமாகும் என்றால் பாருங்கள்! மற்றக் 'குமுக்கி' யானைகளும் பிற காட்டு யானைகளைக் கட்டிப் போடுவதற்கு அங்கங்கே இருப்பவர்களுக்குத் துணையாக இருக்கும்.

அப்புறம் யானைகளை வெளியே அழைத்து வருவார்கள். பின்னால் தூண்களோடு சேர்த்துக் கட்டியிருக்கும் கயிற்றை அவிழ்த்து, கூடவே வரும் 'குமுக்கி' யானையின் வயிற்றில் கட்டி, அதுவும் கட்டுண்ட காட்டு யானையும் இடிபடாமல் தாராளமாக நடப்பதற்கு வசதியாகக் கயிற்றைத் தளர்த்திவிடுவார்கள். இப்படிச் செய்யும்போது நின்று நிதானமாகவும் முறையாகவும் செய்வார்கள். இவை எல்லாம் முடிந்ததும் அடைப்பின் வாசல்களைத் திறந்துவிடுவார்கள்; இந்த வாசல் கதவுகளை மனிதர்களால் தூக்க

முடியாது. ஆகவே, பழக்கிய பெரிய ஆண் யானையை ஏவுவார்கள். அது கதவைத் தூக்கி நிறுத்தியதும் பிடிபட்ட யானைகள் சிறிது சிறிதாக நகர்ந்து அடைப்புக்குள்ளிருந்து வெளியேறும். இப்படியே அவைகளை அருகிலுள்ள ஆற்றுக்கு அழைத்துப் போய் நீர் காட்டுவார்கள். இதுவரையில் தப்பிப் போக முயன்று அது கைகூடாததால் களைத்துப் போய் வயிறுர அவை நீர் குடிக்கும். பிறகு அவைகளைப் புதர் இல்லாமல் பெரிய மரங்கள்மட்டும் இருக்கும் பரந்த இடமாகப் பார்த்து அழைத்துப் போவார்கள். கயிற்றையெல்லாம் சிக்கில்லாமல் வெகு சாமர்த்தியமாக ஒன்று சேர்த்துக்கொண்டு பிடிபட்ட யானைகளின் பின்னங்கால்களை மரத்தோடு மரமாகச் சேர்த்துக் கட்டிவிடுவார்கள். கழுத்துக் கயிற்றையும் முன்கால் கயிற்றையும் யானைக்கு முந்தியுள்ள மரத்தில் கட்டிவிடுவார்கள். இதனால் யானைகள் முன்னுக்கோ பின்னுக்கோ நகர முடியாது. பிடிபட்ட எல்லா யானைகளையும் இப்படியே கட்டி முடிப்பார்கள். இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் இந்த யானைகள் தப்பித்துக் கொள்ள வேண்டிச் செய்யும் ஆட்டத்தையெல்லாம் பார்க்க வேண்டும்; வெகு தமாஷாக இருக்கும்! ஆனால் இந்த முயற்சியெல்லாம் வீண் என்று தெரிந்ததும் அவை அடங்கி ஒடுங்கிப் பாகர்கள் இட்ட கட்டளைக்கு நன்றியுள்ள நாய்போல் பணிந்து நடக்கின்றன.

'குமுக்கி' என்ற பழக்கிய யானைகளைத்தான் முக்கியமாகப் பாராட்ட வேண்டும்; கடுமையாக உழைத்து எஜமானர்களிடம் மிகவும் பற்றுதலோடு வாழ்கின்றன. அவர்கள் இட்ட வேலையைத் தவறுமல் செய்து, காட்டு யானைகளை வழிக்குக் கொண்டு வருகின்றன. மறுபடியும் காட்டு யானைகளோடு சேர்ந்துகொண்டு எஜமானர்களை எதிர்க்கும் தன்மையே இவைகளுக்கு இல்லை. இவைகளை நன்ருகப் பழக்காமல் இருந்து, காட்டு யானைகளோடு இவை சேர்ந்து கொண்டுவிடுமானல் யானைகளைப் பிடிப்பதே சாத்தியமாக இராது.

கந்தல்மீது காதல்

கணவன்: இதோ பார், அந்தப் பழம் போர்வை என்ன கந்தலாயிருந்தாலும், அதை நான் விட மாட்டேன். அது எங்கே போயிருந்தாலும் சரி; நானும் அங்கே போய்ச் சேர்வேன்.

மனைவி: தாராளமாய்ப் போய்ச் சேருங்கள். ஆனல், போனதும் மூடியை மூடிக்கொள்ள மறக்க வேண்டாம். போர்வை குப்பைத் தொட்டிக்குள் போய்ச் சேர்ந்திருக்கிறது.

கொடுத்ததெல்லாம் வாபஸ்

மனைவி: (ஒரு சண்டை முடிவில்) நீங்கள் எனக்குக் கொடுத்ததை யெல்லாம் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்.

கணவன்: முத்தங்களில் ஆரம்பி.

இருவரும் சமாதானம் ஆகிவிட்டார்கள்.

—'தி இங்கிலீஷ் டைஜெஸ்ட்'

இலக்கிய எதிரியான 'வெள்ளை எறும்பு'
என்ற சொல்லின் ஆற்றல் வியப்புக்குரியது.

கறையான்

மாயவரம் எஸ். மகாலிங்கம்

அர்த்தம் இல்லாத, பொருத்தம் இல்லாத, சம்பந்தமே இல்லாத பெயர்கள் அமைவதை நாம் அன்றாட வாழ்க்கையில் கண் கூடாகப் பார்க்கிறோம். சிவப்பு இந்தியர்கள் சிவப்பு நிறமாக இல்லை; அவர்கள் இந்தியர்களும் அல்ல. அதேபோல்தான், வெள்ளை எறும்பு என்பதும். அது வெள்ளையும் இல்லை; எறும்பும் இல்லை. வெள்ளை எறும்புக்கு வேறு பெயர்கள் கறையான், சிதல், செல். எறும்புக்கும், கறையானுக்கும் கொஞ்சங்கூடச் சம்பந்தம் கிடையாது. நிறம், அளவு, உருவம் இவற்றில் இவை இரண்டும் வெவ்வேறு வகுப்புகளைச் சேர்ந்தவை. கறையான், தட்டாரப் பூச்சி வகுப்பை சேர்ந்தது. எறும்போ, தேனீ, குளவி இவற்றின் வகுப்பைச் சேர்ந்தது. எறும்புக்குக் குறுகியதும் நெகிழ்ந்ததுமான ஊசி போன்ற இடை உண்டு; கறையானுக்குக் கிடையாது. எறும்பின் வாழ்க்கைச் சரித்திரத்தில் முட்டைப் பருவம், புழுப் பருவம், கூட்டுப் புழுப் பருவம், முதிர்ச்சி அடைந்த பூச்சிப் பருவம் ஆகிய தனித் தனியான முற்றும் மாறுபட்ட நான்கு பருவங்கள் உண்டு. கறையானின் வாழ்க்கைச் சரித்திரத்தில் நான்கு பருவங்கள் இல்லை. முட்டைகள் உடைந்தவுடன், கறையான் குஞ்சாக வெளிவருகிறது. இவ்வளவு வித்தியாசங்கள் வெளிப்படையாக இருந்தாலும், கறையான் எறும்பைப் போல் சுறுசுறுப்புள்ளது; கூட்டங்கூட்டமாக, ஒற்றுமையாக, ஒன்றுக்கு ஒன்று உதவி செய்துகொண்டு, சுமுகமாக வாழும் சமூக உணர்ச்சி கொண்ட பூச்சி. எறும்பில் இருப்பதைப் போலவே கறையானிலும் ஆண் (ராஜா), பெண் (ராணி), வேலையாள் என்ற மூன்று முக்கியமான பிரிவுகள் இருக்கின்றன. வேலையாளில் தாதி, போர் வீரன் என்ற இரண்டு வகுப்புகள் உண்டு. ஒவ்வொரு பிரிவுக்கும் வகுப்புக்கும் தனித் தனி வேலைகள். வேலையாள் அன்றாட வேலைகளையும் வீடு கட்டுவதையும் கவனிக்கும். தாதி மற்ற எறும்புகளுக்கு ஆகாரத்தைக் கொடுத்துப் போஷிக்கும். போர் வீரர் புற்றை எதிரிகளிடமிருந்து ஆபத்து வராமல் பாதுகாப்பவை. ராஜா, ராணிகளுக்கு இறக்கைகள் உண்டு. வேலையாளுக்கு இறக்கைகள் இல்லை. வேலையாள் அரை அங்குல நீளம் இருக்கும். ராஜாவும், ராணியும் வேலையாளைவிடப் பெரியவையாக இருக்கின்றன. அவற்றுக்குக் கண்களும் உண்டு. தாதியும் வேலையாளும் போர் வீரரும் கண் இல்லாதவை. அவை உணர்ச்சிக் குழாய்களின் உதவியைக் கொண்டும், தொட்டு அறிவதனாலும், மோப்பத்தினாலும் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குச் செல்கின்றன. வேலையாளுக்குப் பலம் பொருந்திய உருண்டையான பெரிய தாடைகள் உண்டு. கறையானுடைய உடல் மிருதுவானது. கரப்பான் பூச்சிபோல் அரிப்பதற்கு ஏற்றவிதம் கறையானுக்குப் பல் உண்டு. சதா அரித்துக் கொண்டேயிருக்கும். இதனால் தான், தேவையற்று அறுபது நாழிகையும் தொந்தரவு செய்பவனைச் 'செல் போல் அரிக்கிறான்' என்று சொல்கிறோம்.

கறையான்கள் உஷ்ணப் பிரதேசங்களிலும், தென் அமெரிக்காவிலும், ஆப்பிரிக்காவிலும் அதிகமாகத் தென்படுகின்றன. தென்னிந்தியாவில் ஏறக்குறைய 40 இனக் கறையான்கள் உண்டு. அவற்றில் சுமார் 16 இனங்கள் மிகவும் அரிதாகவே தென்படுகின்றன. கறையான்

காப்பிரைட்: அமுதசுரபி (தமிழ்: செப்டம்பர் '56), சென்னை-1.



வீட்டை அல்லது அது வசிக்கும் காலனியைத்தான் கறையான் புற்று (Termitary or Termitarium) என்று சொல்கிறோம். புற்றுக்கள் பூமிக்கு அடியிலும் இருக்கலாம்; பெரிய மரங்களின் உலர்ந்த உபயோகமற்ற உச்சாணிக் கிளைகளிலும் இருக்கலாம்; மரத்தைச் சுற்றி ஒரு கவசம் போலவும் இருக்கலாம். மரத்தின்மீது புற்றுக் கட்டினாலுங் கூட, பூமிக்கு அடியில்தான் கறையான்கள் வாழும். வீட்டுக்கு அருகில் வாழும் கறையான், பெரிய புற்று எழுப்புவதில்லை. என்றாலும், அதன் புற்று எங்கும் அறுத்துச் சென்றிருக்கும்; ஒரு தெருவில் உள்ள வீட்டிலிருந்து மறு தெருவில் உள்ள பல வீடுகளுக்குக்கூட ஓடியிருக்கும். கறையான்களுக்கு வெளிச்சத்தைக் கண்டால் பிடிக்காது. மரக் கிளைகளிலிருந்து குழாய்கள் போலவும், குளவிக் கூடுகள் போலவும் தோரணங்கள் கட்டின மாதிரி புற்றுக்கள் தொங்குவதைப் பார்க்கலாம். பட்டைகளுக்குள்ளோ மரத்தண்டுகளுக்குள்ளோ சில சமயம் புற்று அமைந்திருக்கும். பல ஜாதிக் கறையான்கள் சேர்ந்து கட்டிய கூட்டுப் புற்றும் உண்டு. புற்றில் அநேக அறைகள், அடுக்குகள், அலமாரிகள், தட்டுகள், ராஜா - ராணிகள் இருக்கும் அரண்மனைகள், குஞ்சுகள் இருக்கும் இடங்கள், உணவுக் களஞ்சியங்கள், புற்றுக் கட்ட வேண்டிய சாமான்களும் பிசின்களும் உள்ள அறைகள், கீழிருந்து உச்சிவரை வளைந்து வளைந்து செல்லும் மாடிப் படிகள், அங்கங்கே தங்கிச் சிரம பரிகாரம் செய்து கொள்ளும் இடங்கள் எல்லாம் அழகான முறையில் விஞ்ஞான ரீதியில் சிக்கனமாகவும் அதே சமயத்தில் மிக உபயோகமாகவும் அமைந்திருக்கின்றன. பூமிக்கு அடியில் சுரங்க வழிகளும் பிறர் கண்ணில் படாத விதம் அமைந்த சாலைகளும் இருக்கின்றன.

கறையான்கள் ஆரம்ப காலத்தில் சிறு எறும்பைப் போல் இருக்கின்றன. பிறகு தகுந்த வயசு வந்தவுடன், மாரிக் காலத்தில், பெண்களுக்கும் ஆண்களுக்கும் இறக்கைகள் உண்டாகின்றன. அப்போதுதான் அவற்றுக்கு 'ஈசல்' என்று பெயர். ஈயல் என்றும் சொல்லுவார்கள். ஈசல்கள் வீட்டுக்குள் வருவது வீட்டின் அடியிலோ அருகிலோ கறையான் புற்று இருப்பதைக் காட்டும். ஈசல்கள் தங்கள் சந்ததியை விருத்தி செய்து, உலகத்தின் பல இடங்களிலும் பரப்ப, கூட்டங் கூட்டமாக ஆயிரக்கணக்கில் பறந்து செல்லுகின்றன. ஒரு பெண்ணும், ஓர் ஆணுமாகச் சேர்ந்த ஜோடியாகவே ஈசல் செல்கிறது. காற்று ஈரமாக இருக்கும்பொழுது இவை பொதபொதவென்று புற்றுக்களிலிருந்து புறப்படும். இரவில் விளக்கு வெளிச்சத்தால் இழுக்கப்படும். வீட்டுக்குள்ளே பறந்து வந்து சுடர் வெளிச்சத்தில் மோதும். ஈசல் கடிக்காது; உணவு உட்கொள்ளாது. பெண்ணைத் தொடர்ந்து ஆண் பறக்கும், பள்ளத்தில் இரண்டும் மறையும். இறக்கையைத் தானே உதிர்த்துவிடும். சில ஜோடிகள் மட்டுமே முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. வழியிலே பல ஜந்துக்கள் அந்த ஈசல்களைத் தின்பதற்காகக் காத்துக்கொண்டிருக்கும். மனிதர்களும் ஈசலைப் பிடித்துத் தின்கிறார்கள். இதற்கெல்லாம் தப்பிப் பிழைக்கும் ஈசல்கள் தகுந்த இடத்தில் தங்கி

உயிர் வாழுமானல், அவை 'தாய்ப் பூச்சி'களாக மாறுகின்றன. வேலையாளைவிட ஈசல் நான்கு பங்கு பெரிதாகவும், அதைவிடத் தாய்ப் பூச்சி முந்நூறு பங்கு பெரிதாகவும் இருக்கும். தாய்ப் பூச்சிக்கு இடுப்புக்குக் கீழ்ப்பட்ட வால் புறத்திலேயே (அதாவது வயிற்றுப் பாகம்) வளர்ச்சி அதிகமாய் இருக்கிறது. தாய்ப் பூச்சிக்கு வால் வளர்கிறது. ஆனல், தலையும் மார்பும் வாலுக்குத் தக்கபடி வளர்வதில்லை. தாய்ப் பூச்சி புற்றின் அடிப் பாகத்தில் வெகு பந்தோபஸ்தான இடத்தில் தங்கி இருந்துகொண்டு, உண்பதும் உறங்குவதும், சந்ததி விருத்தி செய்வதுமா யிருக்கிறது. கருவடைந்த தாய்ப் பூச்சியின் வயிறு இரண்டு அல்லது மூன்று அங்குலம் நீண்டு உப்பியிருக்கும். அடிப்பாகம் சற்று வெளுத்தும் மேல் பாகம் பழுப்பு நிறமாகவும் இருக்கும். இந்த மாதிரி இருக்கும் மனிதர்களைக் குறித்துப் பேசுகையில் இவர்கள் ஒரு 'புற்றுப் பூச்சி' என்று சுட்டிப் பேசுவது வழக்கம். தாய்ப் பூச்சி நாள் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கில், மாதந் தவருது முட்டையிட்டுக் கொண்டே யிருக்கும். விநாடிக்கு ஒரு முட்டை வீதம், மெஷின் வேலை செய்வதுபோல், வெளிவந்து கொண் டிருக்கும் என்ருல் அந்த விநோதத்தை என்ன என்று கூறுவது! நாளொன்றுக்குச் சுமார் 36,000 முட்டைகளாவது குறைந்த பட்சம் இடும். சில சமயங்களில் 80 ஆயிரம் முட்டைகளுக்கு மேல் இடுகிறதென்றும் தெரிகிறது. முட்டையிடும் ஜந்துக்களில் வேறு எதுவும் இவ்வளவு அதிக விருத்தி உடையதாய்த் தென்படவில்லை. இதனலேயே அதிகக் குழந்தை குட்டிகள் உள்ளவர்களைப் 'புற்றீசல் போலப் புதல்வர்களைப் பெறுபவர்கள்' என்று குறிப்பிடுகிருர்கள். தாய்ப் பூச்சியைக் காகம், மைன இவை பெரிதும் விரும்பித் தின்கின்றன. வௌவால்களும், பல்லிகளுங்கூட அதைப் பிடித்துத் தின்னும். பாம்புகளும் அதைத் தின்னப் பிரியப்படுவதால், அவை கறையான் புற்றுக்கு வரும். இதனல்தான் பாம்புகள் புற்றில் வசிப்பதாக நமக்குத் தோன்றுகிறது. மேலும், பாம்புப் புற்றுக்குப் பால் ஊற்றிப் படைப்பதாக நினைத்துக் கறையான் புற்றில் பாலையும் ஊற்றி அபிஷேகமும் அர்ச்சனையும் செய்துவிடுகிறோம்!

தாய்ப் பூச்சியின் உடலிலிருந்து வரும் முட்டைகள் முழு உருமாற்றம் அடைவதில்லை. முட்டைகள் கறையான் குஞ்சுகளாக மாறுகின்றன. ராணி, ராஜாவாக மாறப் போகும் குஞ்சகளுக்கு ஆரம்ப காலத்தில் இறக்கைகள் முளைப்பதில்லை. வயசான பிறகு முளைக்கும்; ஆனல் கண்கள் உண்டு. மற்றக் குஞ்சுகளுக்குக் கண்கள் இருப்பதில்லை. முட்டைகளிலிருந்து வரும் குஞ்சுகளைத் தாதிகள் போஷிக்கும். அவற்றுக்கு மரத்தை உமிழ் நீரோடு கலந்து உணவாகக் கொடுக்கும். ஆகாரத்தைக் கொடுக்கும் அளவினலும், போஷிக்கும் விதத்தினலும், தக்க சூழ்நிலைகளை ஏற்படுத்துவதனலும் குஞ்சுகளைத் தாதியாகவோ வேலையாளாகவோ ராஜாவாகவோ ராணியாகவோ மாற்றக்கூடிய அபூர்வ சக்தியும் அபாரமான சாமர்த்தியமும் நுண்ணிய அறிவும் தாதிகளுக்கு உண்டு. தாய்ப் பூச்சிக்குக் கொடுக்கும் ஆகாரப் பொருள் ரொட்டியைப் போல நிறமும் அமைப்பும் உடையது. இதற்குப் 'புற்ருஞ் சோறு' என்று பெயர். இந்த ஆகாரத்தில் தாய்ப் பூச்சிகள் தின்றது போக மிகுந்ததைக் கறையான் குஞ்சுகள் தின்று விருத்தி அடைகின்றன. இந்தப் புற்ருஞ் சோற்றை மீன்கள் மிக விரும்பித் தின்கின்றன.

புற்று மண்ணினலும் மரத்தினலும் அமைந்திருக்கும். புற்றுக்கு வேண்டிய மண் மிகவும் மென்மையாக இருக்கவேண்டும். மென்மையாக்குவதற்காகக் கறையான்கள் மண்ணைத் தங்கள் வாயில் போட்டு மென்று, ஒரு திரவத்தினல் பசை போல் செய்யும். இல்லாவிட்டால் பூமியிலிருந்து அரித்து எடுக்கும் மண், கறையானின் குடல் வழியாக ஒரு தரம் போய் வந்தால், பதப்பட்டு மென்மையாகிவிடும். இதைத் தவிர ஈரப் பசை வேண்டும். அதற்காக அதிக அளவில்

கறையான் உமிழ்நீரை உண்டாக்கும்.

கறையான் அரித்திருக்கும் சாமான்கள் 'ஜில்' என்று தண்ணீரில் நனைந்ததுபோல் இருக்கும். காரணம் உமிழ் நீர்தான். மரத்தையும் மென்று, ஈர மண்ணோடு சேர்த்து, 'சிமெண்ட்' மாதிரி குழைத்துவிடும். மரம் இல்லாவிட்டால், மண்ணைக் கொண்டு மாத்திரமே புற்றை எழுப்பிவிடும். புற்று 3 அடியிலிருந்து 12 அடி வரைக்கும் உயரம் இருக்கும். அடிப்பாகத்தின் கனம் சுமார் 2 அடி இருக்கும். மேலே போகப் போகக் கூர்மையாக இருக்கும். கூர்மையான பாகத்தில் அநேக துவாரம் சிறிதும் பெரிதுமாக இருக்கும். அகலத்தைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. அந்த அந்த இடத்துக்குத் தகுந்தாற் போல் அது வித்தியாசப்படும். கல் மாதிரி கெட்டியாகவும் நீண்ட நாள் உழைக்கும்படியாகவும் புற்று இருக்கும். அது மழைக்கும் காற்றுக்கும் அசைந்து கொடுக்காது. ஒரு மனிதனின் பாரத்தைச் சுலபமாகத் தாங்கும். புற்றைப் பார்த்தால், அகழ் எலி தோண்டி எடுத்த மண் குவியல் மாதிரி இருக்கும். கறையான் புற்றுக்களில் மிகப் பெரிய புற்றுக்கள் ஆப்பிரிக்காக் கண்டத்தின் மேற்குப் பாகத்தில் உள்ள 'செனிகால்' என்ற ஊரை அடுத்த பிரதேசத்தில் மைல் கணக்காகப் பரவிய அளவில் இருக்கின்றன. அந்தப் புற்றுக்கள் பெரிய கூரை வீடுகளைப்போல வரிசை வரிசையாக இருக்கின்றன. தூரத்திலிருந்து பார்க்கும் பிரயாணிகள் 'அது ஒரு கிராமம்' என்று எண்ணி அங்கே சென்று பார்த்துப் பல தடவை ஏமாந்து போயிருக்கிறார்கள். இந்தியானாவில் 'ஸோமர் செட்' என்னும் இடத்தில் பெரிய புற்றுக்கள் இருக்கின்றன. காட்சிக்கு இதுவும் சிறந்த இடமாயிருக்கிறது. பெரிய புற்றுக்களை எழுப்புவதற்கு அநேகம் கோடி கறையான்கள் சேர்ந்து உழைக்க வேண்டும். ஆகையால்தான் தாய்ப் பூச்சி நாளொன்றுக்குப் பல ஆயிரக் கணக்கான முட்டைகளை இடுகிறது. ஆஸ்திரேலியாவில் 'காம்பஸ் எறும்புகள்' என்ற ஒரு வகையான கறையான்கள் இருக்கின்றன. இவை கட்டும் புற்றுக்கள் 10 அடி முதல் 20 அடி உயரம் வரையில் இருக்கும்; இரண்டு முதல் மூன்று அடிவரையில் அகலமாக இருக்கும். குறுக்கு வெட்டில் முக்கோண வடிவத்தில் இருக்கும். அந்தப் புற்றுக்களில் ஒரு விசேஷம் என்னவென்றால், புற்றுக்களின் நீண்ட பாகம் தெற்கு வடக்கில் நேராக அமைந்திருக்கிறது. இந்த எறும்புகள் கட்டும் எல்லாப் புற்றுக்களும் இந்த மாதிரியே இருக்கின்றன. பூமியின் காந்தசக்தி துருவ மண்டலத்தை நாடி நிற்பது போல இந்த எறும்புகளின் புற்றுக்களும் நேர்த் தெற்கு வடக்காக நீண்டிருப்பதால், இந்த எறும்புகளுக்கு அந்த நாட்டினர் 'காந்த எறும்பு', 'காம்பஸ் அல்லது மெரிடியன் எறும்பு' என்று பெயரிட்டிருக்கிறார்கள். இந்த எறும்புகள் எந்தக் காரணத்தினால் தங்கள் புற்றுக்களை இப்படி எழுப்புகின்றன என்று இன்னும் எவராலும் அறிந்து கொள்ள முடியவில்லை.

புற்று எழுப்பிக் கட்டும் கறையான்களின் அபார வேலையையும் சக்தியையும் ஒரு விஞ்ஞானி இந்த மாதிரி கணக்கிட்டார்; ''16 அடி உயரம் உள்ள புற்றை ஓர் அங்குலத்தில் ஐந்தில் ஒரு பங்கு நீளமுள்ள கறையான் கட்டும். ஒரு மனிதனின் சராசரி உயரத்தைக் காட்டிலும் பாரிஸில் உள்ள ஈஃபெல் டவர் 187 மடங்குதான் உயரமாக இருக்கிறது. ஆனால் ஒரு கறையானின் உயரத்தைப் போல ஒரு புற்று 1000 மடங்கு உயரம் இருக்கிறது. கறையானுடைய உயரத்தையும், அது கட்டும் புற்றின் உயரத்தையும் கணக்கிட்டுப் பார்க்கும்பொழுது, 5¼ அடி உயரமுள்ள மனிதன் 1000 அடி உள்ள ஈஃபல் டவரைக் கட்டியது அதிசயமல்ல என்றே தோன்றுகிறது. கறையானுடன் போட்டி போட வேண்டுமானால், ஈஃபல் டவரை 5000 அடி உயரமாவது மனிதன் கட்டியிருக்கவேண்டும்.

ஒரு மரத்தில் கறையான் புற்று வைத்து அதைக் கூடாகச் செய்யப் பல ராத்தல் எடையுள்ள மண்ணைப் பூமியிலிருந்து மரத்தின் உச்சிக்குக் கொண்டு போக வேண்டும். மண்ணை மரத்தின் உச்சிக்குக் கறையான் தூளாகவே எடுத்துச் செல்கிறது. கறையான்கள் நிலத்தின் அடியில் உள்ள மண்ணை மேலே கொண்டு வந்து தாம் அறியாமலே நிலத்தை வளம் அடையச் செய்கின்றன; உபயோக மற்ற மரங்களின் கிளைகளைத் தின்று விடுகின்றன. நன்மைகளை மட்டும் செய்தால் நாடு புகழுமே! ஆனால் தீமைகளையும் செய்கின்றன. ஜனங்களுக்கு மிகுந்த நஷ்டத்தை விளைவிக்கின்றன. பிறருக்குத் தெரியாமல் அவை சுவரின் அடியிலிருந்து வீட்டின் உச்சி மேட்டின் மேல் ஏறிவிடும். பிறர் வந்து பார்ப்பதற்குள்ளாக, குறுகிய காலத்தில் மரத்தையும் விலை உயர்ந்த பொருள்களையும் அரித்துத் தின்று விடும். இதனால் சில சமயம் வீட்டுக் கூரையே தாழ்ந்து போவதும் உண்டு. கறையான்கள் உலகில் மனிதனுக்கு ஒவ்வொரு நாளும் செய்து வரும் பெருங் கொடுமை பிரசித்தம். இதைக் குறித்தே 'சிதலைக்கில்லை செல்வமும் செருக்கும்' என்று குறிப்பிடுகிறார்கள். கறையான் புற்றைப் பார்த்தாலே ஓர் அருவருப்பும் பயமும் நமக்கு ஏற்படுகின்றன. துணி மணிகள், புஸ்தகங்கள், படங்கள், மரங்கள், மரத்தினால் செய்த நாற்காலி, மேஜை, கட்டில்கள், தூண்கள், உத்திரங்கள், குறுக்குச் சட்டங்கள் எல்லாவற்றையுமே இந்தக் கறையான்கள் பதம் பார்த்துவிடும். ஆப்பிரிக்காவில் பல இடங்களில் மரக் கால்கள் உள்ள கட்டிலில் ஒரு மனிதன் இரவு வேளையில் படுத்துக் கொண்டால், விடிவதற்குள் கட்டில் கால்களைக் கறையான்கள் அரித்து, மரத் தூளாக்கி விடும். கட்டில் நொறுங்கி, கட்டிலின் மீது படுத்திருப்பவன், பூமியின்மீது 'டபார்' என்று விழுவது சகஜம்.

கறையான்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள ஜனங்கள் எத்தனையோ முறைகளைக் கையாளுகிறார்கள். தேக்கு, சால் முதலிய மரங்களில் சாமான்கள் செய்வதால், அவற்றில் உள்ள ஒரு வித எண்ணெயைச் சகிக்காமல் கறையான் அவற்றை நெருங்காது. இரும்புத் தந்திக் கம்பங்களை உபயோகிப்பதும் கறையான் பிடிக்காமல் இருக்கத்தான். உலர்ந்த இடங்களும், நல்ல சூரிய வெளிச்சமும், நல்ல ஜாதி எறும்புகளும், பறவைகளும், சில மிருகங்களும் கறையான்களுக்குப் பரம விரோதிகள். கறையானை ஒழிக்க வேண்டுமானால், வீட்டில் உள்ள பொந்துகளில் புகையைச் செலுத்த வேண்டும். சுவர்களுக்குத் தார் அடிப்பதும், மரச் சாமான்களுக்கு வார்னிஷ் கொடுப்பதும், புற்றின் மீது மண்ணெண்ணெயைத் தெளிப்பதும் இதே காரணத்துக்காகத்தான். இதைவிடச் சிறந்த வழி, புற்றில் உள்ள வயிறு உப்பிய 'தாய்ப் பூச்சி'யைக் கண்டு பிடித்துக் கொல்வதுதான்.

நாணயமாய் உழைத்தால் -

நாணயமாய்த் தினம் ஒன்றுக்கு எட்டு மணி நேரம் நீர் உழைத்து வந்தீரானால், காலக் கிரமத்தில் ஒரு முதலாளியாகிவிடுவீர்; அப்புறம் நாள் ஒன்றுக்குப் பன்னிரண்டு மணி நேரத்துக்குமேல் நீர் உழைக்க வேண்டிய தேவையே இராது.

—ராபர்ட் ஃப்ராஸ்ட்

தூக்கணங்குருவி

டி.வி.ரங்கஸ்வாமி

> மனை கட்டும் சாஸ்திரமா, காதற் கலையா இந்த இரண்டிலும் இந்தக் குருவியிடம் மனிதனே தோற்கவேண்டியதுதான்!

உலகத்தில் ஆண்டவன் படைத்துள்ள ஜீவாராசிகள் கணக்கில் அடங்க மாட்டா. அவை எத்தனையோ விதங்கள். ஒவ்வொரு ஜீவனுக்கும் ஒவ்வொரு விதமான அற்புத குணத்தை ஆண்டவன் தந்திருக்கிறான். நாம் ஆராய்ந்தோமானால், எறும்புகளிடமுள்ள சுறுசுறுப்பு, காக்கைகளிடமுள்ள ஒற்றுமை, நல்ல பாம்பிடமுள்ள விசால மனப்பான்மை, சிங்கத்தின் பொறுமை இப்படிப் பல குணங்களை நாம் அறியலாம். விலங்கு இனத்தைவிட, பறவை இனத்திலிருந்து நாம் அறிய வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன.

தூங்கணங் குருவியை நாம் சகஜமாகப் பார்த்திருக்கிறோம். இது கிராமங்களில் விசேஷமாகத் தென்னந்தோப்பு, கள்ளி, இலந்தை மரம் இவற்றில் அற்புதமான கூடு கட்டி வசிக்கிறது. இந்தப் பறவை, உருவத்தில் சிறியதுதான். 'மூர்த்தி சிறியது; ஆனால் கீர்த்தி பெரியது' என்ற பழமொழிப்படி மிகவும் புத்திக் கூர்மை வாய்ந்தது. இது பார்வைக்கு வெளுப்பான சாம்பல் நிறமாயிருக்கும். கழுத்து மஞ்சள் நிறம். கால்கள் மெல்லியவை. நகங்களுடன் கூடிய சிறு சிறு விரல்களும் இருக்கின்றன. வால் பாகம் சிறு துடுப்புப் போல் அமைந்திருக்கிறது. அதில் சிறகுகள் சற்று அடர்த்தியாக இருக்கின்றன.

இது நெல், சோளம் போன்ற நவதானியங்களையும், செடி கொடிகளிலுள்ள சிறு சிறு பூச்சிகளையும் தின்று ஜீவிக்கிறது. எட்டுக்கால் பூச்சியையும், சிறு பாச்சை, கரப்பான் போன்ற பூச்சிகளையும் தூக்கணங் குருவி மிக விருப்பத்துடன் உண்ணும். ஊறிய நிலக்கடலை, வேப்பங் கொட்டை இவற்றைத் தன் அலகால் உடைத்துத் தின்னும்.

ஆண் தூக்கணங் குருவி உருவத்தில் சற்றுப் பெரிதாகவும், கழுத்திலும் அலகின் கீழும் கறுப்பாகவும் இருக்கிறது. பெண் பறவை சற்றுச் சிறிதாயிருக்கும். அது கத்தும் குரலோசை, ஆண் பறவையின் குரலைவிட மெல்லிய கீச்சுக் குரலாக நீண்டிருக்கும். ஆண், பெண் இரண்டுமாகத் தங்கள் கூட்டைக் கட்டுகின்றன. இதன் கூட்டைப் போல் வேறு எந்தப் பறவையினாலும் கட்ட முடியாது. தூக்கணங் குருவியின் கூட்டில்தான் எவ்வளவு வேலைத் திறமை! ஆறறிவு படைத்த மனிதன் தன் கைகளால் நுண்மையான பல ஆயுதங்களைக் கொண்டு பல வருஷங்களாகக் கட்ட முயன்றாலும் முடியாத நேர்த்தியான ஒரு கூட்டை இந்தச் சிறு குருவி தன் சிறு அலகின் உதவியால் வெகு சீக்கிரத்தில் கட்டி முடிக்கிறது என்றால், மிக வியப்பாக இருக்கிறது. மெல்லிய சிறு சிறு நார்களைக் கொண்டு, மரக்கிளையில் ஆதாரப் பிடிப்புடன் கூட்டை இது கட்டுகிறது. குறவர்கள் கூடை பின்னும் முறையில் தூக்கணங் குருவி தன் கூட்டை நாருக்குள் நார் விட்டு இழுத்து மிக அழகாகக் கட்டுகிறது. முட்டைகள் கூட்டிலிருந்து வெளியே விழாமல் இருக்கத் தக்க விதம், கூடு பள்ளமாய் இருக்கும். தன் கூட்டுக்குள் வேறு இனப் பறவை நுழையாமல் இருக்க வாய்ப்புறத்தை மிகச் சிறிய துவாரத்துடன் நீண்ட அமைப்பாகக் கட்டும். முட்டையிலிருந்து வெடித்து வரும் குஞ்சுகள் தவறிக் கீழே விழாமலிருக்கவும் இந்த ஏற்பாடு பயன்படுகிறது.

காப்பிரைட்: சுதேசமித்திரன் (தமிழ்: 29-9-'56), சென்னை.

தூக்கணங் குருவியின் காதல் மிகவும் விசித்திரம். இங்கிலாந்தில் இதே இனத்தைச் சேர்ந்த ஒரு பறவை இருக்கிறது. அதன் பெயர் 'பவர் - பர்டு' என்பது. அதில் ஆண் பறவை தனக்குப் பெண் சேர்க்கை தேவைப்பட்டால், அது தன் கூட்டை மிகவும் சுத்தமாகவும் அலங்காரமாகவும் சிங்காரித்து, வாசனை மிகுந்த புஷ்பங்களைக் கொண்டு வந்து தன் கூட்டின் அருகே வைக்குமாம். வாசனையின் வாடையால் பெண் பறவை கூட்டின் அருகே வரும்போது, ஆண் பறவை இனிமையான கீதங்களைத் தன் மனம் போன போக்கில் பாடுமாம். இதில் மயங்கிய பெண், ஆணின் இச்சைக்கு அடிமையாகி அதனுடன் சேருமாம். இதைப்பற்றி இன்னும் விரிவாக வர்ணித்து மேல்நாட்டு ஆராய்ச்சியாளரான ஜான் வைன் என்பவர் 'ஜான் அவ் லண்டன் வீக்லி' என்ற பத்திரிகையிலும் ஜேம்ஸ் என்பவர் 'காரொனெட்' என்ற சஞ்சிகையிலும் எழுதியிருக்கிறார்கள். இதே முறையைத்தான் நம் நாட்டில் தூக்கணங் குருவியும் சற்றுக் கையாளுகிறது என்று சொல்லலாம். ஆண் தூக்கணங் குருவி தனக்குப் பெண் சேர்க்கை தேவைப் பட்டால், தன் கூட்டை விட்டு வெளியே வந்து மரக் கிளையில் உட்கார்ந்துகொண்டு மிக உரத்த குரலில் கத்தும். அந்த ஓசை, இதன் இயற்கையான குரலோசையைப் போல் இல்லாமல் மிக வித்தியாசமாயிருக்கும். அந்தக் குரலோசையைக் கேட்டதும் பெண் பறவை பதிலுக்குக் கத்திக்கொண்டே வந்து ஆணின் பக்கத்தில் உட்காரும். தன்னிடம் வரும் பெண் பறவைக்குத் தருவதற்காக ஆண் பறவை ஏதாவது ஆகாரத்தைத் தன் கால் இடுக்குகளில் வைத்திருக்கும். இதைக் கண்டதும், பெண் பறவை தன் அலகினுல் அதைக் கொத்தி எடுத்து உண்ணும். இந்தச் சமயத்தில் இரண்டும் உறவாடும்.

பெண் மூன்று மாத காலம் கருவுற்றிருக்கும். அந்தக் காலத்தில் ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து தங்கள் கூட்டைக் கட்டும், கூட்டுக்குள் பெண் முட்டை இட்டதும், ஆண் அதற்கு இரை தேடி வந்து கொடுக்கும். முட்டையிட்ட பதினைந்து நாள் வரையில் முட்டையை ஆணும் பெண்ணுமாக அடைகாக்கும். அடை காப்பதாலும், சூரிய வெப்பத்தாலும் முட்டை வெடித்துக் குஞ்சாக மாறும். குஞ்சு பார்வைக்கு மிகவும் சிறியதாக இருக்கும். குஞ்சுக்கு இரையாகத் தாய் தன்வாயிலிருந்து ஒரு திரவத்தை ஊட்டுகிறது. பின்பு சிறு சிறு பூச்சி புழுக்களைக் கொண்டு வந்து குஞ்சுக்கு வாயில் ஊட்டுகிறது. மூன்று நான்கு மாதங்களானதும், குஞ்சுக்கு இறகு கொஞ்சங் கொஞ்சமாக வலுவடைந்து வளர்ச்சி அடைகிறது.

தன் குஞ்சு பூர்ண வளர்ச்சி அடைந்ததை அறிந்ததும், குஞ்சைத் தாய்ப் பறவை தன் கூட்டை விட்டு வெளியே துரத்திவிடும். வளர்ச்சி அடைந்த குஞ்சு சில சமயம் தானுகவே வெளியேறிவிடும். தூக்கணங் குருவிக்குப் பல எதிரிகள் உண்டு. பருந்து, நாரை, குரங்கு இவை முக்கிய எதிரிகள். தன் இனத்தாருக்கு எதிரிகளால் ஏதாவது கெடுதி நேரிடுகிறது என்று அறிந்தால், தூக்கணங் குருவி கத்தித் தன் கூட்டத்துக் குருவிகளைக் கும்பல் சேர்த்துப் பகைவர்களை எதிர்க்கும் சக்தி கொண்டது. ஆகாரம் தேடச் செல்லும்போது கூடத் தூக்கணங் குருவிகள் கூட்டங் கூட்டமாகத்தான் செல்லுமே தவிர, தனித்துச் செல்லுவதில்லை. காலியான தூக்கணங் குருவிக் கூடுகளைக் கிராமங்களில் உழவர்கள், தங்கள் கால்நடைகளைத் தேய்த்துக் கழுவப் 'புருஷ்' போல உபயோகப்படுத்துகிறார்கள்.

குழந்தைக்குப் பதில்

அலாரம் கடிகாரம் என்பது குழந்தை இல்லாத தம்பதிகளை எழுப்பிவிடும் யந்திரம். —மெல் ஆல்லென்

உயிரோடு இருக்கிறோம்!

கீதா ஸானே

சமீபத்தில் பிஹார் எல்லையில் பயங்கரமான நிலக்கரிச் சுரங்க விபத்து நிகழ்ந்தது. அந்த விபத்தில் பதினொரு பேர் மிகவும் அருமையாக உயிர் தப்பினார்கள். இந்த வரலாற்றில் தொடர்புடையவர்களை நேரில் கண்டு, முழு விவரத்தையும் கூறும் கட்டுரை இது.

“உயிரோடு இருக்கிறோம்!”

இந்தக் குரல் சுரங்கத்தின் ஆழத்தில் ஆயிரத்திருநூறு அடி தொலைவிலிருந்து வந்தபோது அதை யாருமே நம்பவில்லை. சுரங்கம் முழுவதும் தண்ணீர் நிரம்பிப் பதினெட்டு நாள் ஆகியிருக்கும் பொழுது உணவும் நீருமின்றி அந்தத் தொழிலாளிகள் எப்படி உயிரோடு இருக்க முடியும்? ஆனால் அந்தச் சுரங்கத் தொழிலாளிகள் பதினெட்டு நாளும் யமனை எதிர்த்து வென்று வந்துவிட்டார்கள். இந்த அற்புதம் எப்படி நிகழ்ந்தது?

பாரத நாட்டில் இன்று ஏராளமான நிலக்கரி கிடைக்கும் சுரங்கம், பிஹார் எல்லையில் ராணிகஞ்சு, ஜரியாவில் இருக்கிறது. தாமோதர நதிக்கரையில் நூற்றுக்கணக்கான சதுர மைல்களுக்கு இந்தச் சுரங்கங்கள் பரவியிருக்கின்றன. பழங்காலத்தில் இவை ஏரிகளாக இருந்தன. தாமோதர நதி, தான் உதிக்கும் இடத்திலுள்ள அடர்ந்த காடுகளிலிருந்து மரங்களையும் தழைகளையும் வண்டலையும் கொண்டு வந்து இந்த ஏரிகளில் நிரப்பியது. நாளடைவில் அவை மட்கி மட்கி நிலக்கரியாயின. அதற்குப் பின்பு பூமிப் பரப்பில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. ஆதலால் இந்த நிலக்கரியின் மேல்மட்டம் ஒரே அளவாக இல்லை; சில இடங்களில் இறக்கமாகவும், சில இடங்களில் வளைந்தும், சில இடங்களில் எரிந்து நீறாகியும் இப்படி இந்த நிலக்கரியின் அடுக்குகள் பல வகையாக இருக்கின்றன. சில அடுக்குகள் பூமி மட்டத்துக்கு வந்திருக்கின்றன; சில, கதிரவனையே காணாமல் ஆழத்தில் மறைந்திருக்கின்றன. இந்த வட்டாரத்தில் எல்லாவற்றிலும் மிகுந்த ஆழமான சுரங்கம், தரைமட்டத்திலிருந்து 1200 அடி முதல் 1300 அடிவரையில் கீழே இருக்கிறது.

ஆதலால் இந்தச் சுரங்கங்களில் பூமிக்கு அடியில் மிகுந்த ஆழத்தில் வேலை செய்வது எவ்வளவோ ஆபத்தானது. தடுக்குகளும் சுவர்களும் இடிந்து விழுந்து பலர் மரிப்பதுண்டு. சில சுரங்கங்களில் நிலக்கரியிலிருந்து எரிவாயு வீசுவதுண்டு. சுரங்கம் ஆழத்தில் இருப்பதனால், அதிகமாகவோ குறைவாகவோ நீரூற்றுக்கள் இருக்கும். இந்த ஊற்றுக்கள் திடீரென்று வெள்ளமெடுத்துச் சுரங்கத்தை மூழ்க அடித்துவிடும்; உள்ளே வேலை செய்யும் தொழிலாளர் தப்புவது அரிது. எலிவளைபோல இருட்டாக இருக்கும் சுரங்கத்தில் எளிதில் வளைந்து செல்லும்படியாக மனித உடலின் அமைப்பு இல்லை. ஆதலால், நிலக்கரி எடுக்கும் தொழில் எளிதல்ல. வேறு இடத்தில் வேலை கிடைக்காதவர்களும், தேர்ச்சியற்றவர்களும், பயிர்த்தொழில் இல்லாதபோது பிழைப்பு வேண்டுகிறவர்களுமே இங்கே தொழிலாளர்களாகச் சேருகிறார்கள்.

காப்பிரைட்: கிர்லோஸ்கர் (மராட்டி: ஜனவரி '57), கிர்லோஸ்கர்வாடி, ஸாதாரா ஜில்லா.

ஏதாவது ஆபத்து நேர்ந்தால் இவர்கள் நடுங்கி இங்குமங்கும் ஓடுவார்கள். பெரும்பாலான விபத்துக்களில் காற்றின் நிலை மாறுவதனால் இவர்களின் கையிலுள்ள விளக்குப் பெருங்காற்றினால் அணைந்துவிடும். அதனாலும் பலர் உயிர் இழக்க நேரும்.

இந்தத் தொழிலாளிகளின் தற்காப்புக்கு இந்தியச் சர்க்கார் சுரங்கச் சட்டங்கள் ஏற்படுத்தியிருக்கிறது. தன்பாத்திலுள்ள சுரங்க அதிகாரிகள் அவ்வப்பொழுது இந்தச் சுரங்கங்களைப் பார்வையிடுகிறார்கள். ஆபத்தில் உதவுவதற்கு, குவேனி கவர்மெண்டு உதவிச் சங்கங்களும் இருக்கின்றன. இவை தொழிலாளிகளுக்குத் தேவையான பயிற்சியை அளிக்கின்றன.

நிலக்கரிச் சுரங்கத்தின அமைப்பு : ஒவ்வொரு சுரங்கத்திலும் நிலக்கரி மட்டத்துக்குப் போகும்படியாகக் குழிக்கிணறுகள் (Pits) தோண்டுகிறார்கள். நிலக்கரி பூமி மட்டத்துக்கு அருகில் இருந்தால் சரிவான படிகள் (inclines) ஏற்படுத்தியிருப்பார்கள். குழிக்கிணறு நிலக்கரி மட்டத்தை அணுகிய பிறகு, முக்கிய வழியொன்றை உண்டாக்குவார்கள். இந்த வழிக்குச் சம தூரத்தில், அரை வட்டமும் நீளமுமாகப் பத்துப் பதினைந்து அடி அகலமுள்ள குகைகளை வெட்டுவார்கள். இரண்டு குகைகளுக்கு நடுவில் எழுபத்தைந்து அடிமுதல் நூறு அடிவரையில் இடைவெளி இருக்கும். நடுவிலுள்ள நாற்கோணத்கில் இருக்கும் கரிக்குக் கம்பம் (Pillar) என்று பெயர்.

முக்கிய வழியில் தொட்டிகளை (ஒரு வகையான டிரா்லிகளை)ச் செலுத்தத் தண்டவாளங்களும், மேல்மட்டத்தைக் காப்பதற்காக இரும்புக் கட்டிடங்களும், மின்சாரக் கம்பிகளும், தொட்டிகளை இழுக்கும் எஃகுக் கயிறுகளும் - இப்படிப் பல பொருள்கள் சுரங்கத்துக்குள் இருக்கும். தொழிலாளிகள் இந்த வழிவரைக்கும் கரித் தொட்டிகளைத் தள்ளிக்கொண்டு வருவார்கள். பிறகு 'ஹாலேஜ் எஞ்சின்', அவற்றைக் குழிக்கிணற்றின் அடித்தலம் வரைக்கும் கொண்டுவரும். அங்கிருந்து ஒரு கூட்டினால் (ஒரு வகையான லிப்டினால்) அந்தத் தொட்டிகளைத் தரை மட்டத்துக்கு எடுத்துவருகிறார்கள். பெரும்பாலும் நிலக்கரிச் சுரங்கத்தின் அமைப்பு இப்படி இருக்கும். (படம் 1 பார்க்க.)

ராணிகஞ்சிலுள்ள 'படா தேமோ' என்ற சுரங்கத்தில், 1956-செப்டம்பர் 26-ஆம் தேதி, பயங்கரமான ஒரு விபத்து நிகழ்ந்தது. இந்தச் சுரங்கத்தின் அமைப்பை முதலில் கவனிப்போம். இதன் மேற்கில் டில்லி-கல்கத்தாச் சாலை போகிறது. அந்தச் சாலை, பூமி மட்டத்திலிருந்து ஐந்தாறடி உயரத்தில் இருக்கிறது. சுரங்கத்தின் ஆழத்திலுள்ள நிலக்கரியைத் தோண்டி எடுத்துக்கொண்டதனால், பல சதுர மைல்களுக்கு, ப-ப என்ற பெரும பள்ளங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சுரங்கத்தின் தென்புறத்தில் ஒரு வாய்க்கால் ஓடுகிறது. அக்கம் பக்கத்து நீரை இழுத்துச் செல்லும் சக்தி இதற்கு இல்லை. ஆதலால், அதிக மழை பொழிந்ததுமே, இது கரைகளை எதிர்த்துக்கொண்டு வழியும். எங்கும் ஒரே நீர்ப்பிரளயந்தான்! மேற்கேயுள்ள சாலை மிக உயரத்தில் இருப்பதனால் இந்த நீரை அணைபோலத் தடுக்கும். எனவே, சுரங்கப் பரப்பு முழுவதும் ஏரியாகக் காட்சி அளிக்கும். (படம் 2 பார்க்க.)

செப்டம்பர் மாதம் 22-ஆம் தேதியிலிருந்து 26-வரைக்கும் வங்காளத்திலும் பிஹாரிலும் ஓயாத பெருமழை பெய்தது. அந்த மழையில், 'படோ தேமோ'வில் இருந்த 'ப-ப' பள்ளங்களில் நீர் நிரம்பியதோடு, சாலைக்கு மேலும் வெள்ளம் பரவியது. இந்தச் சாலையில் மூன்றரை அடி ஆழத்துக்கு வெள்ளம் ஏறியது. இந்த வெள்ளத்தின் பயனாக, முந்தியே சிறு பொந்தாக இருந்த 'க' என்ற பகுதி பரந்து, பெரும் பொந்தாகி, வயலிலுள்ள மண்ணும் கற்களும் உள்ளே புகுந்தன. இந்தக் 'க' என்ற பொந்து தரை மட்டத்திலிருந்து 20-அடி ஆழத்தில், 200 சதுர அடி பரவியுள்ளது. எனவே,



படம் 1.

நிலக்கரிச் சுரங்கத்தின் உட்புறம்

நீரின் வேகமும் ஆற்றலும் எவ்வளவு இருந்திருக்கும் என்பதை அறிந்துகொள்ளலாம்.

இந்தச் சுரங்கத்தில், 1. ரகுநாத்பாடி, 2. படா தேமோ, 3. திசேர்கட் என்ற மூன்று அடுக்குகள் சமதூரத்தில் இருக்கின்றன. இவற்றின் பருமன் முறையே 4 அடி, 5 அங்., 8 அடி, 16 அடி. படா தேமோவுக்கும் ரகுநாத்பாடிக்கும் இடையில் 80 அடி கல்லும் மண்ணுமான அடுக்கு இருக்கிறது. படா தேமோவுக்கும் திசேர்கட்டுக்கும் நடுவிலுள்ள அடுக்கு 400 அடி கனமுள்ளது. திசேர்கட் நிலக்கரியைப் பழைய சுரங்க முதலாளிகள் எடுத்தபோது தோண்டிய ஐந்தாவது குழிக்கிணறும் ஆறாவது குழிக்கிணறும் மேலேயுள்ள இரண்டு அடுக்குகளைக் கடந்து கீழே சென்றிருக்கின்றன. திசேர்கட்டில் இருந்த நிலக்கரி தீர்ந்ததும், அதிலிருந்து எழும் எரிவாயு மேலே வராமலிருக்க, ஸீல் வைத்துவிட்டார்கள். ரகுநாத்பாடியில் 'ம-ம' என்ற சுரங்கமும், படா தேமோவில் 'ய-ய' என்ற சுரங்கமும் தோண்டினார்கள். 'ய-ய' சுரங்கம் ஆறாவது கிணற்றோடு சேர்ந்ததல்ல. அங்கே சும்மா விட்டிருக்கும் 60-70 அடி கனமுள்ள நிலக்கரி அடுக்கில், ஓர் அடிச் சதுரமுள்ள ஊற்று உண்டு. இந்த ஊற்றிலிருந்து தண்ணீர் குமுறி எழுந்ததுமே, படா தேமோ சுரங்கத்தில் வேலை செய்துவந்த தொழிலாளிகள் 'ய-ய' வழியால் மேலே ஏறி வந்தார்கள். இதனால் 60-70 பேர் உயிர் பிழைத்தார்கள். (படம் 3 பார்க்க.)

ரகுநாத்பாடியில் வேலை செய்து வந்த தொழிலாளரில், குழிக்கிணற்றின் அடியில் இருந்த ஏழெட்டுப் பேர், கூண்டின் உதவியால் மேலே வந்துவிட்டார்கள். மீதி இருந்த 39 பேர்கள் உலகுக்குத் தெரியாமல் நீர்வெள்ளத்தில் மறைந்து போனார்கள்! இந்த அடுக்கிலிருந்துதான் பிறகு பதினொரு பேர் உயிர் பிழைத்து வந்தார்கள். அவர்கள் எப்படிப் பிழைத்தார்கள் என்பதுதான் ஆச்சரியம்.

செப்டம்பர் 26-ஆம் தேதி பகல் இரண்டரை மணிககு, மேலே இருந்த ஏரியின் தண்ணீர் முழுவதும் சுரங்கத்துள் பாய்ந்தது. விபத்து நிகழ்ந்த செய்தி உடனே டெலிஃபோனில் பறந்தது. அதிகாரிகள் இங்குமங்கும் ஓடினார்கள். சுரங்கத்தில் இருந்த பம்புகள் நீரில் மூழ்கிப்போயின. ஆதலால் அக்கப்பக்கத்துச் சுரங்கங்களிலிருந்து பெரிய பெரிய பம்புகளைக் கொண்டு வந்து மூன்று இடங்களில் நிறுவினார்கள். அவற்றுள் ஒன்று, 6-ஆம் குழிக்கிணற்றிலிருந்து நீரை எடுத்தது. மழையோ பெய்துகொண்டே இருந்தது. 'க' பொந்திலிருந்து மீண்டும் உள்ளே நீர் போகாமலிருக்க, பக்கத்து வயல்களில் ஐந்தாறு அடி உயரம் அணை கட்டினார்கள். இந்த ஏற்பாடு முடிய மூன்று நாட்கள் பிடித்தன. பிறகு தண்ணீரை ஓயாமல் இரவும் பகலும் எடுத்தார்கள். ஆயினும் தண்ணீர் மூன்று படையடுக்குகளிலிருந்தும் மெதுவாக மேலே வர வேண்டுமாதலால், லட்சக்கணக்கான காலன் நீரை எடுத்தும், தண்ணீர் மட்டும் மெதுவாகவே இறங்கியது. ஆதலால், சுரங்கத்தில் வெள்ளம் பாய்ந்ததிலிருந்து, உள்ளே சிக்கியவர்களை எடுக்கும்வரைக்கும் பதினெட்டு

நாட்கள் கடந்துவிட்டன. பதினெட்டாவது நாளும் குழிக்கிணற்றின் அடியில் ஏழெட்டு அடி ஆழம் தண்ணீர் இருந்தது!

2

காலை ஷிப்ட் எப்பொழுதோ முடிந்துவிட்டது. பகல் இரண்டரை மணியாகியும் இன்னும் சிலர் சுரங்கத்திலிருந்து வெளிவரவில்லை. இது எப்போதுமே சகஜந்தான். நிலக்கரித் தொழிலாளிகள் குறித்த நேரத்துக்குச் சுரங்கத்துக்குப் போகமாட்டார்கள்; வேலை முடிந்து வெளியே வரும்போதும் தாமதமாகும். இரண்டரை மணிக்குத்தான் தொழிலாளிகள் வேலையை முடித்து வெளியே வந்துகொண்டிருந்தார்கள்; அடுத்த ஷிப்டில் வேலை செய்ய வேண்டியவர்கள் உள்ளே இறங்கிக்கொண்டிருந்தார்கள். அச்கரின் தொட்டியும் நக்சுவின் தொட்டியும் நிரம்பியிருந்தும், ஹாகிமும் பருக்கும் இன்னும் இரண்டே கூடை நிரப்ப வேண்டியிருந்தமையால், அவர்களைப் போகவொட்டாமல் தடுத்தார்கள். அச்கரும் நக்சுவும் சுவரில் சாய்ந்து நின்று, அவாகளை அவசரப்படுத்தினார்கள்.

மொத்தம் பத்துப் பேர் அடங்கிய குழு அது. இந்த நால்வரைத் தவிர மற்ற ஆறு பேர் கல் வெட்டுபவர்கள். இவர்கள் எல்லாருமே மோமின்கள் (முஸ்லிம் நெசவாளி இனத்தினர்). இவர்கள் தங்கள் ஊரில் பயிர்த் தொழில் செய்பவர்கள். ஆனால் அந்தத் தொழிலில் குடும்பத்துக்குத் தேவையான உணவு கிடைக்காமையால், இவர்கள் தங்கள் மனைவி மக்களை ஊரில் விட்டுச் சுரங்கத்தில் கூலி வேலை செய்ய வந்திருக்கிறார்கள். வாரந்தோறும் இருபது ரூபாய் வரைக்கும் கூலி கிடைக்கிறது. பஸ்ஸில் ஒன்றேகால் ரூபாய்ச் செலவில் இவர்கள் ஊருக்குப் போக முடியும்; மாதந்தோறும் இரண்டு மூன்று நாள் ஊரில் இருந்துவிட்டு வருவார்கள். ஊருக்குப் போகும் நாள் அணுகிவிட்டமையால் அச்கர் அதைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தான். மிதமிஞ்சிய மழையினால் தங்கள் பயிர் அழிந்துவிடுமே என்ற கவலை வேறு இருந்தது. நக்சு சும்மா ஊம் கூட்டிக்கொண்டிருந்தான். அவன் பயிரும் அழிந்துதான் இருக்கும். ஊரில் இருந்த மனைவியின் வடிவம் அவன் கண்முன் நின்றது. அவளுக்கு இப்போது பேறுகாலம். தன் சிந்தனையை அவன் மறக்க விரும்பினான். ''எல்லாரும் புறப்படுங்கள், நேரமாகிறது; பசிக்கிறது'' என்றான்.

''புறப்படுங்கள் ஐயா, புறப்படுங்கள்! ஜல்தி! டைம் ஆகிவிட்டது!'' என்றான் அச்கர்.

ஆட்கள் ஒவ்வொருவராக வேலையை விட்டு வருகிறார்கள். இதோ சிரு, இதோ பூகல், இதோ ரஸாக். எல்லாருடைய உடலிலும் வேர்வை ஆறாகப் பெருகுகிறது. எல்லாரும் உழைத்துச் சோர்ந்து போயிருக்கிறார்கள். சுரங்கத்தில் காற்றுக் குறைவு. அதிலும், வேலை செய்யும் இடத்தில் காற்றுத் துளியும் அசையாது. அவர்களின் துணிகள் யாவும் கன்னங்கறேலென்று இருக்கின்றன. பருக் இன்னமும் இரண்டு கூடை நிலக்கரியை எடுத்தபாடில்லை.

திடீரென்று தொலைவில் இடி இடிப்பதுபோன்ற ஓசை கேட்டது. குழிக்கிணற்றின் அடியில் இருந்த தொழிலாளி, ''நக்சு மியான், தொட்டி எங்கேயோ கவிழ்ந்துவிட்டாற்போல இருக்கிறது; ஜாக்கிரதை!'' என்று கூவினான்.

அச்கர் தன் எதிரே இருந்த தொட்டிகளைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே, ''நாங்கள் தொட்டியருகிலேயே நிற்கிறோம்'' என்றான்.

ஆயினும் ஓசை மட்டும் வந்துகொண்டே இருந்தது. அச்கருக்கு அச்சம் தோன்றியது: 'இது என்ன கடுமையான ஓசை? ஒருவேளை மேலிருந்து பூமிதான் இடிந்து விழுகிறதோ? அல்லது, சுரங்கம் வெடிக்கிறதோ?' என்று நினைத்தான். அவனும் நக்சுவும் அங்கேயே கட்டுண்டவர்கள்போல நின்று, 'ஐயோ, ஐயோ!' என்று கத்தினார்கள். அவர்கள் நாலு

புறமும் பார்வையைச் செலுத்தினார்கள்.

அப்போது திடீரென்று வெள்ளம் புரண்டு வருவது அவர்களுக்குத் தெரிந்தது. அந்த வெள்ளம், காற்றை முன்னால் தள்ளியதை அவர்கள் உணர்ந்தார்கள். விளக்குகள் யாவும் படக் படக்கென்று அணைந்தன. அச்சரின் கையில் இருந்த விளக்கு மட்டும் எரிந்துகொண் டிருந்தது. சிந்திக்கவோ, அச்சரின் விளக்கிலிருந்து தங்கள் விளக்கைக் கொளுத்திக் கொள்ளவோ யாருக்கும் பொழுது இல்லை. எல்லாரும் முக்கிய வழியை நோக்கி, மேலே ஓடலானார்கள். அதுதான் அவர்கள் தப்பும் வழி. வெள்ளம் மேன்மேலும் வளர்ந்தது. எதிரில் இருந்த வழிகளிலிருந்தெல்லாம் தண்ணீர் பாய்ந்தது. சில நிமிஷங்களுக்குள் அது ஐந்து கம்பங்களை (350 அடிகள்)த் தாண்டி வந்துவிட்டது. முக்கியப் பாதையில் முழங்கால் ஆழம் நீர் இருந்தது. ஆயினும் அவர்கள் தப்பித்துக்கொள்ளலாம் என்றே நினைத்தார்கள். இன்னும் மூன்று கம்பங்கள், அதாவது சுமார் இருநூறு அடி தாண்டினால் குழிக் கிணற்றின் அடிக்கு வந்துவிடலாம். பிறகு மேலே போவது எளிது. வாழ்வுக்கும் சாவுக்குமிடையே வைதரிணிபோல அந்த வெள்ளம் இருந்தது. அதைத் தாண்ட அவர்கள் முயன்றார்கள். ஆனால்—

சுரங்க வாசல் தன் கண்ணெதிரே மூழ்குவதை நக்சு கவனித்தான். அதற்குள் வெள்ளம் இடுப்பளவுக்கு வந்தது. "உம், மேலே பாய்ந்து ஓடுங்கள்!" என்று அவன் கத்தினான். அவன் ஓடினான்; மற்ற ஒன்பது பேரும் அவன் பின்னால் ஓடினார்கள். இருநூறு அடி தூரம் மூன்று கம்பங்களைத் தாண்டி அவர்கள் இருபத்தோர் அடி உயரத்துக்கு வந்துவிட்டார்கள். ஆனால் தண்ணீர் விர் விர்ரென்று மேலே ஏறியது. அவர்களுக்கு மேலே போக வழி இல்லை! பயம் அவர்களைச் சூழ்ந்துகொண்டது. வழியில்



படம் 2.
ராணிகஞ்சு சுரங்கத்தின் சூழ்நிலை

இருந்த ஒரு ஸீலை உடைத்து, மேலே போக அவர்கள் முயன்றார்கள். கரிவெட்டியால் அவர்கள் அதைப் பிளந்துகொண் டிருந்தார்கள்.

நக்சு மட்டும் இன்னது செய்வதென்று தோன்றாமல் வெள்ளம் ஏறிக்கொண் டிருப்பதைப் பார்த்தபடி இருந்தான். அந்த ஸீலுக்கு மேலே, ஒரு பெரிய குளம் இருந்தது. ஸீலைப் பெயர்த்தால் அந்தக் குளமே சுரங்கத்துக்குள் வரும். இவர்கள் அந்த ஸீலைப் பெயர்க்க முயன்று, குளத்தையே தங்கள் தலைக்குமேல் வரவழைக்க ஆயத்தம் செய்துகொண் டிருந்தார்கள்! இதற்குள் தண்ணீர் சுவரளவுக்கு வந்துவிட்டது. "இந்தத் தொல்லையை விடுங்கள். இடதுபுறம் திரும்புங்கள்; வேகமாக நடவுங்கள்" என்று நக்சு கத்தினான்.

யூனஸூம் ரஸாக்கும், "எங்களை எங்கே அழைத்துப் போகிறாய், நக்சு? இந்தச் சுவரையே இடித்துவிடலாமா?" என்று கேட்டார்கள்.

நக்சுவுக்குத் திடீரென்று அற்புதமான கற்பனையொன்று எழுந்தது: சுரங்கத்தின் சித்திரம் முழுவதும் அவனை அறியாமலே அவன் கண்முன் தோன்றிற்று. அவன் பேசாமல், உறுதியோடு முன்னால் சென்றான். மற்ற ஒன்பது பேரும்

அவனைத் தொடர்ந்தார்கள். பத்து உடல்கள்; ஆனால் மனம் ஒன்று! ஒவ்வொரு கம்பமாக அவர்கள் தாண்டிச் சென்றார்கள். தண்ணீர் ஏறிக்கொண்டே இருந்தது—ஆறு அங்குலம், ஏழு-எட்டு-ஒன்பது-! பதின்மூன்று கம்பங்களைத் தாண்டியதும், நக்சு வலது புறமாகத் திரும்பினான். அதற்குள் தண்ணீர் முழங்கால் அளவுக்கு வந்துவிட்டது. 'இனி என்ன ஆகப்போகிறது?' என்று ஒவ்வொருவனும் தன்னையே கேட்டுக்கொண்டான். ஆனால் எவனும் வாய் திறக்கவில்லை. 'இங்கிருந்து விரைவில் வெளியேற வேண்டும்' என்பதுதான் ஒவ்வொருவனுடைய எண்ணமும். எதிரே இருந்த ஒரு ஸீலைக் கரி வெட்டியால் பெயர்க்கச் சிலர் முயன்றார்கள். ''ஜாக்கிரதை! உங்களுக்கு உயிர் வெறுத்துப் போய்விட்டதா?'' என்று கூவினான் நக்சு.

''என்ன? என்ன சொல்கிறாய்?'' என்று அவர்கள் யாவரும் கோபத்தோடும் வியப்போடும் அவனைக் கேட்டார்கள்.

''அந்தச் சுவருக்குப் பின்னால் என்ன இருக்கிறது, தெரியுமா?''

''என்ன இருக்கிறது?''

''கரியமில வாயு (கார்பன் டையாக்ஸைடு) இருக்கிறது. ஒரு கால் தண்ணீர் நிரம்பியும் இருக்கலாம். தெரிந்திருந்து ஏன் சாவை அழைக்கிறீர்கள்?'' என்றான் நக்சு.

கணப்பொழுது எட்டுப் பேர்களும் சிந்தித்தார்கள். ''அவ்வளவுதான்; பேசாமல் திரும்புங்கள்!'' என்றான் அச்கர்.

எல்லாரும் மீண்டும் திரும்பினார்கள். வழியில் ஐந்தடி உயரமுள்ள ஒரு திண்ணை இருந்தது. இங்கே ஹாலேஜ் எஞ்சினுக்கு எதிரே சக்கரத்தைப் பொருத்துவதற்காக இந்தத் திண்ணையைக் கட்டியிருந்தார்கள். குகையின் உயரமும் அதிகமாக இருந்தது. எல்லாரும் இந்தத் திண்ணைமேல் ஏறிக்கொண்டார்கள். ''நாங்கள் பத்துப் பேர் இங்கே சிக்கியிருக்கிறோம்; உதவி, உதவி!'' என்று அவர்கள் கூவினார்கள். தங்கள் கூவலுக்குப் பதில் வருகிறதா என்று அவர்கள் காது கொடுத்துக் கேட்டார்கள். எதிர்க் குகையில் இடம் தேட முயலும் வெள்ளநீரில் மோதி அவர்களின் குரல் எதிரொலியாகத் திரும்பியது. கணப்பொழுதில் எங்கும் அமைதி சூழ்ந்தது. மினுமினுக்கும் விளக்கில் கருநாகத்தின் முதுகு போல வெள்ளநீர் பளபளத்தது. அந்த அமைதி மிகவும் பயங்கரமாக இருந்தது.

சிறிது தொலைவில் யாரோ கனைக்கும் சத்தம் கேட்டது. அவர்களுக்குப் போன உயிர் திரும்பி வந்தது. ''யார்? உதவிக்கு யாராவது வந்திருக்கிறீர்களா?'' என்று அனைவரும் ஒரே குரலில் கேட்டார்கள். பிறகு நீரில் யாரோ அசைந்து வரும் சத்தம் தெளிவாகக் கேட்டது. 'இது என்ன சத்தம்? நமக்கு உதவி வருகிறதா அல்லது ஆபத்து வருகிறதா? சில சமயம் தண்ணீரோடு விஷப் பிராணிகளும் வருவதுண்டு!' என்று அவர்கள் சிந்தித்தார்கள்.

''காப்பாற்றுங்கள், என்னைக் காப்பாற்றுங்கள்!'' என்று தெளிவான மனித ஒலி கேட்டது.

அவர்களிடம் ஒரே விளக்குத்தான் எரிந்துகொண்டிருந்தது. மற்ற விளக்குகளில் பெரும்பாலும் எண்ணெய் இல்லை. ஒரு விளக்குக்குக் கொடுக்கும் எண்ணெய் எட்டு மணி நேரத்துக்கு மேல் எரியாது. அச்கரும் நக்சுவும் தினமும் தங்கள் ராந்தலில் கொஞ்சம் எண்ணெய் மீத்துக்கொள்வது வழக்கம். அதனால்தான் அந்த ஒரு விளக்கு எரிகிறது. சிறு கொஞ்சம் எண்ணெய் இருந்த தன் விளக்கை அச்கரின் விளக்கில் ஏற்றிக்கொண்டான். அவனும் ரஸாக்கும் இடுப்பளவு நீரில் சென்றதும், எதிரே ஒருவன் நீந்தி வருவதைக் கண்டார்கள். தண்ணீர் நிரம்பிய குகையிலிருந்து அப்படி நீந்தி வந்தவன் யார்? அவனும் ஒரு தொழிலாளி; அவன் பெயர் ஜேனுல். பிறகு எல்லாருமாக அந்தத் திண்ணைமேல் ஏறி உட்கார்ந்தார்கள். இனி அவர்கள் தப்புவது எப்படி?



படம் 3. விபத்து நிகழ்ந்த சுரங்கத்தின் விவரம்

3

ஜேனால் உலகப் போரை நேரில் பார்த்தவன். திண்ணைமேல் ஏறியதும் அவனுக்குத் தைரியம் வந்துவிட்டது. "வெளியே தண்ணீரை இறைக்க முயற்சி நடக்கும். யாராவது நம்மைத் தப்பவைக்க வருவார்கள். இல்லாவிட்டாலும் போகிறது! நான் தனியே சாவதாக இருந்தேன். இப்போது எனக்குப் பத்துத் தோழர்கள் கிடைத்துவிட்டார்கள்!" என்று அவன் சொன்னான்.

தண்ணீர் திண்ணையின் அடியிலும் ஏறிக்கொண்டே இருந்தது. திண்ணையில் ஒரு கட்டிலளவு இடந்தான் ஈரமின்றி இருந்தது. எல்லாரும் அங்கே கமுக்கமாகக் குந்தியிருந்தார்கள். ஜேனாலின் பேச்சுச் சிலருக்குப் பின்னும் பயத்தையே உண்டாக்கியது. 'எல்லாருக்கும் சேர்ந்து ஜலசமாதி நேரப்போகிறது' என்ற எண்ணம் அவர்களைக் கவ்வியது.

அச்கரின் விளக்கில் இருந்த எண்ணெயும் தீர்ந்தது. விளக்கு அணையுமுன்பு பளிச்சென்று எரிந்தது. அந்த வெளிச்சத்தில் சிறியவையும் பெரியவையுமான அவர்களின் நிழல்கள் தெரிந்தன. அந்த நிழல்களைப் பார்க்கவே பயமாக இருந்தது. யூனஸும் பருக்கும் தங்கள் கண்களை மூடிக் கொண்டார்கள்.

விளக்கு அணைந்தது. அவர்கள் யாவரும் உள்ளே அடக்கி வைத்திருந்த பயம் இப்போது பேருருவத்தோடு வெளியே கிளம்பியது. எல்லாரும் ஓவென்று அழலானார்கள். வீடு, மனைவி, மக்கள், பசுமாடுகள், நிலம் நீச்சு-அனைத்தும் அவர்கள் நினைவுக்கு வந்தன. அவர்களின் பயங்கரமான ஓலத்தின் எதிரொலி, எதிரே இருந்த குகைக்குள் சென்று நீரலைகளில் மிதந்து வந்து அவர்களை மிரட்டியது. இந்த அச்ச நிலையிலேயே அவர்களுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போல இருந்தது.

"நிறுத்துங்கள் அழுகையை!" என்ற கம்பீரமான குரல் கேட்டது. நக்சுவின் குரல் அது: "ஏதுக்கு இப்படிப் பெண் பிள்ளைகள் போல அழுகிறீர்கள்? அல்லாவின்

பெயரைச் சொல்லுங்கள். நம்மைக் காப்பவனும் அவன்தான்! கொல் பவனும் அவன்தான்! சாவதாக இருந்தால் அவன் திருநாமத்தைச் சொல்லிக்கொண்டு அமைதியாகச் சாவோம்'' என்றான்.

இதைக் கேட்டதும் எல்லாருக் குமே சற்றுத் துணிவு வந்தது. 'அல்லாஹோ அக்பர்!' என்ற கர்ஜனை எங்கும் பரவியது. பிறகு ஜேனுல் முதலில் வேண்டுதல் செய்துகொண்டான்: ''உனக்கு இரண்டு ஆடுகள் கொடுக்காமலே இருந்துவிட்டேன்; உயிரோடு பிழைத்துக் கிடந்தால் பழைய இரண்டும், என் உயிருக்கு உயிராக ஒன்றும் ஆக மூன்று ஆடுகள் உனக் குக் கொடுப்பேன்.'' பிறகு மற்ற வர்களும் வேண்டுதல் செய்து கொண்டார்கள்.

எல்லாருக்கும் தாகமாக இருந் தது. ஸீலின் புறமாக மேலிருந்து தண்ணீர் களகளவென்று பெருகி வரும் ஓசை கேட்டது. ஆனால் அந்த இடத்தை விட்டு அசைய யாருக்கும் துணிவு இல்லை. பொழுது போவதற்காக அவர்கள் அல்லாவைத் தோத்தரித்தார்கள். பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டார்கள்.

''ஜேனுல், நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்?'' என்று பூகல் கேட்டான்.

ஜேனுலுக்கு எப்போதுமே வம் பளப்பதில் ஆசை. களைப்பையும் பசியையும் பயத்தையும் மறந்து, அவர்கள் அவனுடைய வரலாற் றைக் கேட்கலானார்கள். ''நான் இரண்டாவது ஷிப்ட்டில் நேரங் கழித்துச் சுரங்கத்துக்குள் வந் தேன். வந்தவுடனே வேலையில் கவனமாக இருந்தேன். தண்ணீர் காலில் வந்து முட்டும்வரையில் அதை நான் கவனிக்கவே இல்லை. பிறகு கரிவெட்டியையும் கூடையை யும் எடுத்துக்கொண்டு புறப்பட் டேன். தண்ணீர் மட்டம் பரபர வென்று ஏறியது. நான் நீந்திக் கொண்டே உதவிக்காகக் கூச்சல் போட்டேன். அதைக் கேட்டுத் தான் சிரு ஓடிவந்தான்'' என்று அவன் கூறினான்.

''காலம் என்பது இடத்தைச் சார்ந்த ஒரு பகுதி'' என்று ஐன்ஸ் டீன் கூறினான். இந்தத் தொழி லாளிகள் விஞ்ஞானிகள் அல்ல; ஆயினும், அந்தக் கொள்கையை இவர்கள் அநுபவத்தில் கண்டார் கள். இருண்ட புட்டிபோன்ற சுரங் கத்துக்குள் சீல் இட்டவர்கள் போல அவர்கள் கிடந்தார்கள். பகலோ இரவோ அவர்களுக்குக் கால அளவே தெரியவில்லை. வெளி யுலகம், ''நான்கு நாட்கள் ஆகியும் இன்னும் தண்ணீர் மட்டம் இறங்கிய பாடு இல்லை; எட்டு நாட் கள் ஆகியும் நாற்பது அடி ஆழம் தண்ணீர்தான் இறைக்க முடிந்தது. இனி உள்ளே எவன் உயிரோடு இருக்கப்போகிறான்? வெறும் பிணங்களைத்தான் எடுக்க வேண் டும்!'' என்று பேசிக்கொண்டதை அவர்கள் அறியவில்லை.

விபத்தில் சிக்கியவர்களைக் காக் கும் குழுவினர், குகையின் புறமாக உள்ளே சிறிது தூரம் சென்று பார்த்தார்கள். வெள்ளத்தின் ஆற்றலினால் பிரம்மாண்டமான இரும்புத் தூலங்கள் வளைந்திருந் தன. மின்சாரக் கம்பிகள், கத்தரி யினால் வெட்டுண்ட காகிதம் போல, துண்டு துண்டாகக் கிடந் தன. அடியில் இருந்த தண்ட வாளங்கள் வெள்ளத்தில் பெயர்ந்து மூலைக்கு மூலை சென்றன. வெள்ளத்தோடு வந்த வண்டல் மண் அங்கங்கே படை. படையாகப் பதிந்திருந்தது. சேற் றில் ஒவ்வோர் அடியாகக் காலை வைத்து நடக்க வேண்டியிருந்தது. அந்தச் சேற்றில் அழுந்திய ஒரே ஒரு பிணம் மட்டும் அவர்களுக்குக் கிடைத்தது.

'தண்ணீர் முழுவதையும் இறைக்க இன்னும் எத்தனை நாள் பிடிக்கும்?' என்ற கேள்விக்கு அதி காரிகள் பல வகையாகப் பதில் சொன்னார்கள். பதினைந்து இருபது நாட்கள் ஆகும் என்றார்கள் நம் பிக்கையுள்ளவர்கள். ''உம், இன் னும் இரண்டு மாதமாவது ஆகும்'' என்றார்கள் நம்பிக்கையற்றவர்கள்.

உள்ளே அந்தத் திண்ணையில் பதினொரு தொழிலாளிகள் ஒரு வரை ஒருவர் நெருக்கிக்கொண்டு

உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கு மயக்கம் வரலாயிற்று. திண்ணை விளிம்பில் சற்றுக் குனிந்து அவர்கள் சிறிது சிறிது தண்ணீரை மட்டும் குடித்து வந்தார்கள். ''நக்சு, திண்ணையில் இரும்பு ஆணிக்குமேல் தண்ணீர் ஏறாமல் நின்றிருக்கிறது'' என்றான் யூனஸ். ஜேனுல் கையை நீட்டி அந்த ஆணையைத் தொட்டுப் பார்த்தான். ''ஆமாம் அப்பனே, அல்லாவின் அருளினால் வெள்ளம் வடியும் போலத்தான் இருக்கிறது'' என்றான்.

அவர்களுடைய பயத்தின் ஒரு பகுதி நீங்கியது; மனத்தில் கொஞ்சம் நம்பிக்கை தோன்றியது. ஆனால் மயக்கம் அதிகமாகிக் கொண்டே இருந்தது. அந்த 'இக்கிணியுண்டு' இடத்தில் பதினொரு பேரும் உட்கார்ந்த படியே தூங்கினார்கள். 'வயிற்றைப் புரட்டுகிறது' என்று தோன்றிற்று யூனஸுக்கு. அவன் அதை மறக்க முயன்று, அல்லாவின் திருநாமத்தை ஜபித்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் அவன் வாந்தி எடுத்தான். அச்கருக்கும் வாந்தி ஆயிற்று. இந்த ஒக்காளத்தினால் எல்லாருக்குமே வயிற்றைப் புரட்டியது. வாந்தியை அடக்கச் சிலர் முயன்றார்கள்; சிலர் அல்லாவை வேண்டிக்கொண்டார்கள்; சிலர் பயந்து அழலானார்கள். ''வெள்ளம் வடிகிறது, வெள்ளம் வடிகிறது! கம்பத்தின் உச்சியிலிருந்து தண்ணீர் இறங்கி விட்டது'' என்று ஜேனுல் அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தான்.

பிறகு அவர்கள் கையை நீட்டிக் கம்பத்தைத் தொடலானார்கள். கம்பத்திலிருந்து தண்ணீர் மட்டம் இறங்கியதும், ''வாருங்கள், நாம் இறங்கலாம்'' என்றான் ஜேனுல்.

அச்கரால் அசையக்கூட முடியவில்லை; அவ்வளவு களைப்பு; ஓய்ச்சல். அவன், ''இப்போது நாம் இறங்கக் கூடாது!'' என்றான்.

ஜேனுலுக்குந் தனியாக இறங்கத் துணிவு இல்லை. அவன் தூக்கத்திலிருந்து எப்பொழுதோ ஒரு தடவை எழுந்ததும், அவனுக்கு நீரில் இறங்கிப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் குறுகுறுத்தது. அல்லாவின் பெயரைச் சொல்லிக் கொண்டு அவன் இறங்கினான். ஒவ்வோர் அடியாக வைத்து, முன்னால் சென்றான். எங்கும் பாறையும் சேறும் நிறைந்திருந்தன. ஆனால் வெள்ளம் வடிந்திருந்தது. தண்ணீரின் ஓரத்தில் வந்ததும் அவன் ஒரு பாறாங்கல்லை எடுத்து நீரில் கழுவிக் கரையில் போட்டுக்கொண்டு உட்காருவான்.

திண்ணையில் சிறு இடத்தில் ஒடுங்கி அமர்ந்திருந்த பத்துப் பேரும் ஒவ்வொருவராகக் கீழே இறங்கித் தண்ணீர்க் கரைக்கு வந்து, ஒவ்வொரு பாறாங்கல்லைக் கழுவி அதன்மேல் உட்கார்ந்தார்கள். உட்கார்ந்தபடியே அவர்கள் அந்தக் கல்லில் தூங்குவார்கள். விழித்ததும் தண்ணீர் வடிந்ததா என்று பார்த்து மேலே செல்வார்கள். தங்கள் தோழர்களின் எண்ணிக்கை சரியாக இருக்கிறதா என்று அவ்வப்பொழுது எண்ணிப் பார்த்துக்கொள்வார்கள்.

வெள்ளத்தின் ஓசை இப்பொழுதும் இருந்தது. சிலர் சேற்றில் சறுக்கி விழுவார்கள். சிலர் பாறையில் இடித்துக்கொள்வார்கள். அவர்களின் உடல் சில்லிட்டிருந்தது. களைப்போ சொல்லத் தரமல்ல. அவர்களில் ஒவ்வொருவனும் மொத்தத்தில் மூன்று நான்கு தடவைகளுக்கு மேல் மலங் கழிக்கவில்லை. அவர்களுடைய நாள் கணக்கு அதனால் மிகவும் நீண்டிருந்தது. அவர்கள் அங்குலம் அங்குலமாக, தண்டவாள வழியைக் கவனித்துக்கொண்டு முன்னேறினார்கள். 'இப்போது மூன்று நாள் ஆகியிருக்கும். நான்கு நாள் ஆகியிருக்கும். வெள்ளம் வடிகிறது. அல்லாவின் அருளினால் இந்தத் தொல்லை தீரும்' என்று அவர்கள் கருதினார்கள்.

வெளி உலகமோ, ''விபத்து நிகழ்ந்து இன்று பதினேழு நாட்கள் ஆகிப் பதினெட்டாவது நாள் விடிந்திருக்கிறது'' என்று பேசியது.

பதினெட்டாவது நாள் காலையில், 'ஆறாவது குழிக்கிணற்றின் அடியில் அமைத்திருக்கும் பம்பின்

குழாய் இன்னமும் தண்ணீரில் மூழ்கியிருக்கிறதா அல்லது நீர் வடிந்துவிட்டதா?' என்று அறிய வேண்டிய அவசியம் எஞ்சினீருக்கு ஏற்பட்டது. கிணற்றடியில் 300 அடி தூரத்தில் கன்னங்கரிய நீர் ஓடிக்கொண்டிருந்தது. தண்ணீர் வரைக்கும் வெளிச்சம் தெரிவதற்காக, மிகுந்த மின்சாரச் சக்தியுள்ள ஒரு விளக்கைக் கிணற்றுக்குச் சரியாக மேலே பொருத்தினார்கள். ஒரு பிட்டர், பெரிய தொட்டியில் உட்கார்ந்து, கீழே இறங்கினன்.

நீரில் விளக்கொளி பட்டதுமே அது வெகு தூரத்துக்கு மினுமினுவென்று பரவியது. அப்பொழுது உள்ளே சிலர் சோர்ந்து கிடந்தார்கள்; சிலர் தூக்கத்தில் மூழ்கியிருந்தார்கள். விளக்கின் சிறிய ஒளியைத் தொலேவிலிருந்து கண்டதும் அவர்களுக்கு முதலில் அது இன்னதென்று விளங்கவில்லை. தம் கண்முன்னல் மின்மினி பறப்பதாக அவர்கள் நினைத்துக்கொண்டார்கள்.

தண்ணீர் பளபளத்தபடியே இருந்தது. ஜேனுலுக்கு ஆனந்தம் பொங்கியது. ''வாருங்கள், குழிக் கிணற்றின் அடிக்குப் போய் விடலாம்'' என்று அவன் மகிழ்ச்சியோடு கூறினன். அவனுடைய தொணதொணப்பை மற்றவர்களால் தாங்க முடியவில்லை. அவர்கள் சும்மா இருந்தார்கள். ஜேனுல் விரென்று தண்ணீரில் புகுந்தான். கரிவெட்டி அவன் தோளில் இருந்தது. நீந்திக்கொண்டே சென்ற அவன், அவர்கள் கண்ணுக்கு மறைந்துவிட்டான். 'அவன் எங்கே போனனே? இனி என்ன ஆகுமோ?' என்ற கலக்கத்தோடு அவர்கள் அசையாமல் உட்கார்ந்திருந்தார்கள்.

நீந்தி வந்த ஜேனுலைக் கண்டதும் அந்தப் பிட்டர் கணப்பொழுது பயந்துபோனன். ''ஸார், இங்கே பிணம் மட்டும் அல்ல; உயிருள்ளவர்களும் இருக்கிறர்கள். அவர்களை மேலே எடுக்க வேண்டும்!'' என்று அவன் கத்தினன்.

''உயிருள்ளவர்கள் இருக்கிறர்களா?'' என்று மானேஜர் ஓடி வந்து, அவர்களை வெளியே கொண்டுவர ஏற்பாடு செய்தார். குளுகோஸ் வந்தது; வைத்தியர்கள் வந்து, அவர்கள் அனைவரையும் ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போய்ச் சிகிச்சை செய்தார்கள். அல்லாவின் பேரருள் அந்தப் பதினெரு தொழிலாளிகளையும் காப்பாற்றியது.

அவர்களுக்குச் சிகிச்சை செய்த ஆஸ்பத்திரியின் தலைவரான டாக்டர் ஸேன் என்பவரையும், இந்தத் தொழிலாளிகளையும், சுரங்கங்களையும் நான் நேரில் போய்ப் பார்த்து வந்து இந்த வரலாற்றை எழுதியிருக்கிறேன். அவர்களுடைய துணிச்சலை டாக்டர் ஸேன் பெரிதும் பாராட்டினர். உணவில்லாமல் இருப்பவர்களுக்குப் பெரும்பாலும் ஏழெட்டு நாட்களுக்குப் பிறகு அஸிடோன் என்ற ரசாயனப் பொருள் சிறுநீரில் வருவது உண்டாம். ஆனல் பதினெட்டு நாள் பட்டினி இருந்தும் இவர்களுக்கு உடலில் எவ்வகைக் கோளாறும் இல்லையாம். ''இவர்கள் குடித்தது நிலக்கரி கலந்த தண்ணீர். உடலுக்குத் தேவையான உப்புக்கள் அந்த நீரில் இவர்களுக்குக் கிடைத்திருக்கலாம். அதனல்தான் இவர்கள் கோளாறு இல்லாமல் தப்பினர்கள்'' என்று டாக்டர் ஸேன் சொன்னர்.

இமயத்தின் உச்சியை எட்டிய தேன்சிங்கைப் போலவே, இந்தச் சுரங்கத் தொழிலாளிகளும் நம் நாட்டில் விளங்கும் துணிவுள்ள வீரர்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

☙O❧

பயிர் காக்கும் சொக்கப்பனை

கே. பெருமாள், என். ஷண்முகம்

முன்னோரின் பல ஏற்பாடுகளை ஆராயாமலே நாம் மூடத்தனம் என்று சொல்லி நகைத்துவிடுகிறோம். ஆனால், அதிகாரிகள் நேரே சொக்கப்பனை கொளுத்திப் பலன் கண்ட அனுபவத்தை இந்தக் கட்டுரையில் காணலாம். கட்டுரையாளர் இருவரும் மதுரையில் பயிர்ப் பாதுகாப்பு உதவியாளராக உத்தியோகம் பார்ப்பவர்கள்.



சொக்கப்பனை என்றால் என்ன என்பது அனைவருக்கும் தெரியும். ஹிந்துக் கோவில்களில் கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகைத் திருவிழாவன்று, கோவிலின் முன் பனை ஓலைகளினாலும் சருகுகளினாலும் கட்டிய குடிசை போன்ற ஓர் அமைப்பைத் தீயிட்டுக் கொளுத்துவார்கள். அதுதான் சொக்கப்பனை. அதன் தத்துவம் என்ன? 'நாட்டிலுள்ள தீய சக்தி எல்லாம் எரிந்து சாம்பலாக வேண்டும்; இறைவன் அருள் நிறைந்த அன்பு நாட்டில் உலவ வேண்டும்' என்பதே சொக்கப்பனையின் கருத்து. நாட்டுப்புற மக்கள் சாதாரணமாகவும் இந்த மாதிரி ஓலைகளைக் குவித்துச் 'சொக்கப்பனை'யாகக் கொளுத்துவதுண்டு.

வீட்டில் இரவில் விளக்குகள் வைத்திருக்கும்போது, அந்த விளக்கருகே பலவகைப் பூச்சிகள் சுற்றிப் பறந்துகொண்டு வெளியே செல்லாமல் இருப்பதைக் காண்கிறோம். இது மாரிக் காலத்தில் சர்வ சாதாரணம். விளக்கில் மோதி இறக்கும் விட்டில் பூச்சியையும் நாம் பார்த்திருக்கிறோம். இது எதை உணர்த்துகிறது? பூச்சி இனங்களை வெளிச்சம் ஆகர்ஷிக்கிறது. வெளிச்சத்தைக் கண்டு அவை ஓடி வருகின்றன. இதை 'ஒளிக் கவர்ச்சி' (Photo Taxis) என்று கூறுவார்கள். வயல்களில் காவல் காப்போர், குளிர் காய்வதற்காகச் சொக்கப்பனை கொளுத்திக்கொண்டு இருக்கும்போது பல வகைப் பூச்சிகள் பறந்தோடி வந்து அந்த நெருப்பில் விழுந்து இறந்துவிடுகின்றன. பயிர்களை அழிக்கும் பூச்சிகளின் தொகை இதனால் ஓரளவு குறைந்துவிடும். இப்படி ஓர் உபயோகமும் அதற்கு இருக்கிறது.

கடந்த வருஷம் மதுரை ஜில்லா உசிலம்பட்டித் தொகுதியில் கம்பளிப் பூச்சியின் படையெடுப்பு ஏற்பட்டுப் பல்லாயிரம் ஏக்கர் நிலக்கடலை நாசமாகிவிட்டது. அந்தப் பூச்சிகள் மிகப் பெரிய அளவில் வலுத்துவிட்டபடியால், தடுப்பு முறை மிகவும் கடினமாகிவிட்டது. அந்தக் கம்பளிப் பூச்சிகள் ஒரு ரெயிலையே நிறுத்தி நாட்டில் பரபரப்பை ஏற்படுத்திவிட்டன. கம்பளிப் பூச்சியைக் கொல்வதற்குப் பல நிலைகளில் பல மருந்துகளை

மூலம்: மேழிச்செல்வம் (தமிழ்: டிசம்பர் '56), மவுண்ட் ரோடு, சென்னை.

உபயோகிக்கவேண்டி யிருக்கிறது. கம்பளிப் புழு சிறியதாயிருக்கும் போது தடுப்பு முறை சுலபமா யிருக்கும்; பலன் நிச்சயமா யிருக்கும்; செலவு சுருங்கும். கம்பளிப் பூச்சியை ஆரம்பத்திலேயே இந்த வருஷம் கட்டுப்படுத்திவிட வேண்டும் என்ற நோக்கம் கொண்டு உசிலம்பட்டிப் பகுதியில் முன்னெச்சரிக்கையாகப் பல வகையான முறைகளைக் கையாண்டோம்.

ஆவணி மாதம் மழை விழுகிறது. மண்ணில் புதைந்திருக்கும் கூட்டுப் புழுவிலிருந்து உடனே ஒரு வகைப் பட்டாம் பூச்சி வெளியே வந்து ஆயிரக்கணக்கில் முட்டையிடுகிறது. இந்தக் கட்டத்திலேயே தடுப்பு முறைகளைக் கையாள வேண்டும் என்று பூச்சியியல் பயிர்ப் பாதுகாப்பு அதிகாரி சொன்னார். 'ஒளிப் பொறி'(Light trap) உபயோகித்து, பட்டாம் பூச்சியை முட்டையிடுவதற்கு முன் பிடித்துக் கொல்ல வேண்டும் என்று அவர் ஆலோசனை கூறினர். அதன்படி அந்த வட்டாரத்தில், 'விளக்குகளை வைத்துப் பூச்சிகளைப் பிடியுங்கள்' என்று உடனே ஒருவகைப் பிரசாரம் செய்தோம். 'வயல் காடுகளில் விளக்குகளை வையுங்கள்; பூச்சிகள் வந்து விழும்' என்று வலியுறுத்தினோம். 'வயலிலே விளக்கா? வாய்க்காலில் ஒளியா? வெண்ணெய் வைத்துக் கொக்குப் பிடிப்பதா!' என்று பலர் கேலி செய்தார்கள். படித்தவர், பாமரர் எல்லாருமே இந்த முறையின் பலனைக் குறித்துச் சந்தேகப் பட்டார்கள். ஆனல் விவசாய இலாகாவினர் சளைக்கவில்லை. கிராம ஊழியர்கள், விவசாய மேஸ்திரிகள் இவர்களின் மூலம், கடலைக்காய்க் காடுகளில் இரவில் பிரகாசமான விளக்குகளை ஒளிப் பொறியாய் வைத்தார்கள். முதல் தடவையிலேயே பலன் நிதரிசனமாய்த் தெரிந்தது. ஒவ்வொரு ஒளிப் பொறியிலேயும் சுமார் 500 முதல் 1,500 பட்டாம் பூச்சிவரையில் சிக்கி இறந்து கிடந்தன. மக்கள் இதன் பலனை உணர்ந்தார்கள். முட்டையிடுமுன் ஒரு பட்டாம் பூச்சியைக் கொன்றால், அது ஆயிரம் கம்பளிப் பூச்சியைக் கொன்றதுபோல என்பதை விவசாயிகளுக்கு எடுத்துச் சொன்னோம். இதைக் கண்டு ஊக்கம் கொண்டு விவசாயிகள் அங்கங்கே தங்கள் நிலங்களில் சொக்கப்பனை கொளுத்தினர்கள். விளக்குப் பொறி வைத்தார்கள். பட்டாம் பூச்சிகள் பெருவாரியாகச் சிக்கி மாய்ந்தன. சொக்கப்பனையில் பூச்சிகள் வந்து விழுந்து இறந்ததைக் கண்டு, விவசாயிகள் ஏராளமாகச் சொக்கப்பனை கொளுத்தினர்கள். மழை பெய்ததற்கு அடுத்த நாள் இரவில் இப்படி விளக்குகள் உபயோகித்ததனல், பூச்சியின் தொகை ஓரளவு குறைந்துவிட்டது. இந்த விளக்குப் பொறி வைப்பதும் சொக்கப் பனை எரிப்பதும் மிகவும் சாதாரணமாகத் தோன்றினாலும், சிரமம் பார்க்காமல் இவற்றைக் கைக்கொண்டதன் மூலம், லட்சக் கணக்கான கம்பளிப் பூச்சிகளின் உற்பத்தியைத் தடுத்துவிட்டோம்; பயிர்களை அழிவிலிருந்து காப் பாற்றிவிட்டோம்.

இதிலே இன்னொரு நன்மையும் இருக்கிறது. மழைக்குப் பின் சொக்கப்பனை வைத்தால், பட்டாம் பூச்சிகள் வந்து விழும் எண்ணிக்கையிலிருந்து, 'இன்னும் ஒரு வாரத்தில் கம்பளிப் பூச்சி வரும்; பூச்சி சிறியதா யிருக்கும்போது மருந்தடித்து விடவேண்டும்' என்று அறிந்து, விவசாயி முன் ஜாக்கிரதையாக இருந்து மருந்தடிப்பான். பூச்சி பெரிதாகுமுன் இப்படி அவன் கட்டுப்படுத்தி விடலாம். மருந்துகள் பெருகியுள்ள இந்தக் காலத்திலும் சொக்கப்பனை எரிப்பது போன்ற முறைகள் எப்படி உபயோகப்படுகின்றன! எதையும் காலத்தில் உபயோகப் படுத்தினல் நல்ல பலன் கிட்டும். நாங்கள் சரியான சமயத்தில் சொக்கப்பனை எரித்ததால், பல்லாயிரக் கணக்கான அழிவுப் பூச்சிகள் மாய்ந்தன. சுமார் ஆயிரத்திரு நூறு ஏக்கர் நிலக்கடலை பிழைத்தது.

எப்படி இந்த ஒளிப்பொறியை அமைப்பது? அது மிகச் சுலபம். அகன்ற தட்டு ஒன்றின் நடுவில் ஒரு செங்கல்லை வையுங்கள். செங்

கல்லைச் சுற்றித் தட்டில் நீரை நிரப்புங்கள். அந்த நீரில் கொஞ்சம் மண்ணெண்ணெயோ, பி. எச். சி. மருந்து 50 சதவிகிதமோ போட்டுக் கலக்கிக்கொள்ளுங்கள். செங்கல்லின்மேல் பிரகாசமான ஒரு விளக்கை வையுங்கள். வயலுக்கு அருகிலுள்ள இடமாகப் பார்த்து இப்படி அதை வையுங்கள். பூச்சிகள் வெளிச்சத்துக்கு மயங்கி வந்து விளக்கில் மோதி, தண்ணீர்க் கலவையில் விழுந்து இறந்துவிடும். காலையில் பார்த்தால் ஏராளமான பட்டாம் பூச்சிகள் செத்துக் கிடக்கும். கடலைக் காட்டில் முந்திய வருஷம் உண்டான கூட்டுப் புழுவிலிருந்து பட்டாம் பூச்சிகள் வெளிவந்த அளவைப் பொறுத்தது இவற்றின் எண்ணிக்கை. இந்த மாதிரி வெளிவரும் பூச்சிகள் மழைக்குப் பின் இரண்டு நாளைக்கெல்லாம் அதிகமா யிருக்கும். பூச்சிகள் விழுவது மிகவும் குறைந்துவிட்டால், பொறிகளை அடுத்த மழைக்குப் பிறகு வைத்துக் கொள்ளலாம். இப்படி விளக்குப் பொறி வைக்காதவர்கள், வயலோரங்களில் சிறு அளவில் சொக்கப்பனை கொளுத்தினால் பூச்சிகள் ஓடி வந்து அதில் விழுந்து இறந்துவிடும். முட்டையிட்ட தாய்ப் பூச்சிகளும் முட்டையிடாத தாய்ப் பூச்சிகளும் இப்படிப்பட்ட ஒளிப் பொறிகளினால் இறந்துவிடும். முட்டையிடாத தாய்ப் பூச்சிகளைக் கண்டு கொல்வதில் இன்னொரு நன்மை. தாய்ப் பூச்சியைக் கண்டுவிட்ட பிறகு கம்பளிப் பூச்சிகளை எதிர்பார்த்து அவற்றைத் தகுந்த சமயத்தில் அழிக்கலாம். கம்பளிப் பூச்சி தாக்கும் கடலைக் காடுகளில் மாத்திரமல்லாமல் குருத்துப் பூச்சி தாக்கும் நெல் வயல்களிலும் இந்த ஒளிப் பொறிகளை உபயோகித்து நல்ல பலன் காணலாம்.

இவ்வளவு சுலபமான முறையை ஏன் சொல்கிறோம் என்றால், இதை அனைவரும் உபயோகித்துச் சிறந்த பலன் அடையலாம் என்பதால் தான். மதுரை ஜில்லாவில் மாத்திரமல்லாமல், ராமநாதபுரம், கோயம்புத்தூர், சேலம், வட ஆர்க்காடு, செங்கல்பட்டு முதலிய மாவட்டங்களிலும் கம்பளிப் பூச்சி தோன்றி, ஏழை விவசாயிகளுக்கு எண்ணற்ற இன்னல்களை விளைவிக்கிறது. இவற்றைத் தடுக்க 'ஒளிப் பொறி'த் தடுப்பு முறையும் ஓரளவு உபயோகப்படும்.

வயசு என்ன?

காட்லாக் போட்டு வி. பி. மூலம் வியாபாரம் செய்யும் ஜெர்மன் பொம்மைக் கம்பெனி ஒன்று இப்படி விளம்பரம் செய்தது: ''எங்களிடம் விதம் விதமான பல தரப் பொம்மைகள் இருக்கின்றன. குழந்தையின் வயசு, அப்பாவின் வயசு இரண்டையும் தெரிவித்தால், உங்களுக்குத் தகுந்த பொம்மை எது என்று தெரிவிக்கிறோம்.'' —விலேம் ஸாம்மர்

விலக்க முடியாத டைப்பிஸ்ட்

நியூ யார்க் நகர வியாபாரி ஒருவர், தம்முடைய டைப்பிஸ்டுக்கு எவ்வளவு சொல்லிப் பார்த்தும், தப்பில்லாமல் எந்தக் கடிதத்தையும் அவள் டைப் அடிக்கவில்லை. அவளைச் சீர்திருத்தலாம் என்ற நம்பிக்கையை வியாபாரி அடியோடு இழந்துவிட்டார்.

எனவே, இதற்குப் பரிகாரமாக அவர் ஒரு ரப்பர் ஸ்டாம்பு செய்து வைத்துக்கொண்டார். அவள் டைப் அடிக்கும் ஒவ்வொரு கடிதத்திலும் அடியிலே ஒரு மூலையில் அதைப் பதித்தார். அந்த ஸ்டாம்பில் கண்ட வாசகம் இதுதான்: ''அவள் நன்றாய் டைப் அடிக்கமாட்டாள்; ஆனால் ரொம்ப அழகி.'' —மேயர் பெர்ஜெர், 'நியூ யார்க் டைம்ஸ்.'

வழிகாட்டும் தீபங்கள்

★

உலகத்திலே வெகுதூரம் அபிவிருத்தியான 'லைட் ஹவுஸ்'களைப் பெற்றிருப்பது நியூஜீலந்து. அந்த நாட்டுக் கலங்கரை விளக்கங்களைப்பற்றிய ரசமான சில விவரங்களைத் தருவது இந்தக் கட்டுரை.



வானிலை அறியும் கருவி (வெதர் கேஜ்). லைட் ஹவுஸ் காவலர் அதைக் கவனித்து, வானிலை இலாகா அதிகாரிகளுக்குத் தகவல் அனுப்புகிறார்.

உலகத்தில் தமாஷ், வேடிக்கை இவைகளைக் காட்டிப் பிழைப்பவர்களும் 'லைட் ஹவுஸ்' காவல் காப்பவர்களும் ஓரளவுக்கு ஒரே ரகத்தைச் சேர்ந்தவர்கள் தான். வேடிக்கை காட்டுபவர்கள், 'ஆட்டம் நடந்துகொண்டேயிருக்கவேண்டும்' என்பதில் அக்கறையாக இருப்பது போல் 'லைட் ஹவுஸ்' காவல் காப்பவர்களும் 'விளக்கு எப்போதும் எரிந்துகொண்டேயிருக்கவேண்டும்' என்பதில் கருத்தாக இருப்பார்கள். சில சமயங்களில் வாரக் கணக்கில் கடும் புயல் வீசுவதால் இவர்கள் தன்னந் தனியே கிடக்க நேருகிறது: சில சமயம் திடீரென ஜுரம் கண்டுவிடும்; இல்லாவிட்டால் எங்காவது காயம் பட்டுவிடலாம். யந்திரத்தில் கோளாறு காரணமாகவோ, மின்சார சப்ளையில் தடை ஏற்படுவதாலோ, அவ்வப்போது விளக்குகள் எரியாமல் போகலாம். என்ன நேர்ந்தாலும் சரி, இவர்கள் அநுசரிக்க வேண்டிய விதி ஒன்றுதான்: 'கடலை நோக்கி விளக்கு எப்போதும் ஒளிர்ந்து அபாயம் இருப்பதற்கு அறிகுறியாக வழிகாட்ட வேண்டும்.'

நியூ ஜீலந்திலுள்ள 'லைட் ஹவுஸ்' காவலாளர்கள், கடல் இலாகாவைச் சேர்ந்த மற்றச் சிப்பந்திகளைப் போலவே இந்தக் கொள்கையை விடாமல் கடைப்பிடித்துத்தான் வருகிறார்கள். 19-ஆம் நூற்றாண்டில் இந்த மாதிரி 'லைட் ஹவுஸ்'களை நிர்வகிக்கத் தொடங்

மூலம்: காமன்வெல்த் டுடே (ஆங்கிலம்: நம்பர் 48), தி ஸெண்ட்ரல் ஆபீஸ் அவ் இன்ஃபர்மேஷன், லண்டன்.

கியபோது நியூஜீலந்தைச் சுற்றி எக்கச் சக்கமாக வளைந்து செல்லும் கடலோரங்களில்-கற் பாறைகளோ மணலோ நிறைந்த பிரதேசங்களில் -பல கப்பல்கள் வழி துறை தெரியாமல் மூழ்கி விட்டன. இப்படிப் பல விதமாகச் சிரமப்பட்டு உண்டான அநுபவத்தின் விளைவுதான் இப்போது அங்கே நுணுக்கமாக அமைந்த விளக்கைக் குறித்த ஏற்பாடுகளெல்லாம். ரேடியோ மூலம் இயங்கும் கலங்கரை விளக்கம், ஒலி மூலம் சமிக்ஞை - இப்படிப் பல அதிசயங்களைக் காணலாம்.



ஒரு 'லைட் ஹவுஸ்'

நியூஜீலந்தில் 37 'லைட் ஹவுஸ்'கள் இருக்கின்றன. அவைகளைக் கவனிக்க அங்கங்கே காவலாளிகள் உண்டு. துறைமுகத்து விளக்குகளைத் தவிர 80 தனி விளக்கு அமைப்புகளும் உண்டு. இவைகளைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பு, துறைமுக இலாகாவைச் சேர்ந்தது.

முதலில் பாரஃபின் என்ணெயை இந்த விளக்குகளுக்குப் பயன்படுத்தி வந்தார்கள். இவைகளைக் கண்ணும் கருத்துமாய் எப்போதும் கவனித்து வரவேண்டும்; அடிக்கடி திரியை நெருடி ஒழுங்குபடுத்த வேண்டியிருக்கும். முன் சொன்ன தனி விளக்குகள் 80-க்கு மட்டும் அசெடிலின் பயன்படுத்துகிறார்களே யொழிய, மற்றக் கடற்கரை விளக்குகள் பெரும்பாலும் மின்சாரத்தால் எரிகின்றன. மின்சாரத் தலைமை நிலையங்களிலிருந்தும், இவைகளுக்கென்றே அமைத்த மின்சார உற்பத்தி யந்திரங்களிலிருந்தும், சில சமயம் பாட்டரியைக் கொண்டும் இவை ஒளி பெறுகின்றன. இவைகளில் பெரியவை 1000 வாட் விளக்குகள்; 25 லட்சம் காண்டில் பவர் அளவுக்கு ஒளி வீசுபவை.

மின்சார விளக்குகளாக மாற்றியதும் அநேகம் சிப்பந்திகளைக் குறைத்துவிட்டார்கள்; இப்போது பல 'லைட் ஹவுஸ்'களை ஒரே ஆள் கவனித்துக்கொள்கிறார். எப்போதும் விளக்குகளைக் கண்காணிக்க வேண்டுமென்ற அவசியமும் இல்லை. ஏதாவது கோளாறு ஏற்பட்டால் உடனே தானாகவே அபாய அறிவிப்பு மணி அடிக்கிறது. 'பல்பு' ஏதாவது பொசுங்கி அவிந்து விட்டால் தானாகவே இன்னொரு 'பல்பு' அந்த இடத்தில் பொருந்திக்கொண்டு,



ஒரு லைட் ஹவுஸின் உட்புறம். இதிலிருந்து புறப்படும் ஒளிக் கதிர்கள் 32–மைல் தூரத்தில் தெரியும்.

விளக்கு மறுபடியும் எரியத் தொடங்கும். சூரிய அஸ்தமனத்துக்கு அரை மணி நேரம் பின்னே ஏற்றிக்கொள்ளும்; சூரிய உதயத்துக்கு அரை மணி நேரம் முன்னே அணையும். பகல் வெளிச்சம் ஓரளவு குறையும்போது தாமாகவே ஏற்றிக்கொண்டு, மிகுதியாகும்போது தாமாகவே அணையும்படி 'ஸ்விச்' அமைப்புக்களும் உண்டு.

குக் ஜலசந்தியில் இருக்கும் 'பிரதர்ஸ்' (சகோதரர்கள்) என்ற விளக்கமைந்த 'லைட் ஹவுஸு'க்குப் போவதென்றால் மிகவும் சிரமமான காரியம். நட்ட நடுவே 'ராக்ஸ்' (பாறை) என்ற பகுதியில் இருப்பது இந்த 'லைட் ஹவுஸ்.' ஆட்களையும் அவர்களுக்கான சாமான்களையும் கப்பலிலிருந்து 'கிரேன்' மூலம் இறக்கும் 'லைட் ஹவுஸ்' நிலையங்களில் இதுவும் ஒன்று. இந்த 'ராக்ஸ்' என்ற பகுதியில் மூன்று சின்னச் சின்னத் தீவுகள் இருக்கின்றன. அடிக்கடி இங்கே ஜலசந்தி மூலம் கடுஞ் சூறாவளியும் புயலுமாக வீசுவதுண்டு.

பெண்கள் இங்கே காலந் தள்ளுவது மிகவும் சிரமம். நியூஜிலந்திலேயே இது ஒன்றுதான் முழுக்க முழுக்க ஆண்களே கண்காணித்து வரும் 'லைட் ஹவுஸ்.' ஆனால், பொதுவாகக் கடல் இலாகாவில் அவரவர் மனைவிமார் அங்கே தங்குவதாகச் சம்மதிக்கும்பட்சத்தில் மணமானவர்களையே 'லைட் ஹவுஸ்' காவலுக்கு நியமிப்பது என்று ஒரு விதி இருக்கிறது. இந்த 'லைட் ஹவுஸ்' அமைந்த இடங்களில் வசதிகள் எல்லாம் உண்டு. ஆனால் லைட் ஹவுஸோடு ஒன்றினாற்போல் வேறு எவரும் குடி இராத இடத்தில இவர்கள் தங்கும் விடுதிகள் தனியே இருக்கும்.

இதில் ஓர் அதிசயம் என்னவென்றால், இவர்களுடைய மனைவிமார் தங்கள் காலிலேயே நின்று அநுபவப்பட்டவர்கள்; பல விஷயங்கள் அவர்களுக்குத் தெரியும். ஏதாவது ஒரு காரியத்தில் ஈடுபட்டுக்கொண்டே இருப்பார்கள். சொந்தமாக ரேடியோ, புத்தகம் எல்லாம் வைத்திருக்கிறார்கள். கடலில் மீன் பிடிக்கவும், சில சமயம் நீந்தவுங்கூடச் செல்வதுண்டு. போக்கு வரத்து வசதி உள்ள இடங்களில் அவ்வப்போது தெரிந்தவர்கள் யாராவது வருவார்கள். 'லைட் ஹவுஸ்' காவலாளர்களுக்கு வருஷத்தில் ஒரு மாசம் விடுமுறை உண்டு. அப்போது எங்காவது நகரத்தில் போய் அவர்கள் காலந் தள்ளுவது வழக்கம். இருந்தாலும் மொத்தத்தில் நகரச் சந்தடியிலிருந்து, 'லைட் ஹவுஸ்' அமைந்திருக்கும் அமைதியான சூழ்நிலைக்கே திரும்புவதுதான் தங்களுக்குப் பிடித்திருப்பதாக இவர்களில் பெரும்பாலோர் சொல்லுகிறார்கள்.

துடி இடை நாகரிகம்!

நடுத்தர வயசுப் பெண் ஒருத்திக்குப் புதிய இடை வார்க் கச்சையைத் தந்து அணிந்துகொள்ளச் சொன்னான் ஜவுளிக்கடை ஆள். அவள் அணிந்தாள்.

"அம்மா, சௌகரியமாயிருக்கிறதா?" என்று கேட்டான் கடைக்காரன்.

"இழுத்து மூச்சு விட முடிகிறதா?"

"முடிகிறது."

"அப்படியானால், அம்மா, தங்களுக்கு இது சரி அல்ல; இன்னும் கொஞ்சம் சிறிசாயிருக்கவேண்டும்" என்றான் நாகரிகம் தெரிந்த ஜவுளிக் கடைக்காரன்.

—'யுனைட்டட் மைன் வொர்க்கர்ஸ் ஜர்னல்'

யாருக்கு வோட்டுரிமை இருக்கலாம்? யாருக்கு வோட்டுரிமை இருக்கக் கூடாது? இதற்கு நம் பெரியோர் வகுத்த விதிகள் ஆச்சரியமாயிருக்கின்றன!

ஆயிரம் வருஷத்துக்கு முன்னே தேர்தல்

எம். கே. ரங்கஸ்வாமி ஐயங்கார்

நம் நாட்டில் இப்போது பொதுத் தேர்தல் நடக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூட ஒரு தேர்தல் முறை வழக்கத்தில் இருந்து வந்தது என்றால் ரசமாகத்தானே இருக்கும்! அதில் வாக்குச் சீட்டுப் போடும் பெட்டிக்குப் பதில் மண் குடங்களைப் பயன்படுத்தினார்கள்; பதிவுச் சீட்டுக்குப் பதில் பனை ஓலைத் துண்டுகளைப் போடுவார்கள். இதற்குக் 'குடவோலைச் சீட்டு' என்று பெயர். இப்படி அந்த நாளில் நகரங்களிலும் கிராமங்களிலும் பேரவைகளைத் தேர்ந்தெடுப்பார்கள்.



வைகுண்டப் பெருமாள் கோயில்

உத்தரமல்லூர் என்று இப்போது வழங்கிவரும் உத்தரமேருச் சதுர்வேதி மங்கலத்தில் ஏழு கோயில்கள் உண்டு. ஒவ்வொன்றிலும் ரசமான விவரங்கள் அடங்கிய கல்வெட்டுக்களைக் காணலாம். பிரெஞ்சுக்காரரும் ஹைதரும் போரிட்டுச் சற்றே சீர்குலைந்த இடமாக இருந்தாலும் இன்னும் பழைய சின்னங்கள் சில அங்கே இருக்கின்றன.

ஊரின் நடுவில் பிரதானமான வீதியில் வைகுண்டப் பெருமாள் கோயில் இருக்கிறது. அதன் சுவர்களில் இரண்டு கல்வெட்டுக்களைக் காணலாம். முதல் கல்வெட்டு, சோழ அரசனான பராந்தகனுடைய ஆட்சியின் 12-ஆம் ஆண்டில் கி. பி. (919-இல்) பொறித்தது. இவனை மதுரையை வென்ற பரகேசரி வர்மன் என்று இதில் குறிப்பிட்டிருக்கிறது. இதில் ஊர்ப் பஞ்சாயத்துச் சபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பது சம்பந்தமான விதிமுறைகளைப்பற்றிய விவரத்தைக் காணலாம். இரண்டு ஆண்டுகள் கழித்து இந்த விதிகளைத் திருத்தினார்கள். இரண்டாம் கல்வெட்டில் இந்தத் திருத்தங்களைக் காணலாம். சரித்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்களுக்கு இவை நன்றாகத் தெரிந்திருந்தாலும், மற்றவர்களுக்கு மிகவும் புதுமையாகவும் ரசமாகவும் இருக்கும். இவற்றிலிருந்து சில பகுதிகளை இங்கே காணலாம்:

''ஸ்வஸ்தி ஸ்ரீ மதிரை (மதுரை) கொண்ட கோபரகேசரி வர்மர்க்கு (௧௨-ஆவது) யாண்டு உத்தரமேருச் (மேரூர்ச்) சதுர்வ்வேதி மங்கலத்து ஸபையோம்: இவ்வாண்டு முதல் தட்டனூர் மூவேந்த வேளான் இருந்து எங்களுக்கு. . ஸ்ரீமுகம் காட்ட ஸ்ரீமுகப்படி ஆஞ்ஞையால் வாரியமாக ஆட்டொருக்காலும் (ஆண்டுக்கு ஒரு முறை) ஸம்வத்ஸர வாரியமும் தோட்ட வாரியமும் ஏரி வாரியமும் இடுவதற்கு வியவஸ்தை செய்த பரிசாவது:—

''குடும்பு (தொகுதி) முப்பதாக முப்பது குடும்பிலும் அவ்வவக் குடும்பிலாரே கூடி

காப்பிரைட்: ஹிந்து (ஆங்கிலம்), சென்னை.



கோயில் முன் மண்டபம்

(1) கானிலத்துக்குமேல் இறை நிலமுடையான், (2) தன் மனை யிலே அகமெடுத்துக்கொண் டிருப்பானை, (3) அறுபது பிரா யத்தின் கீழ் முப்பத்தைந்து பிராயத்தின் மேற்பட்டார் மந்திரப் பிராம்மணம் வல் லார் ஓதுவித்து அறிவானைக் குடவோலை இடுவதாக, (4) அரைக்கால் நிலமே உடை யானுயிலும் ஒரு வேதம் வல்லானுய் நாலு பாஷ்யத்தி லும் ஒரு பாஷ்யம் வக்கணித் தறிவான் அவனையும் குட வோலை எழுதிப் புக இடு வதாகவும், (5) அவர்களிலும் காரியத்தில் நிபுணராய் ஆசாரமுடையாரானுே ரையே கொள்வதாகவும், (6) அர்த்த சௌசமும் ஆத்ம சௌசமும் உடைய ராய் மூவாட்டின் (மூன்று ஆண்டின்) இப்புறம் வாரியம் செய்திலாதாரைக் கொள்வ தாகவும் (இவர்கள் தகுதி யுள்ளவர்கள்), எப்பேர்ப் பட்ட வாரியங்களும் செய்து கணக்குக் காட்டாதே இருந் தாரையும் இவர்களுக்குச் சிற்றவைப் பேரவ்வை மக்களையும் இவர்களுக்கு அத்தை மாமன் மக்களையும் இவர்களுக்குத் தாயோடுடப் பிறந்தானையும், இவர்கள் தமப்பனுேடுடப்பிறந்தானை யும், தன்னுேடுடப்பிறந் தானையும், இவர்களுக்குப் பிள்ளை கொடுத்த மாமனை யும், இவர்கள் பிராமணி யோடுடப் பிறந்தானையும், தன்னுேடுடப் பிறந்தாளை வேட்டானையும், உடப் பிறந்தாள் மக்களையும், தன் மகளை வேட்ட மரு மகனையும், தன் தமப்பனை யும், தன் மகனையும் ஆக இச் சுட்டப்பட்ட பந்துக் களையும் குடவோலை எழு திப் புக இடப் பெருதவராக வும்...

''அகம்மியா கமனத்தி லும் (கூடத்தகாதவரைக் கூடுவதிலும்) மகாபாதகங் களில் முன்படைந்த நாலு மகாபாதகத்திலும் எழுதப் பட்டவரையும், இவர்களுக் கும் முன் சுட்டப்பட்ட இத்துணை பந்துக்களையும் குடவோலை எழுதிப் புக இடப் பெருததாகவும், ஸம் ஸர்க்கபதிதரை (கூட்டுறவால் தாழ்ந்தார்) பிராயச் சித்தம் செய்யுமளவும் குடவோலை இடாததாகவும் ஸாஹஸியா யிருப்பாரையும் குடவோலை எழுதப் பெருதாராகவும், பரத்திரவியம் அபகரித்தானை யும் குடவோலை எழுதிப் புக விடப் பெருதாராகவும், எப்பேர்ப்பட்ட கையூட்டும் கொண்டான் க்ருத பிராயச் சித்தஞ் செய்து சுத்த ராஞுரையும் அவ்வவர் பிரா ணுந்திகம் வாரியத்துக்குக் குட வோலை யெழுதிப் புகவிடப் பெருததாகவும், மகா பாத கஞ் செய்து பிராயச்சித்தஞ் செய்து சுத்தராஞுரையும் கிராம கண்டகராய் பிராயச் சித்தம் செய்து சுத்தராஞுரை யும் அகம்மியா கமனம் செய்து பிராயச்சித்தஞ் செய்து சுத்தராஞுரையும் ஆக இச் சுட்டப்பட்ட அனைவ ரையும் பிராணுந்திகம் வாரி யத்துக்குக் குடவோலை எழுதிப் புகவிடப் பெருததாக வும் (இவர்கள் தகுதியற்றவர் கள்)..''

இந்தக் கல் வெட்டுக்களின் வாசகத்திலே, அபேட்சகராக நிற்பவரின் தகுதிகளைப்பற்றியும் தேர்தல் நடைமுறை பற்றியும் கருத்து வேற்றுமை ஏற்பட்டிருக்க வேண்டும். இதனால்தான் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னால் மேலும் விவரமாக இவைகளைப் பற்றியும் பதிவுச் சீட்டுப் போடும் முறையைப்பற்றியும் தெரிவிக்க வேண்டி யிருந்தது. இரண்டாம் கல்வெட்டில் (கி. பி. 921) விரிவாக இதைக் காணலாம்:



கல்வெட்டுக்கருகே கடைகள்

''ஆக இச்சுட்டப் பட்ட இத்தனைவரையும் நீக்கி இம் முப்பது குடும்பிலும் குடவோலைக்குப்பெயர் தீட்டி இப் பன்னிரண்டு சேரியிலுமாக இக்குடும்பும் வெவ்வேறே வாயோலை பூட்டி முப்பது குடும்பும் வெவ்வேறே கட்டிக் குடம்புக இடுவதாகவும், குடவோலை பிறிக்கும் போது மகாசபைத் திருவடியாரை ஸபால விருத்தம் நிரம்பக் கூட்டிக்கொண்டு அன்றுள்ளூரில் இருந்த நம்பிமார் ஒருவரையும் ஒழியாமே, மகாசபையிலே, ஊர் மண்டகத்திலே, இருத்திக்கொண்டு அந் நம்பிமார் நடுவே அக் குடத்தை நம்பிமாரில் விருத்தரா யிருப்பா ரொரு நம்பி (முதியவர்) மேல் நோக்கி எல்லா ஜனமும் காணுமாற்றால் (குடத்திலே முன்பே கள்ளத்தனமாய் ஓலை போடப் பட்டதோ என்ற ஐயம் நீங்க இந்த முன் ஜாக்கிரதை) எடுத்துக்கொண்டு நிற்க, பகலே யந்தரமறியாதான் ஒரு பாலகனைக் கொண்டு ஒரு குடும்பு வாங்கி மற்றொரு குடத்துக்கே புகவிட்டுக் குலைத்து, அக் குடத்தில் லோரோலை வாங்கி மத்தியஸ்தன் கையிலே குடுப்பதாகவும், அக்குடுத்தவோலை மத்தியஸ்தன் வாங்கும்போது அஞ்சு விரலும் அகல வைத்து உள்ளங் கையிலே ஏற்றுக் கொள்வானாகவும், அவ் வேற்று வாங்கின ஓலை வாசிப்பானாகவும்,

''வாசித்த அவ்வோலை அங்குள மண்டகத் திருந்த நம்பிமார் எல்லாரும் வாசிப்பாராகவும், வாசித்த அப் பெயர் தீட்டுவதாகவும், இப் பரிசே முப்பது குடும்பிலும் ஓரோர் பெயர் கொள்வதாகவும், இக்கொண்ட முப்பது பெயரிலும் தோட்டவாரியமும் ஏரிவாரியமும் செய்தாரையும் வித்தியா விருத்தரையும் வயோவிருத்தர்களையும் ஸம்வத்ஸர வாரியராகக் கொள்வதாகவும், மிக்கு நின்றருள் பன்னிருவரைத் தோட்ட வாரியங் கொள்வதாகவும், நின்ற அறுவரையும் ஏரிவாரியமாகக் கொள்வதாகவும், இவ்விரண்டு திறத்து வாரியமும் கரை காட்டிக் கொள்வதாகவும், இவ்வாரியம் செய்கின்ற மூன்று திறத்து வாரியப் பெருமக்களும் முந்நூற்று அறுபது நாளும் நிரம்பச் செய்து ஒழிவதாகவும்,

''வாரியஞ் செய்யா நின்றாரை அபராதங் கண்ட போது அவனை யொழித்துவதாகவும், இவகள் ஒழிந்த அனந்தரமிடும் வாரியங்களும் பன்னிரண்டு சேரியிலும் தர்ம்ம கிருத்தியங் கடை காணும் வாரியரே மத்தியஸ்த

ரைக் கொண்டு குறி கூட்டிக் குடுப்பராகவும், இவ் விவஸ்தையோலைப்படியே குடவோலை பரித்துக்கொண்ட வாரியம் இடுவதாகவும்,

''பஞ்ச வாரியத்துக்கும் பொன் வாரியத்துக்கும் முப்பது குடும்பிலும் குடவோலைக்குப் பெயர் தீட்டி, முப்பது வாயோலைக் குடம் புக இட்டு, முப்பது குடவோலை பறித்து முப்பதிலும் பன்னிரண்டு பெயர் பரித்துக் கொள்வதாகவும், பரித்த பன்னிரண்டிலும் அறுவர் பொன் வாரியமும், அறுவர் பஞ்சவார வாரியமும் ஆவனவாகவும்,

''பிற்றையாண்டும் இவ் வாரியங்களும் குடவோலை பரிக்கும்போது இவ்வாரியங்களுக்கு முன்னம் செய்த குடும்பன்றிக்கே, நின்ற குடும்பிலே கரை பரித்துக்கொள்வதாகவும்,

''கழுதையேறிஞரையும், கூடலேகை (கள்ளக் கையெழுத்து) செய்தானையும் குடவோலை எழுதிப் புக இடப் பெறுததாகவும் மத்தியஸ்தரும் அர்த்த செள்சமுடையானே கணக்கெழுதுவானுகவும், கணக்கெழுதினுன் கணக்குப் பெருங்குறிப் பெரு மக்களோடுகூடக் கணக்குக் காட்டி, சுத்தன் ஆச்சதின் பின்னன்றி, மற்றுக் கணக்குப் புகப் பெருதானுகவும், தான் எழுதின கணக்குத் தானே காட்டுவானுகவும் மற்றுக் கணக்கர் புக்கு ஒடுக்கப் பெருதார் ஆகவும்..''

மேற்கண்ட கல்வெட்டுக்களிலிருந்து, 'ஆட்சி முறை ஒன்று ஏற்கனவே இருந்தது; அரசனுடைய ஸ்ரீமுகம் அதன் வளர்ச்சியில் ஓர் அம்சமே' என்று தெரிகிறது. இந்தக் காலத்திலே ஜனநாயக ஆட்சியில் நடக்கும் நிர்வாக முறைக்கும் அந்தக் காலத்துச் சமூகத்தில் ஜாதி, மதச் சார்போடு அமைந்திருந்த முறைக்கும் அதிக வித்தியாசம் உண்டு; இருந்தாலும், ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட வேண்டும்; அரசனுடைய ஸ்ரீமுகத்தைக்கூடச் சபையார் ஏற்கும்படி நிர்ப்பந்தம் ஏதும் இல்லை. அரசனுடைய பிரதிநிதியின் முன் சபையார் ஸ்ரீமுகத்தை அங்கீகரித்துத் தீர்மானமாகக் கொண்டு வந்து ஆதரிப்பதே வழக்கம். அங்கத்தினராக நியமனம் பெறுபவர் குறைந்தபட்சம் இன்ன அளவு கல்வி அறிவு உடையவராகவும் சொத்துடையவராகவும் இருந்தாலேகூடப் போதும் என்று வரையறை செய்திருந்தார்கள். சந்தேகப்படும்படியான நடத்தையுள்ளவர்களையும் கொலை களவு முதலிய குற்றங்களில் ஈடுபட்டவர்களையும் அபேட்சகராக அநுமதிப்பதே இல்லை; மிகவும் கண்டிப்பாக அவர்களை விலக்கிவிடுவார்கள். ஏற்கனவே அங்கத்தினராக இருந்து கணக்கு வழக்கு விவரங்களைச் சரிவர ஒப்பிக்காதவர்களையும் மீண்டும் நியமனம் செய்வதில்லை. ஏறக்குறைய ஒரே மாதிரி தகுதியுள்ள அபேட்சகர்கள் பலர் நின்ருல் குடவோலை முறையினுல் இவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுப்பார்கள். இதனுல் தேர்ந்தெடுக்கப் பெருத அபேட்சகர்களுக்கு வீண் மனத் தாங்கல் ஏற்பட வழி இல்லை. இதே முறையை இப்போதுள்ள அரசியல் கட்சிகளும் சௌகரியமாக ஏற்று அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கலாம். இந்தச் சபையார் மிகவும் பொறுப்போடு நடத்திவந்த அலுவல்களையும், இவர்கள் ஊராருக்கு வேண்டிய சௌகரியங்களைப் பற்றி அக்கறை எடுத்துக்கொண்டதையும் இந்தக் கல்வெட்டுக்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

(கி. பி. 784-இல்) பல்லவ அரசனு தந்திவர்மனுடைய ஆட்சியின் 9-ஆம் ஆண்டில் இந்தச் சபை தனிப்பட அளித்த தர்ம சொத்திலிருந்து கிடைக்கும் வருவாயை உத்தரமேரூருக்கு அருகிலுள்ள வைரமேகனேரியை ஒவ்வோர் ஆண்டும் தூர் எடுத்துச் சீர் செய்வதற்கென்றே பயன்படுத்துவது என்று உத்தரவிட்டது. (இந்த ஏரியினுல் சர்க்காருக்கு ஆண்டு

ஒன்றுக்கு ரூ. 30,000 கிடைக்கிறது; இன்னும் இந்த ஏரியில் தூர் எடுத்துச் சீர் செய்ய வேண்டியிருக்கிறது.)

கி. பி. 923-இல் சோழ அரசன பராந்தகன் ஆட்சியின்போது பாட்டை ஒன்று மிகவும் சீர்கெட்டு விட்டது. சபையார் குடியானவர்களிடமிருந்து நிலம் வாங்கி அதைப் புதுப்பித்து அகலமாக்கினார்கள்.

மூன்றும் குலோத்துங்க சோழனுடைய காலத்தில் தேவதாசி ஒருத்தி இங்கிருக்கும் வைகுண்டப் பெருமாள் கோயிலில் சில பகுதிகளைப் புதிதாகக் கட்டுவித்தாள். இதை உத்தேசித்து அவளுக்கு இந்த ஊர்ச் சபையார் கோயில் தர்மகர்த்தர்களையும் கலந்து கொண்டு சில பரம்பரை உரிமைகளை வழங்கினார்கள்.

யார் சரி?

அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டைப்பற்றி ஒரு துணுக்கு உண்டு.

ஒரு ஸெனேட்டர் தமது கட்சியை அவரிடம் எடுத்துச் சொன்னார். ''நீர் சொல்வது சரி'' என்றார் ஜனாதிபதி.

அந்த ஸெனேட்டரை எதிர்த்து மற்றொரு ஸெனேட்டர் தம் கட்சியைச் சொன்னார். ''நீர் சொல்வது சரி'' என்றார் ஜனாதிபதி.

பக்கத்திலே நின்றுகொண் டிருந்தாள் ஜனாதிபதியின் மனைவி. ''என்ன இது! இரண்டு பேரும் ஒருவருக்கு ஒருவர் நேர் எதிரிடையாகப் பேசுகிறார்கள். இரண்டு பேர் சொல்வதும் சரி என்று நீங்கள் எப்படிச் சொல்லமுடியும்? முடியாது'' என்றாள் அவள்.

''நீ சொல்வது சரி'' என்றார் ஜனாதிபதி.

—'ஃப்ரீ இந்தியா'

காணமல் போன ஜோடு

இரண்டரை வெள்ளிக் காசு பெறுமானமுள்ள ஜோட்டைப் பக்கத்தில் வைத்துவிட்டு, படகில் போய்க்கொண் டிருந்தார் ஒரு கனவான். பக்கத்திலே பழங்குற்றவாளி ஒருவன் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். ஜோட்டைக் கனவான் திடீரென்று ஓரிடத்தில் பார்த்தார். காணவில்லை. திருட்டுப் போய்விட்டதென்று, பழங் குற்றவாளியை ஜாடையாகத் திட்டினார். அப்புறம் ஜோடு அகப்பட்டுவிட்டது. பழங்குற்றவாளியிடம் கனவான் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

அவன் சொன்னான்: ''பரவாயில்லை. தவறு இரண்டு தரப்பிலுந்தான் நேர்ந்திருக்கிறது. நீங்கள் என்னைத் திருடன் என்று நினைத்துவிட்டீர்கள்; நான் உங்களைக் கனவான் என்று நினைத்துவிட்டேன். இதுதான் விஷயம்.''

—'வெல்டு ப்ரீஸெஸ்', தென்னாப்பிரிக்கா.

பக்திப் பாடல் பாடும் துறவிகளைப்போலவே வேடிக்கைப் பாடல் பாடும் துறவிகளும் உண்டு.

சட்கா கானம்

சித்தரஞ்சன் தேவ்

'பாவாயியா கானம்' என்பது வடக்கு வங்காளப் பகுதிகளில் வாழும் மக்களுக்குப் பழக்கமான ஒரு வகை நாடோடிப் பாட்டு. இந்தப் பாடல்களில் உயர்ந்த கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன. 'பாவுதியா' என்ற சம்பிரதாயத்தார் இப்படிப் பாடிக்கொண்டே ஊர் ஊராகச் செல்வது வழக்கம். 'பாவுல்' என்ற சம்பிரதாயத்தாரைப் போலவே இவர்களும் வீடு வாசல், மனைவி மக்கள் இல்லாமல் துறவிகளைப் போலச் சுற்றுபவர்கள்தான். ஆனால் ஒரே ஒரு வித்தியாசம்: பாவுல்கள் காவி உடுத்துகிறார்கள்; பாவுதியாக்கள் சாதாரண உடை அணிகிறார்கள்; இவர்களில் ஹிந்து-முஸ்லிம் என்ற வேறுபாடே இல்லை; இரு சாராருடனும் கலந்து பழகுகிறார்கள். காரணம், இவர்கள் உருவ வழிபாடு செய்வதில்லை.

பரம்பொருள் சம்பந்தமாகப் பாடிக்கொண்டே இவர்கள் ஊர் ஊராகச் செல்லும்போது நடுநடுவே மக்களுக்குச் சலிப்புத் தட்டாதிருப்பதற்காகத் தமாஷான உலக விஷயங்களைப்பற்றியும் பாடுவார்கள். இந்த மாதிரி பாடல்களை இங்கே 'சட்கா கானம்' என்கிறார்கள்.

'பாவாயியா கானம்' முக்கியமாகக் குச் பிஹார், தினஜ்பூர், ரங்பூர், ஜல்பாயிகுடி முதலிய இடங்களில்தான் மிகுதியாக வழக்கத்தில் இருந்து வருகிறது. குச் பிஹாரில் பாமர மக்கள் இதைச் சர்வ சகஜமாகப் பாடி வருகிறார்கள். ஆனால் தினஜ்பூர், ரங்பூர்ப் பகுதிகளில் இந்த மாதிரி பாடல்களைப் பாவுதியா சம்பிரதாயத்தார் மட்டுமே பாடுகிறார்கள்.

ஆண்டவனான தலைவனை அடைய வேண்டுமானால் வீடு வாசலைத் துறந்து அவனையே தியானம் செய்ய வேண்டும்; அப்போது தன்னைத் தலைவியாகவும் அவனைத் தலைவனாகவும் கற்பனை செய்துகொண்டு துதிப்பது எங்கும் இயல்பு. அவனையே பற்றுக்கோடாகக் கொண்டு, எந்த இடையூறு வந்தாலும் அதைச் சமாளிப்பதுதான் பக்தனாகிய ஒரு தலைவியின் கடமை. இதுவே பாவுதியாக்களின் பாடல்களிலுள்ள கருத்தும். இவர்கள் பாடும் 'வண்டிக்காரன் பாட்டு', 'ஆடு மேய்ப்பவன் பாட்டு' இப்படிப் பல பாடல்களிலும் இந்தக் கருத்துப் பொதிந்திருப்பதைக் காணலாம்.

ஆனால், 'சட்கா கானம்' இந்தப் போக்கில் இராது. உயர்ந்த கருத்துச் செறிந்த பாடல்களை அதிகம் கேட்டுச் சலித்துச் சோர்வுற்ற மக்களுக்கு இது களிப்பூட்டும் வகையில் அமைந்திருக்கிறது. குடும்பத்திலுள்ள இன்ப துன்பங்களையும் மானாபிமானத்தையும் பொரு

காப்பிரைட்: ப்ரபாஸி (வங்காளி), கல்கத்தா.

ளாகக் கொண்டது 'சட்கா கானம்'. சில சமயம் சிருங்கார ரசமும் அதில் இருக்கும். ஆனாலும் அப்படி ஒரேயடியாக அளவுக்கு மீறிப் போய் விடாது.

ஒரு பாடலின் பொருள் இது: பணக்கார வீட்டு மருமகள் ஒருத்தி புக்ககம் போயிருக்கிறாள். 'நாம் பெரிய முதலாளியின் மகள்; நாம் போய் இங்கே வேலைக்காரி போல் அடங்கி ஒடுங்கி இருப்பதாவது!' என்ற செருக்கு அவளுக்கு. அதனால் மாமியாரைப் பார்த்து,

''அடுக்களைப் பக்கம்
அடியெடுத் தேவைத்
துடுத்திடும் சேலையின்
ஒழுங்கைக் கெடவிடேன்.
சாணியைத் தொட்டால்
சாப்பிடும் போதுகை
மாமியே, நாறும்;
மருமகள் யாரென
நினைத்தாய்? நானே
நேர்த்தியாய் வளர்ந்தவள்!
மனைவியாய் வரினும்
மதிப்பாய் முன்னே
பிறந்த வீட்டில்
பெற்றோர் சீரொடும்
சிறப்பொடும் வளர்த்த
செல்விநான் அறிவாய்!''

என்றெல்லாம் கேட்கிறாள்.

இந்த மாதிரி மருமகளுக்கு ஏற்றபடி அவள் கணவனும் அடங்கி நடப்பவனாக இருந்துவிடுவது உலக இயல்புதான். இந்தக் கவிகள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருந்தாலும் ஒரு விஷயத்தைத் தமாஷாக வெளியிடப் போதுமான உலக அறிவு இவர்களுக்கு உண்டு. ஆகவே, நாட்டுப் புறத்தைவிட்டு நகரத்துக்குச் செல்ல விரும்பும் தம்பதிகள் இப்படிப் பாடுவதாக இன்னும் ஒரு பாட்டில் வெளியிடுகிறார்கள்:

''பாழாய்ப் போன
பட்டிக் காட்டில்
வாழேன் நான்இனி;
வாராய் பட்டணம்
போவோம்; அங்கே
புதுமையாய் வாழ்வோம்.
ரூபாய் கொடுத்தால்
ரோஜா பூக்கிற
மாடிப் பங்களா
மனம்போல் கிடைக்கும்;
வாடி, போகலாம்,
மனத்துக் கினியாய்!''

மாமி மட்டுமின்றி மாமனார், நாத்தி, ஓரகத்தி, கணவன் இவர்களுக்கிடையில் துன்பமுற்று, குழந்தையையும் வேறு இழந்து தவிக்கும் மருமகளின் முறையீட்டைக் கேட்டால் கல் மனமும் உருகும்:

''மாமனாரோ நோஞ்சல்;
மைத்துனரோ பிச்சு;
மாமி சுடுமூஞ்சி;
மணந்தவரோ முரடு;
நாத்திஇங்கே குந்தி
நாலுவருஷ மாச்சு!
நேர்த்தியான மகன்போய்
நிதமும்வாட லானேன்!
ஆரைநம்பி வாழ்வேன்?
ஆண்டவனே! நெஞ்சில்
ஈரமுண்டோ ஐயா!
ஏதுசெய்வேன் சொல்வாய்?''

ஆசை நாயகியிடம் மிதமிஞ்சிய மோகம் கொண்டு அலையும் காமுகனை குடியானவன் ஒருவனைப் பற்றிய பாட்டில் அந்தப் பக்கம் கிராம மக்களிடையே உள்ள சில பழக்க வழக்கங்கள் தெரியும்.

இந்தக் குடியானவன் தன் மனைவி என்ன சொல்லியும் கேளாமல் ஒரு நாள் ஆசைநாயகியின் வீட்டுக்குப் புறப்படுகிறான்: அப்போது மனைவி,

''வீட்டை விட்டு வெளியில் எங்கே
நாட்டம் சொல்வீர் நாயக ரேநீர்?
ஆண்டவன் பேரில் ஆணை; இன்று
கூண்டில் கறுப்புக் கோழி முட்டை
இட்டதால் வெளியே ஏன்புறப்
பட்டீர்?
மட்டிலாத் துன்பம் வந்திடும்
இதனால்..''

ஆனால் அந்தக் குடியானவன் அவள் பேச்சைக் கேட்கவில்லையாம்! ஆசை நாயகியின் வீட்டுக்கு அன்று போய்ப் பார்க்கலானான். அங்கே விருந்தாளிகள் அநேகம் பேர் வந்திருக்கிறார்கள். ஆகவே,

மறுநாள் இருட்டியதும் ஆசை நாயகியின் வீட்டுப் புழக்கடையில் போய்ச் சமையல்கட்டு ஜன்னலுக் கருகில் இருக்கும் வாழை மரத் தடியில் ஒளிந்திருக்கிறான். அப்போது அவன் ஆசைநாயகி சுட்ட கஞ்சியை ஜன்னல் வழியாக வடிக்கிறாள். பாவம், அது அவன் தலையிலும் உடம்பிலும் கொதிக்கக் கொதிக்க வழிகிறது. அவன் துடிதுடிக்கிறான். உரக்கக் கத்தினாலோ ஆபத்து; கள்ளன் என்று பிடித்துவிடுவார்கள். ஆகவே, பல்லைக் கடித்துக்கொண்டு அந்த இடத்தை விட்டு ஓடி வீட்டுக்கு வந்து, சுட்ட காயத்தில் தேங்காய் எண்ணெய் தடவிக் கொள்கிறான்.

தினாஜ்பூர், ரங்பூர்ப் பகுதிகளில் வாழும் குடியானவர்கள் கறுப்புக் கோழி முட்டை இட்ட அன்று வீட்டை விட்டு வெளியே செல்ல மாட்டார்கள்.

இப்படி அன்றாடம் நடக்கும் பல விஷயங்களை ரசமாக இந்தப் பாவுதியாக்கள் பாடி, மக்களை மகிழ்விக்கிறார்கள்.

அதிருஷ்டம்

பல வருஷங்களுக்கு முன்னே இலக்கிய ஆராய்ச்சிக்காக எனக்கு டாக்டர் பட்டம் கிடைத்தது. எனக்கு அதில் வெகு பெருமை. கையெழுத்தெல்லாம் 'டாக்டர் லீக்காக்' என்றே போடுவேன். எதற்கெடுத்தாலும் 'டாக்டர்' பட்டத்தை விடமாட்டேன். ஒரு சமயம் கீழ்நாட்டுக்குக் கப்பலிலே பிரயாணியாய்ச் சென்றேன். 'டாக்டர்' பட்டத்தோடேயே டிக்கட் வாங்கினேன். என் அறையில் போய் உட்கார்ந்து, மூட்டை முடிச்சுகளைச் சரி பார்த்துக்கொண் டிருந்தேன். கப்பல் உக்கிராண அதிகாரி வந்து கதவைத் தட்டினாள்.

''நீங்கள் டாக்டர் லீக்காக் இல்லையா?''

''ஆமாம்.''

''மாலுமியின் வணக்கத்தை உங்களுக்குத் தெரிவிக்கச் சொன்னார். கொஞ்சம் தயை செய்து என்னோடு வரவேண்டும். என் தோழியின் காலைக் கொஞ்சம் பார்க்கவேண்டும், டாக்டர்.''

'பேஷ்! நமக்கு வைத்தியர் வேலை வந்திருக்கிறது; பார்க்கலாம்' என்று நினைத்துக் குதூகலமாய் ஓடினேன். ஆனால், எனக்கு அந்த அதிருஷ்டம் இல்லை. வேறொரு டாக்டர் எனக்கு முன்னே அங்கே போய்ச் சேர்ந்துவிட்டார். அந்த ஆசாமி சமயப் புலமைக்காக டாக்டர் பட்டம் பெற்றவர்.

—ஸ்டீஃபன் லீக்காக்

உண்மையும் பொய்யும்

''உண்மையை நம்புவதை விட அதி சீக்கிரத்தில் பொய்யை மனிதர்கள் நம்புகிறார்கள். சோதனையில் இது புலனாயிற்று'' என்று ஒரு மனத்தத்துவ சாஸ்திரி சொல்கிறார். உண்மை கட்டுக்கதையை விட அதிசயமாயிருக்கிறது; இதனால்தான் அதை நம்ப முடியவில்லை.

—'டெலிலேட்ஸ்'

பாரத நாடெங்குமே இசை என்பது பக்திக்கு ஒரு சாதனம்.
பக்திப் பாடல்களை வடநாட்டில் இயற்றிய ஒரு மகான்—

கீர்த்தனை பாடிய ஹரிதாசர்

டி. ஜி. வியாஸ்

தென்னிந்தியாவில் பழமையான கீர்த்தனகாரர்கள் யார் என்ற கேள்விக்கு, உடனே பளிச்சென்று பயபக்தியோடு பதில் வருகிறது, ''தியாகராஜர், தீட்சிதர், சியாமா சாஸ்திரி'' என்று.

வட நாட்டிலோ இந்த மும்மூர்த்திகளோடு ஒப்பிடும்படியான பழைய கீர்த்தனகாரர்களைப்பற்றி இன்னும் சரியாக அறிய முடியவில்லை. இந்தக் கீர்த்தனகாரர்கள் பழங்காலத்தில் வாழ்ந்தவர்களாக மட்டுமல்லாமல் இசைத்துறையில் புதிய சம்பிரதாயத்தைத் தோற்றுவித்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

இத்தகைய பழமையான வட நாட்டுக் கீர்த்தனகாரர்களுள் ஹரிதாசர் முதன்மையானவர். அக்பருடைய சபையில் புகழ் பெற்ற பாடகராக விளங்கிய தான்ஸேன், ஹரிதாசரின் சிஷ்யர்.

ஹரிதாசர் கி. பி. 1481-இல் பிருந்தாவனத்துக்கு அருகில் ராஜாபுர் என்ற ஊரில் பிறந்தார். ராதா கிருஷ்ணனை வழிபட்ட ஸ்வாமிகள், ராதையின் அவதார தினமான பாத்திரபத சுக்கில அஷ்டமியன்று பிறந்தார். அவர் சாதியில் ஸநாட்ய அந்தணர். இன்னும் அந்தப் பக்கத்தில் இந்த வகுப்பார் ஏராளமாக இருக்கிறார்கள். ஹரிதாசருடைய தந்தையின் பெயர் கங்காதரர்; தாய் சித்திரா தேவி.

நிம்பார்க்க சம்பிரதாயத்தைச் சார்ந்த குரு ஆசுதேவிதேவஜி, ஹரிதாசருக்குப் பக்தி மார்க்கத்தை உபதேசித்தார். தமது இருபத்தைந்தாவது பிராயம் ஹரிதாசர் குடும்பத்தோடு இருந்தார். அதற்குள் அவர் சம்ஸ்கிருதமும் புராணங்களும் வேதாந்தமும் இசையும் பயின்றார். ராதாகிருஷ்ணனைத் தியானிக்கும்போது அவர் இந்த உலகத்தையே நினையாது மெய்ம்மறந்திருப்பார். இருபத்தைந்தாவது பிராயத்தில் அவர் துறவறம் ஏற்றார். ராஜாபுரை விட்டு அவர் பிருந்தாவனத்தில் நிதிவனம் என்ற தனிமையான அழகிய இடத்தில் வந்து தங்கினார். தம்மைக் கண்ணனின் தோழியாகவும் நாயகியாகவும் பாவித்துக்கொண்டு அவர் பாடிய இன்னிசைப் பாடல்கள் பிருந்தாவனம் எங்கும் எதிரொலித்தன. அருமையான வேதாந்தக் கருத்துக்களையும் சிறந்த பாட்டுக்களையும் உலகுக்கு வழங்கியவண்ணம் அவர் தமது தொண்ணூற்றைந்தாவது பிராயம் வரையில் வாழ்ந்திருந்தார்.

இந்த வாக்கேயகாரரின் பாடல்கள் தர்பாரி முறையில் அமைந்தவை அல்ல. அந்தக் காலத்தில் துருவபதம் தமார் ரீதியில் பாடுவது வழக்கமாக இருந்தது. அந்தக் கஷ்டமான முறையை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவந்தார் ஹரிதாசர். அவருடைய கீர்த்தனைகள் சௌதாளம், ஜாபம், தமார் முதலிய தாளங்களில் அமைந்தவை.

அவருடைய ராகங்கள் பழமையானவை; சுத்தமானவை. இன்ன நேரத்தில் இன்ன ராகம் பாட வேண்டும் என்னும் வரையறைக்கு ஏற்ப, ரஸபாவங்கள் நிறைந்த கிருஷ்ண சரித வரலாறுகளை அவர் பாடியிருக்கிறார். அவருடைய சிஷ்யர்களில் முக்கியமானவர்கள் பைஜூ பாவரா, கோபாலலால், மதனராய், ராமதாஸ், திவாகர பண்டிதர், சோம பண்டிதர், ராஜா சங்கசேனர், தான்ஸேன் ஆகியவர்கள்.

பைஜூ, தான்ஸேன், ராமதாஸ் முதலியவர்கள் கோயிலில் பாடும் முறையை விட்டு, அரசவைகளில் பாடிப் புகழ் பெற்றார்கள்.

காப்பிரைட்: இந்தியன் ரெவ்யூ (ஆங்கிலம்: ஜனவரி '57), சென்னை-1.

ஹரிதாசரின் வேதாந்தக் கருத்துக்களும் பக்தியும் அவர்களுடைய பாடல்களிலும் இடம் பெற்றன. ஆனால் ஸ்வாமிகளோ தமது இருப்பிடத்தை விட்டு எங்குமே போகவில்லை. அவருடைய இனிமையான கவிதைகளைப் பருக ஆயிரமாயிரம் மக்கள் நிதிவனத்தில் வந்து குழுமுவார்கள். ராஜா ராமசந்திர பதேலரும், அக்பர் பாதுஷாவும் இந்த இசை நிதியைக் காண நிதிவனத்துக்கு வந்தார்கள்.

ஹரிதாசரின் பாடல்களை இப்போது அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். வைஷ்ணவக் கோயில்களில் இவற்றை இப்போதும் இசையோடு பாடுகிறார்கள். இந்தப் பாடல்களில், 'ஸ்ரீ ஹரிதாஸ்கே ஸ்வாமீ சியாம்' முத்திரை இருக்கும். நானூறு ஆண்டுகளாக இவற்றைக் கோயில்களில் பாடும் பத்ததியைப் பரம்பரையாகக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். இந்தச் சிறந்த இன்னிசைக் கீர்த்தனங்கள் பாரத நாடு முழுவதுக்கும் பொதுவானவை. ஹரிதாசரின் பிறந்த நாளை ராதாஷ்டமியன்று நாடெங்கும் கொண்டாடுவதே, அந்தப் பக்த கவிக்கு நாம் செய்யக்கூடிய ஏற்ற கைம்மாறுகும்.

மூட நம்பிக்கைகள்

நம் ஒவ்வொருவருக்குமே பரம்பரையாய் வந்த மூட நம்பிக்கைகள் உண்டு; சொந்த மூட நம்பிக்கைகளும் உண்டு.

கிரேக்க நாட்டுப் பைதாகரஸ் ஒரு தத்துவதரிசி; கிறிஸ்துவுக்கு முந்திய ஆறும் நூற்றாண்டில் வாழ்ந்தவர். ''சந்திரனைப் பார்த்து விரலைச் சுட்டிக்காட்டாதே. காட்டினால், அப்படியே இற்று விழுந்துவிடும்'' என்றார்.

இன்னொன்றும் அவர் சொல்வதுண்டு. "காண்டா மிருகத்தின் உடலைப் பூமிக்குள் புதைத்துவிட்டால், புதைத்த இடத்தில் இடி விழவே விழாது'' என்றார்.

தும்மலைப்பற்றி உலகெங்குமே மூட நம்பிக்கை இருக்கிறது. அரிஸ்டாட்டில் என்ற கிரேக்க நாட்டுப் பெரியார் கி. மு. நாலாம் நூற்றாண்டில் வாழ்ந்தார். அவருக்கும் முந்திய காலத்திலேயே இந்த மூட நம்பிக்கை தொடங்கிவிட்டது. முதல் தும்மலைத் தும்மியவுடனேயே மனிதன் செத்துவிடுவானும்! யாராவது தும்மினால், ''கடவுள் காப்பாராக!'' என்று சொல்லுவது ஆங்கிலேயரின் வழக்கமாயிருக்கிறது. இத்தாலியில் நீங்கள் தும்மினால், ''வணக்கம்'' என்று ஜனங்கள் சொல்லுவார்கள். ''வந்தனம்'' என்று நீங்கள் சொன்னால் போச்சு; அவர்களுடைய வாழ்த்தெல்லாம் வீணாய்ப் போய்விடுமாம்.

எண்களைப்பற்றித்தான் மகா மோசமான மூட நம்பிக்கைகள் உலவுகின்றன. மூன்று, ஏழு இரண்டும் மிக மந்திரசக்தி வாய்ந்தவையாம்!

—வி. ஸாக்வில் - வெஸ்ட், 'தி இங்கிலீஷ் டைஜெஸ்ட்.'

யமனின் புன்னகை

எஃப். டபிள்யூ. பெயின்

ஆசிரியர் புனுவில் உள்ள டெக்கான் காலேஜில் ப்ரின்ஸிபாலாக இருந்தவர். சம்ஸ்கிருத நூல்களைப் படிப்பதில் ஆர்வம் மிகுந்தவர். ப்ளேக் வியாதிக்காளாகி, மரணப் படுக்கையில் கிடந்த பிராம்மண நண்பர் ஒருவர், இந்த ஆசிரியருக்குப் புராதனமான சம்ஸ்கிருத ஓலைச் சுவடி ஒன்றைக் கொடுத்தார். அதில் உள்ளது இந்தக் கதை.

"ராஜகுமாரி, நேரம் கடந்து விட்டது போல் இருக்கிறதே!'' என்று கூறிக்கொண்டே ரசகோஷர் ஆசனத்தில் அமர்ந்தார்.

''பரவாயில்லை, சுவாமி! இன்று ஒரே ஒரு கதை மட்டும் சொல்லுங்கள்'' என்று ஆவலுடன் கேட்டாள் ராஜகுமாரி.

''சரி, உன் ஆசைப்படியே நான் ரசமான ஒரு கதையைச் சொல்கிறேன். ஆனுல் ஒரே ஒரு நிபந்தனை: கதையின் முடிவில் ஒரு பிரச்னையைப் பதித்து வைக்கப் போகிறேன். அதைப் புத்திசாலித்தனமாகத் தீர்ப்பது உன் கடமை. என்ன, சரிதானே?''

''சரி'' என்று சொல்லி விட்டுக் கூர்மையாகக் கதையை கவனிக்க ஆயத்தமானுள் மன்னன் மகள்.

ரசகோஷர் ஆரம்பித்தார்:

*   *   *

ஒரே ஓர் ஊரில் ஒரு பிராம்மணன் வசித்து வந்தான். அவன் தன் வாழ்க்கையின் இடைக்காலத்தில் மிகக் கொடிய பாவம் ஒன்றைப் புரிந்துவிட்டான். பல நாட்கள் நகர்ந்தன, அவன் செய்த பாவம், அவனை வாட்டி வதைத்தது. அமைதியே ஆண்டுவந்த அவனுடைய உள்ளம், அமர்க்களமாய் வெந்தது. பிராம்மணன் கண்கலங்கி, செய்வதறியாமல் தவியாய்த் தவித்தான். திடீரென்று அவன் மூளையில் ஒரு யோசனை மின்னியது. நேரே ஒரு பெரியவரிடம் ஓடினுன். தான் செய்த

பாவத்தை விரிவாக அவரிடம் தெரிவித்து, அதற்குரிய பிராயச்சித்தத்தைச் சொல்ல வேண்டினான். ''அப்பா, வாழ்வின் மீதி நாளை, கங்கைக் கரையிலே சென்று கடவுளை நோக்கித் தவம் புரிவதில் கழி. பாவம் தீரும்'' என்று பெரியவர் கூறினார். அதைக் கேட்ட பிராம்மணனின் உள்ளத்தில், ஏதோ கொஞ்சம் அமைதி ஏற்பட்டது.

நேரே தன் வீட்டுக்கு வந்து மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டான். உற்றார் உறவினர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டான். பிறகு கங்கைக் கரையை நோக்கித் தன் யாத்திரையைத் தொடங்கினான். நாள் பல நடந்த பிறகு, வற்றிய மலையருவி ஒன்றை அடைந்தான். 'இது தான் கங்கை நதியாக இருக்க வேண்டும்; இதன் கரையில் தாமதம் இல்லாமல் தவத்தைத் தொடங்கலாம்' என்று நினைத்துக்கொண்டே, தன் முதுகு மூட்டைகளைக் கீழே இறக்கி, அருகே இருந்த ஊற்றில் கண்ட குளிர்ந்த நீரில் குளித்தபிறகு, தன் தவத்தை ஆரம்பித்தான். இப்படியே குளிப்பதும் தவம் புரிவதுமாக வருஷங்கள் ஐந்து வந்து போயின. ஒரு நாள் அந்த வழியே சென்றுகொண்டிருந்த பாசுபதத் துறவி ஒருவர், தனிமையில் வாழும் பிராம்மணனைச் சந்தித்தார். ''மைந்தனே! நீ இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டார். ''பூஜ்யரே! நான் செய்த பாவத்துக்குப் பிராயச்சித்தமாக, இந்தக் கங்கைக் கரையில் தவம் புரிகிறேன்'' என்று பிராம்மணன் பதில் அளித்தான்.

இதைக் கேட்ட முனிவர், இடி இடியென்று சிரித்தார். ''வற்றிய இந்த ஓடையையா கங்கையென்று நினைத்துக்கொண்டாய்!'' என்று கேட்டார். இவருடைய கேள்வி, பிராம்மணனின் மூளையைக் குழப்பிவிட்டது. ''சுவாமி, அப்படியென்றால் இது கங்கை நதிக்கரை இல்லையா?'' என்று பயம் கலந்த சந்தேகத்துடன் அவன் வினவினான். ''பிராம்மணனே, நீண்ட என் வாழ்க்கையில் நீ செய்வதுமாதிரி பிசகை நான் கேள்விப்பட்டதுகூட இல்லையே! பாவம், உன்னை யாரோ ஏமாற்றிவிட்டார்கள்போல் இருக்கிறது. கங்கை இங்கே இருந்து இன்னும் நூறு மைல்களுக்கு அப்பால் அல்லவா ஓடுகிறது! எறும்புப் புற்றை, மேரு மலை என்று நினைத்துவிட்டாயே!'' என்றார் பாசுபத முனிவர். ''நல்ல வேளை! என் பிசகைத் திருத்திய உங்களுக்கு என் நன்றி'' என்று கூறிவிட்டு, பிராம்மணன் அந்த இடத்தை விட்டு, மறுபடியும் தன் பயணத்தை ஆரம்பித்தான்.

வழியிலே, அகன்ற நதி ஒன்றை அவன் கண்டான். ''இதுதான் கங்கை நதி'' என்று துள்ளிக் குதித்துக்கொண்டே, அதன் கரையில் நின்றுகொண்டான். தினந்தோறும் நதியில் நீராடிவிட்டு, கடவுளைத் தியானம் புரிந்து வந்தான். காலச் செடியிலிருந்து ஐந்து வருஷ மலர்கள் உதிர்ந்துவிட்டன. ஒரு நாள் அந்த வழியே சென்ற காபாலிக முனிவர் ஒருவர், பிராம்மணனை நோக்கி, ''நீ ஏன் புனிதம் துளிக்கூடக் கலவாத இந்த நதிக்கரையில் உன் நேரத்தை வீணாக்கிக்கொண்டிருக்கிறாய்? இதற்குப் பதில், சற்றுத் தொலைவில் இருக்கும் கங்கைக் கரையில் போய்த் தவம் புரியக்கூடாதா?'' என்று கேட்டார். இதைக் கேட்ட பிராம்மணனின் முன்பு ஒரு பெரிய கேள்விக் குறி தோன்றியது. ''அப்படியென்றால், இது கங்கைக் கரை இல்லையா?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டான் அவன். ''அப்பனே, உபயோகமற்ற இந்த நதியைப் போய்க் கங்கை என்று நினைத்துவிட்டாயே! ஓநாயும் சிங்கமும் ஒன்றுதான் என்றுகூடக் கூறிவிடுவாய்போல் இருக்கிறதே!'' என்று காபாலிக முனிவர் சொன்னார்.

இதைக் கேட்ட பிராம்மணன், ''சுவாமி, தங்களைக் கண்டது என் பாக்கியமாயிற்று. என் பிசகைத் திருத்திய உங்களுக்கு என் உள்ளங் கனிந்த நன்றி'' என்று கூறிவிட்டு, மறுபடியும் தன் பயணத்தைத் தொடர்ந்தான்.

சில நாள் நடந்த பிறகு நர்மதை நதியை அடைந்தான் பிராம்மணன். ''ஓகோ! இப்பொழுதுதான் நான் கங்கையை அடைந்திருக்கிறேன்'' என்று கூறிக்கொண்டே, அங்கேயே அமர்ந்து, தன் தவத்தை ஆரம்பித்தான். தினந்தோறும் ஆற்றில் குளித்துவிட்டு, தவம் புரிந்து கொண்டு வந்தான். ஐந்து வருஷங்கள் உருண்டோடிவிட்டன. ஒரு நாள், நதியில் முழங்கால் ஆழத்தில் நின்றுகொண்டு, இவனைப் போன்ற மற்றொரு பக்தன் கையில் ஒரு பூக்கூடையைப் பிடித்துக் கொண்டு, அந்த நதியின் பெயரைச் சொல்லி, ஒவ்வொரு மலராகத் தண்ணீரில் எறிந்துகொண்டிருந்தான். அவனுடைய நாமாவளிச் சொற்கள் பிராம்மணனின் காதில் நுழைந்தன. பிராம்மணனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. உடனே அந்தப் பக்தனிடம் ஓடிப் போய், ''பக்தனே, இந்த நதியின் பெயர் என்ன?'' என்று வினவினான். பக்தன், வியப்புக் குரலில், ''அடேடே! இதுதான் நர்மதை நதி என்று உனக்குத் தெரியாதா?'' என்று பதில் அளித்தான். இதைக் கேட்ட பிராம்மணன், தன் உள்ளத்தில் கனமான ஒரு கல் விழுந்ததுபோல் நொந்தான். ''ஐயா, நான் இதுவரையில் இந்த நதியைக் கங்கையென்று தான் தவறாக நினைத்துக்கொண்டிருந்தேன். என் பிசகைத் திருத்திய உங்களுக்கு என் நன்றி கலந்த நமஸ்காரம்!'' என்று கூறிவிட்டு, தன் பயணச் சுமைகளுடன், அந்த இடத்தை விட்டுச் சென்று, கங்கை முகமாக நடக்க ஆரம்பித்தான்.

பாவம், எவ்வளவு தூரம், எவ்வளவு ஆண்டுகள் நடந்து கொண்டிருக்க முடியும்? பிராம்மணனின் உடல், தொடர்ந்து செய்த கடுமையான தவத்தின் விளைவாக, நலிந்து போய்விட்டது. வெம்மையான கதிரவனின் கதிர்கள், சுருக்கம் விழுந்த அவன் தேகத்தை விளாசித் தள்ளின. முடிவில், அவனுக்குக் காய்ச்சலே வந்துவிட்டது. நடக்கவே தள்ளாடிக்கொண்டிருந்தபோது வழியிலே ஒரு குன்று குறுக்கிட்டது. அதைக் கடந்தால் கங்கை நதி! பிராம்மணனின் உள்ளம் பதை பதைத்தது. குன்றைக் கடந்தால் இத்தனை ஆண்டுகளாகக் காண ஆசைப்பட்ட கங்கையைக் காணலாம். அதில் நீராடிப் பாவத்தை நீக்கிக்கொள்ளலாம்! உடலின் மூலை முடுக்கில் இருந்த பலத்தையெல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டே, குன்றின் மேலே அவன் ஏறினான். அப்போது ஏனோ கால் இடறிக் கீழே விழுந்துவிட்டான். எழுந்து நடக்க முயன்றான். முடியவில்லை. இப்போது உபாதையுடன் மேல் நோக்கி நகர்ந்தான். முடிவில் குன்றின் உச்சிக்கே வந்து விட்டான். அப்படியே களைத்துப் படுத்தான். தரையிலே துவண்டு விழுந்து கிடக்கும் தன் தலையை நிமிர்த்தி எதிரே பார்த்தான். ஆமாம்; அங்கே ஒரு நதி 'ஜில்'லென்று ரம்மியமாக ஓடிக் கொண்டிருந்தது! அதன் கரையிலே பக்தர்கள் உட்கார்ந்துகொண்டு வேதங்களை இனிய இசையுடன் ஜபித்துக்கொண்டிருந்தார்கள். அதன் சூழ்நிலையில் பரிசுத்தமும் தெய்விகமும் நிரம்பியிருந்தன. ஆம்; அதுதான் கங்கைக்கரை! பதினைந்து வருஷங்களாக அதைத் தான் காண இந்தப் பிராம்மணன் முயன்றான். ஆனால் மரணத்தின் பிடியில் சிக்குண்டிருக்கும்போது தான், தான் ஆசைப்பட்ட இடத்தை அடைந்தான். அவனுடைய இரண்டு கன்னங்களையும் கண்ணீர் கழுவியது. ''கங்கா தேவியே, உன் கரையை அடையப் பதினைந்து வருஷங்களாகப் பாடுபட்டேன். ஆயினும், இப்போதுதான் நான் உன்னை அடைந்தேன். உன் கண்களுக்கு முன்பு, உதவி செய்வாரற்று, அநாதையாக அவஸ்தைப்படுகிறேனே! கண்ணெடுத்துப் பார், கங்கா!'' என்று கதறினான். கதறிக் கதறி முடிவில் செத்தே போனான்.

அவனுடைய ஆவி மறு உலகத்தை அடைந்தபோது, யமன், சித்திரகுப்தனைப் பார்த்து, ''இந்தப் பிராம்மணனின் பூலோக வாழ்க்கையைப்பற்றி என்ன வரைந்திருக்கிறாய்?'' என்று கேட்டான். சித்திர

குப்தன் தன் சுவடிகளைப் புரட்டிப் பார்த்து, ''சுவாமி, இந்தப் பிராம்மணன், தன் வாழ்க்கையில் கொடிய பாவம் ஒன்றைச் செய்திருக்கிறான். ஆனால் அதற்குப் பிராயச்சித்தமாகப் பதினைந்து வருஷ காலம் கங்கைக்கரையில் தவம் புரிந்துவிட்டான்'' என்று பதில் அளித்தான். இதைக் கேட்ட பிராம்மணன் மலைத்துப் போனான்; ''பிரபு, சித்திரகுப்தர் கூறுவது தவறு. நான் கங்கை நதிக்கரையை அடைய முயன்றேனே தவிர, அதை அடையவில்லையே!'' என்று சொன்னான் அவன். அவன் சொற்களைக் கேட்டு யமதர்மன் புன்னகை பூத்தான்.

* * *

''ராஜகுமாரி, இப்போது எனக்குச் சொல்! யமன் பூத்த புன்னகையின் பொருள் என்ன?'' என்று கேட்டார் ரசகோஷர்.

''ரசகோஷரே, யமதர்மனின் தீர்ப்பில் தவறே இருக்காது. சித்திரகுப்தனும் ஒருபோதும் ஏமாறமாட்டான். கங்கை நதிக் கரையிலே, தவம் புரிவதாலேயே, அதை உண்மையான தவமாகக் கடவுள் கருதிவிட மாட்டார். ஆனால், இந்தப் பிராம்மணன், 'கங்கை நதி தீரத்தில் தவம் புரிகிறோம்' என்ற நம்பிக்கையுடன், கள்ளம் கபடமற்ற தூய தவம் புரிந்ததால், அந்தத் தவத்தைக் கங்கை நதிக் கரையிலேயே, சம்பிரதாயங்களுடன் புரிந்த பரிசுத்தமான தவமாக மதித்தான் யமன். ஏனென்றால், மனிதர்கள், ஒருவனுடைய நடவடிக்கைகளைக் கொண்டே, அவனைப்பற்றித் தீர்ப்பளித்து விடுகிறார்கள். ஆனால் கடவுள், ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும் உறையும் நினைவுகளைக் கொண்டே தீர்ப்பளிக்கிறார். நடிப்பாலும், வெளிவேஷத்தாலும் மனிதர்களை ஏமாற்றலாம்; ஆனால் கடவுளை ஏமாற்றவே முடியாது. இதுதான் யமன் பூத்த புன்னகையின் பொருள்'' என்று ராஜகுமாரி விவேகத்துடன் விடை அளித்தாள். இதைக் கேட்ட ரசகோஷர் ராஜகுமாரியை வியந்து பாராட்டினார்.

[மொழிபெயர்த்தவர்: எஸ். ஆர். சாந்தகுமார்]

ஸ்டாலின் பைபிள்

ஸோவியத் ருஷியாவில் புரட்சிக்குப் பின் முதல் முதலாகச் சர்க்கார் அங்கீகாரத்தோடு ஒரு பைபிள் வெளிவரப் போகிறது. கார்ல் மார்க்ஸ் தத்துவத்துக்கு வழி காட்டியாக ஏசு கிறிஸ்துவை அதில் சித்திரித்திருக்கிறது. அதன் முன்னுரை கூறுவது இது:

''நிலமில்லாத ஓர் ஏழைப் பெண்ணின் குமாரர் ஏசு கிறிஸ்து. பெரிய மிராசுதார்கள் அவளுடைய நிலங்களைப் பிடுங்கிக்கொண்டு விட்டார்கள்....நிலச் சுவான்தார்கள், ஜமீன்தார்கள், நடுத்தர வகுப்பார், கொள்ளை லாபம் அடிக்கும் வியாபாரிகள் இவர்களுடனெல்லாம் கிறிஸ்து கடும் போராட்டம் நடத்தினார்...அவரை யூதாஸ்காரியேத் சில வெள்ளிக் காசுகளுக்காகப் பிற்போக்குவாதிகளிடம் விற்றுவிட்டான்.''

ஸ்டாலின் சாகச் சில நாளைக்கு முன் எழுதியதாம் இந்தப் பைபிள்.

—பீட்டர் பரோ

புஸ்தகச் சுருக்கம் :

கை கொண்டு சிந்தித்தவர்

எழுதியவர்:

காரெட் காரெட்



(ஹென்றி ஃபோர்டு)

உலகெங்கும் ஓடுகின்றன ஃபோர்டு கார்கள். இந்த ஃபோர்டு காரைச் செய்த ஹென்ரி ஃபோர்டு 30-7-1856-இல் அமெரிக்க மிட்வெஸ்ட் நகரம் ஒன்றில் பிறந்தார். 83-வயசில் 7-4-'47-ஆம் தேதி காலமானார். இடையில் அமெரிக்காவின் - ஏன், உலகத்தின்-தொழில் சரித்திரத்திலேயே பெரும் புரட்சியை உண்டாக்கிவிட்டார்.

அவருடைய வெற்றியின் ரகசியத்தைத் தெள்ளத் தெளிய அற்புதமான முறையில் சித்திரிக்கிறது இந்த வரலாறு.

காப்பிரைட்: 1952-இல் காரெட் காரெட் பதிப்புரிமை செய்து கொண்டது. பாந்தியன் புக்ஸ், இன்க்., ஸ்தாபனத்தாரிடமும் 'தி ரீடெர்ஸ் டைஜெஸ்ட்' பிரசுரிப்போரிடமும் பெற்ற அநுமதியின் பேரில் இங்கே வெளியிட்டிருக்கிறோம்.

கை கொண்டு சிந்தித்தவர்

★

1914 - ஆம் வருஷத்தில் ஒரு நாள். அன்று ஞாயிற்றுக்கிழமை. மிச்சிகன் மாகாணத்தைச் சேர்ந்த டெட்ராயிட் நகரிலிருந்து வந்த ஒரு செய்தி, அமெரிக்கத் தொழிற்சாலை முதலாளிகளையெல்லாம் ஒரு கலக்குக் கலக்கி விட்டது. அப்போது ஐக்கிய அமெரிக்கத் தொழிற்சாலையில் வேலை பார்த்த தொழிலாளிகளுக்கெல்லாம் குறைந்த பட்சம் கொடுக்க வேண்டிய தினச் சம்பளம் இரண்டு டாலர்தான். ஆனால், ஹென்ரி ஃபோர்டு தம் தொழிற்சாலையில் குறைந்த பட்ச தினச் சம்பளத்தை ஐந்து டாலருக்கு உயர்த்தியதுடன், நாள் ஒன்றுக்கு வேலை செய்ய வேண்டிய நேரத்தை 9 - மணியிலிருந்து 8 மணிக்குக் குறைத்து விட்டார்.

'இனி டெட்ராயிட் நகரம் நாசமாகி விடும்; அங்கே உள்ள முதலாளிகளெல்லாம் ஓடவேண்டியதுதான்; மிஞ்சி அங்கே தங்குகிறவர்கள் பாப்பர் ஆகிவிடுவார்கள். திடீரென்று பெரும் பணம் கிடைப்பதால், ஃபோர்டு தொழிலாளிகளெல்லாம் ஒழுக்கங் கெட்டுப் போவார்கள்; பணத்தைச் செலவழிக்கத் தெரியாமல் திண்டாடுவார்கள்' - இப்படியெல்லாம் பலர் ஜோஸியம் சொல்லத் தொடங்கி விட்டார்கள்.

ஆனால், ஃபோர்டோ ''தரையைக் கூட்டுகிறவன் மட்டும் ஆசையோடு தன் வேலையைச் செய்தால், நாள் ஒன்றுக்கு 5 டாலர் அவனே மிச்சப்படுத்தி விடுவான்: சிறு கருவிகளையெல்லாம் கூட்டித் தள்ளி விடாமல், பாதுகாப்பாய்ப் பொறுக்கி வைப்பான்'' என்றார்.

வெகு நாளைக்குப் பின்னால் அவர் எழுதினார்: ''எங்கள் கம்பெனியின் உண்மையான முற்போக்குத் தொடங்கிய நாள், நாங்கள் குறைந்த பட்ச தினச் சம்பளத்தை 8-டாலருக்கு உயர்த்திய அன்றுதான். பண்டங்களை வாங்க எங்கள் சொந்த ஆட்களுக்கு இருந்த சக்தியை நாங்கள் உயர்த்தினோம். பண்டங்களை வாங்க மற்ற ஜனங்களுக்கு இருந்த சக்தியை அவர்கள் உயர்த்தினார்கள். இப்படியே மற்றவர்களுக்கும் இது பரவிக் கொண்டே போயிற்று. கொழுத்த சம்பளம் கொடுக்கிறோம். இதனால், பண்டங்களை வாங்கும் சக்தி மக்களுக்கு அதிகரிக்கிறது. நாமோ பண்டங்களைக் குறைந்த விலைக்கு விற்கிறோம். இதுவே நம் நாட்டின் செல்வச் செழிப்புக்கு ஆதாரமாயிருக்கிறது.''

குறைந்த பட்சச் சம்பளத்தை 5 டாலருக்கு உயர்த்திய ஐந்து வருஷத்துக்கெல்லாம், ஃபோர்டு அதை 6 - டாலருக்கு உயர்த்தி விட்டார். அப்போது அவர், ''செலவைக் குறைக்க நாங்கள் செய்த காரியங்களுக்குள்ளே மிகச் சிறந்தது எது தெரியுமா? எட்டு மணி நேரம் வேலை செய்யும் ஒரு நாளைக்குச் சம்பளம் 5 - டாலர் என்று நிர்ணயித்ததுதான்; அதை விடப் பெரிய சிக்கனத்தை இப்போது செய்கிறோம். இதுவே நாள் ஒன்றுக்கு 6 - டாலர் சம்பளம் என்ற ஏற்பாடு'' என்று கூறினார்.

சம்பளம், விலை இரண்டுக்கும் அவர் இப்படி லட்சணம் கூறுகிறார்: ''சரக்கு எவ்வளவு தாங்கும் என்பதைக் கொண்டு சரியான விலையை நிர்ணயிக்கக்கூடாது; எவ்வளவு குறைந்த கூலிக்கு ஒருவன் வேலை செய்வான் என்பதைக் கொண்டு சரியான சம்பளத்தை நிர்ணயிக்கக் கூடாது. எவ்வளவு குறைந்த பணத்துக்கு ஒரு சரக்கைத் தொடர்ந்து விற்று வர முடியும் என்பதைக் கொண்டே சரியான விலையை நிர்ணயிக்க வேண்டும். எவ்வளவு உயர்ந்த தொகையை

நூலாசிரியர்

ஆசிரியர் காரெட் காரெட் சிறந்த அமெரிக்கப் பத்திரிகை எழுத்தாளர்; பிரபல நாவலாசிரியர். ‘முரட்டுச் சக்கரம்’ என்ற பெயருடன் ஹென்ரி ஃபோர்டின் சரித்திரத்தை மிகவும் சுவாரஸ்யமாக எழுதியிருக்கிறார். அதன் சுருக்கந்தான் இங்கே தந்திருப்பது. இந்த நூலை அமெரிக்கப் பத்திரிகைகள் பிரமாதமாய்ப் புகழ்ந்தன. ‘வார்த்தைகளைப் பொன்னுக்கும் ரஸவாதி’ என்று காரெட்டைப் பாராட்டின. பல பத்திரிகைகளில் இவர் பணி புரிந்திருக்கிறார். ஒரு பத்திரிகைக்கு ஆசிரியராயும் இருந்திருக்கிறார்.



ஒரு முதலாளி தொடர்ந்து கொடுத்து வர முடியும் என்பதைக் கொண்டே சரியான சம்பளத்தை நிர்ணயிக்க வேண்டும்.’’

வியாபாரத்தில் சுதந்தரமாய்ப் போட்டியிட இடம் இருக்க வேண்டும் என்பது அமெரிக்காவில் பெரிய தத்துவமாயும் செயல் முறையாயும் வளர்ந்துவிட்டது. இந்தத் தத்துவத்தை அநுபவத்தில் கடைப் பிடித்தவர்களுக்குள்ளே மிகச் சிறந்தவர் ஃபோர்டு. ‘சுதந்தரமாய்த் தன் நோக்கங்களைப் பூர்த்தி செய்துகொள்ள எண்ணிப் பண்டங்களை மற்றவர்களுக்காக உற்பத்தி செய்யும் தனிப்பட்ட முதலாளி இஷ்டப்பட்டாலும் சரி, இஷ்டப்படாவிட்டாலும் சரி; அவனால் பொதுவில் எல்லா மக்களுக்குமே நன்மைதான் விளையும்’ என்பதே அந்தத் தத்துவம். இந்த முறையில் ஒரு கொடுமை இருக்கிறது. இயற்கையிலேயேதான் அந்தக் கொடுமை இருக்கிறது. வலுவற்றவர்களும் தாராளமான வசதி யில்லாதவர்களும் ஒடிந்து போகிறார்கள். என்றாலும், இந்த முறையில் காரியம் எப்படியோ நன்றாய் நடக்கிறது. மனித சரித்திரத்திலேயே சிறந்த தொழில் சிறப்பைப் பெற்ற நாடு என்ற பெருமையை அமெரிக்காவுக்கு அளித்தது இந்த முறைதான்.

ஹென்ரி ஃபோர்டின் சாதனைகளைக் கொண்டு இந்த முறையின் சிறப்பை நாம் காணலாம். இயற்கை உணர்வாலும் அறிவு நுணுக்கத்தாலும் அருள் பெற்ற ஒரு வித யந்திர நிபுணர் என்று அவரைச் சொல்லலாம். உக்கிரமாகப் பேராற்றலுடன் உலகத்தையே அவர் தாக்கி விட்டார். தம் கைகளே துணையாய்ச் சிந்தனை செய்த மனிதர் அவர்.

ஃபோர்டு தோன்று முன் மோட்டார்க் கார் என்பது பணக்காரரின் விளையாட்டுக் கருவியாக

இருந்து வந்தது. ஆரம்ப நாட்களில் 'மாடல்-டி' என்ற தம் காரைப்பற்றி அவர் விடுத்த அறிக்கையில் கண்ட வாசகம் இது: ''கோடிக் கணக்கான சாதாரண மக்களெல்லாம் வாங்கக் கூடிய ஒரு மோட்டார்க் காரை நான் அமைக்கப் போகிறேன். அது ஒரு குடும்பத்துக்கே போதுமான அளவு பெரிதாயிருக்கும்; ஆனால், தனிப்பட்ட ஒருவன் நிர்வகிக்கக் கூடிய அளவு சிறியதாயிருக்கும். மிகச் சிறந்த பொருள்களைக் கொண்டு அது அமைந்திருக்கும். நவீன கால எஞ்சினீரால் எவ்வளவு எளிதாகத் திட்டமிட முடியுமோ அவ்வளவு எளிய உருவைப் பெற்றிருக்கும். விலை மிக மலிவா யிருக்கும்; நல்ல சம்பளம் வாங்கும் எவனும் சொந்தத்தில் ஒன்று வைத்துக்கொள்ளக் கூடிய அளவு மலிவாயிருக்கும். அதை வாங்குகிறவன், ஆண்டவன் படைத்த பெருந் திறந்த வெளிகளிலே மணிக் கணக்காய்க் குடும்பத்தோடு இன்பம் அனுபவிக்கலாம்.''

எஞ்சின், சட்டம், முன் அச்சு, பின் அச்சு இந்த நான்குந்தான் டி-மாடலுக்கு முக்கியமான பகுதிகள் என்று ஃபோர்டு எண்ணினர். இந்த நான்கு பகுதிகளையும் பழுது பார்க்கவோ, புதிதாய் வாங்கிப் போடவோ விசேஷத் திறமை தேவைப்படாத முறையிலும் பெருஞ் செலவு ஆகாத விதமாயும் இவற்றைத் திட்டமிட்டு அமைத்தார். தாங்கள் டி-மாடல் காரை வைத்துக்கொண் டிருந்த நாட்களை எண்ணிப் பார்ப்பவருக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வரலாம். மங்கீ ஸ்பானரையும் குறட்டையும் வைத்துக்கொண்டே காரை அக்கு வேறு அலகு வேருக அவர்கள் கழற்றி விடுவார்கள். தேய்ந்து போன அல்லது பழுதடைந்த பகுதிகளை ஒரு கோணிப் பையில் போட்டுக் கொண்டு கிளம்புவார்கள். தங்களுக்கு மிகச் சமீபத்தில் உள்ள ஃபோர்டு நிலையத்துக்குப் போவார்கள். சொற்ப விலை வித்தியாசத்தைக் கொடுத்துப் பழசுக்குப் பதில் புதிய பகுதிகளை வாங்கிக்கொள்வார்கள். வீட்டுக்குப் போனதும், பெருமை பூரிக்கப் பழையபடி வேலை செய்து காரை உருவாக்கிக் கொள்வார்கள். மாடல்-டி கார்களை அபூர்வமாகத்தான் காரேஜ் யந்திர அறிஞர்களிடம் அனுப்புவார்கள். மிகப் பெரும்பாலும் இந்த மாதிரிதான் களஞ்சியங்களிலும் மரத்தடியிலும் கொட்டகைகளிலும் அவற்றுக்குப் புத்துருக் கொடுத்துவிடுவார்கள்.

தங்கள் பெற்ரேரின் வாழ்க்கையையே மாடல்-டி கார் எப்படி மாற்றிவிட்டது என்பதை இந்தத் தலைமுறையினர் அறிய மாட்டார்கள். அது ஒரு யந்திர மிருகம். அதைப் போன்ற ஒன்று முன்னும் இருந்ததில்லை; பின்னும் வரப் போவதில்லை. தேச மெங்குமே மக்களின் பழக்க வழக்கங்களையெல்லாம் அது மாற்றிவிட்டது.

பத்தொன்பது வருஷ காலத்தில் ஒரு கோடியே ஐம்பது லட்சம் மாடல்-டி கார்களை ஹென்ரி ஃபோர்டு தயாரித்தார். அவற்றின் விலையை 1,200 டாலரிலிருந்து, 295 டாலருக்குக் குறைத்து விட்டார்.

ஃபோர்டு கம்பெனி தொடங்கிய காலத்திலிருந்தே இதை விடச் சிறந்த வேறு கார்களும் இருந்தன. வேறு கார்களை உற்பத்தி செய்தவர் அறியாத எந்தப் புதிய சூட்சுமமும் முதல் ஃபோர்டு காரில் அமைந்து விடவில்லை. பின்னல் உற்பத்தியான பல லட்சக் கணக்கான போர்டு கார்களிலும் அப்படி அடிப்படையான புதிய சூட்சுமம் எதுவும் அமைந்து விடவில்லை. ஃபோர்டு கம்பெனி தன் வேலையைச் செய்த முறைதான் அதற்குத் தனிச் சிறப்பைத் தந்தது.

விலையைக் குறைப்ப தென்ருல், ஃபோர்டுக்கு அளவற்ற உற்சாகம். இது எஞ்சினீர்களுக்குப் பெரிய தலைவலியாய்ப் போய்விட்டது. உற்பத்திச் செலவுக்கும் கீழே விலை வைக்க வேண்டும் என்று சில சமயம் ஃபோர்டு சொல்லி விடுவார். எஞ்சினீர்களால் இப்படிச் செய்ய முடியுமா என்று பார்க்க அவர் விரும்புவார். அவர்



பிரபல விஞ்ஞானியான எடிஸன் காது மந்தம். அவருடைய காதில் ஃபோர்டு ஏதோ சொல்லுகிருர்.

வேண்டும் என்று குறித்திருந்தார்கள்.

யந்திர அமைப்பாளர்கள், ''நீங்கள் ஒரு தவறு செய்து விட்டீர்கள். நாள் ஒன்றுக்கு 200 விகிதம் என்பதுதான் உங்கள் கருத்தாயிருக்க வேண்டும்'' என்ருர்கள்.

அந்த யந்திரத்தைக் கற்பனே செய்து திட்டம் வகுத்த ஃபோர்டு எஞ்சினீர், ''ஒரு தவறுமில்லே. மணி ஒன்றுக்கு 200 விகிதந்தான் அது உற்பத்தி செய்யவேண்டும்'' என்ருர்.

''எந்த யந்திரமும் அந்த வேகத்தில் உற்பத்தி செய்யாது'' என்ருர்கள் யந்திர அமைப்பாளர்கள்.

ஃபோர்டு எஞ்சினீர் அப்போது, ''இந்த யந்திரங்களேச் செய்ய உங்களே அழைப்பதற்கு முன்பு, நாங்களே ஒரு யந்திரத்தைச் செய்திருக்கிருேம். அது இப்படி வேலே செய்யுமா என்று பார்க்க எண்ணித்தான் அதைச் செய்தோம். அது இப்படி வேலே செய்கிறது. வந்து பாருங்கள்'' என்று சொன்னுர்.

ஒரு புதிய யந்திரம் முந்தியதை விடச் சிறப்பாக வேலே செய்தாலும், ஒரு புதிய யுக்தியால் முன்னேவிட நேர மிச்சம் ஏற்பட்டாலும், ஹென்ரி ஃபோர்டுக்கும் சரி, அவருடைய எஞ்சினீர்களுக்கும் சரி, குழந்தை கொண்டகுதூகலம் ஏற்படும். அற்புதமான ஒரு பொம்மையைப் பெற்ருல், குழந்தை எவ்வளவு ஆனந்தம் அடையுமோ அவ்வளவு ஆனந்தம் அடைந்துவிடுவார்கள். ஒரு மேஸ்திரியோ ஒரு தொழிலாளியோ இப்படி ஒரு யோசனேயைச் சொல்லிவிட்டால், சொன்ன இடத்திலேயே ஃபோர்டு அவனுடைய சட்டைப் பை நிறையப் பணத்தைத் திணித்துவிடுவார். ஆயினும், இவ்விதம் யோசித்துச் செய்த ஒரு புதிய யந்திரத்தை இன்னும் சிறப்பாக வேலே செய்யும்

கள் எப்போதும் அப்படியே செய்து முடிப்பார்கள்.

அந்த உன்னதமான யந்திர நிபுணர்களுக்கு - ஃபோர்டு, அவருடைய எஞ்சினீர்கள், உற்பத்தி ஆட்கள் ஆகியவர்களுக்கு - வேலேயே ஒரு விளேயாட்டா யிருந்தது. அப்படி இருந்திரா விட்டால், அது அவர்களேக் கொன்றிருக்கும். ஆவேசம் வந்தவர்கள் மாதிரிதான் அவர்கள் வேலே செய்தார்கள். சாப்பாட்டைக்கூடப் பல சமயம் மறந்து விட்டார்கள். தங்கள் உடம்பை வாட்டிக் கொண்டார்கள்; யந்திரங்கள் உஷ்ணமாகி அயர்ந்து போகிற வரையில் அவற்றை ஓட்டினுர்கள்.

2

ஒரு சமயம் விசேஷமான யந்திரம் ஒன்றை அமைக்க வேண்டியிருந்தது. அந்த வேலேயைக் குத்தகைக்கு விட யந்திர அமைப்பாளர் பலரை ஃபோர்டு தொழிற்சாலேக்கு அழைத்தார்கள். அந்த யந்திரத்துக்கு இருக்க வேண்டிய லட்சணங்களேச் சொல்லும் போது, மணி ஒன்றுக்குச் சுத்தமாய் 200 விகிதம் காருக்கு வேண்டிய ஒரு சாமானே அது செய்ய

படி செய்ய வழியுண்டா என்று எல்லாருமே யோசிப்பார்கள். அப்படி எவனாவது ஒரு வழி சொல்லி விட்டால் போதும்; இந்த அற்புதப் பொம்மையை உடைத்துக் குப்பையில் போட்டுவிடுவார்கள்.

அவர்களுடைய உற்பத்தித் தொழிற்சாலை ஓர் அதிசயமாகும். உலகத்திலே யாரும் முன் பின் கேள்விப்பட்டறியாத அசாத்திய மான காரியங்களையெல்லாம் அது செய்யும். ஒரு யந்திரம் இப்போது செய்யும் எந்த வேலையையும் அது இன்னும் சிறப்பாய்ச் செய்யும்படி அபிவிருத்தி செய்ய முடியும் என்பது இந்த மனிதர்களின் நம்பிக்கை. ஆகவே, யார் வேண்டுமானாலும் தங்கள் தொழிற்சாலையை வந்து பார்க்க மகிழ்ச்சியோடு அனுமதித்தார்கள். போட்டிக் கார்கள் செய்வோர் வந்து பார்த்தாலுமே இவர்கள் இப்படி அனுமதித்தார்கள்.

ஃபோர்டுக்கு விசேஷ நிபுணர்களிடம் நம்பிக்கையே கிடையாது. அதனால்தான் இதெல்லாம் சாத்தியமாயிற்று. ''எங்கள் தொழிற்சாலையில் புதிய வேலைகளைச் செய்வோர், முன்னால் அவைபற்றி அறிவு பெற்றவர்கள் அல்ல; ஆகவே, இன்னது சாத்தியம், இன்னது அசாத்தியம் என்ற பயமெல்லாம் அவர்களுக்கு இல்லை'' என்று அவர் சொன்னார்.

இதற்கு அவர் சில உதாரணங்கள் சொல்லுவார். கண்ணாடி பற்றியது ஓர் உதாரணம். கையால் வேலை செய்ய வேண்டிய தேவை இல்லாமலே தொடர்ந்து ஒரு பெரிய நாடாவாகக் கண்ணாடிப் பட்டை ஒன்றை இழுத்து விடலாம் என்று ஃபோர்டு எண்ணினார். உலகத்துக் கண்ணாடி நிபுணர்களெல்லாம் 'முன்னேயே எங்களுக்கு இந்த யோசனை தோன்றியதுண்டு. செய்து பார்த்தோம்; சாத்தியம் இல்லை' என்று சொன்னார்கள். முன்னால் கண்ணாடித் தொழிற்சாலையையே கண்டிராத சில பேரிடம் இந்த வேலையை ஃபோர்டு ஒப்படைத்தார். அவர்கள் வியக்கத்தக்க வெற்றியுடன் இதைச் செய்து விட்டார்கள். இப்போது தட்டைக் கண்ணாடி முழுவதையும் இந்த முறையிலேயே செய்கிறார்கள்.

அவருடைய உன்னதமான யந்திரக் கலைஞர்கள் எதை வேண்டுமானாலும் செய்துவிடுவார்கள். யந்திரக் கலப்பைத் தொழிற்சாலை ஒன்றை அப்படியே முழுசாக அமெரிக்காவிலிருந்து பறித்தெடுத்து அயர்லாந்தில் கொண்டு போய் வைத்துவிட வேண்டும் என்றால், அது அவர்களுக்கு அநாயாசமாய்ச் செய்யக் கூடிய சின்னக் காரியம். இரண்டாவது யுத்த காலத்தில், அமெரிக்க சர்க்காருக்கு ஒரு சமயம் நீர்மூழ்கிக் கப்பல்களை வேட்டையாடும் சில படகுகள் வேண்டியிருந்தன. ஃபோர்டு அப்போது யுத்தத்துக்கு உதவியாகச் செய்து வந்த பிற வேலைகளுக்குக் குந்தகம் இல்லாமல் இந்தப் படகுகளைக் கட்டித் தர முடியுமானால் அப்படிக் கட்டித் தரும்படி கேட்டார்கள். ரூஜ் நதித் தொழிற்சாலையில் நூற்றிருபதே நாளைக்குள் ஃபோர்டு மேதைகள் ஒரு மைலில் மூன்றில் ஒரு பகுதி நீளமும் 350 அடி அகலமும் 100 அடி உயரமும் உள்ள ஒரு கட்டிடத்தைச் சிருஷ்டித்தார்கள். அதற்குள்ளே கழுகுப் படகுகள் உருவாகிவிட்டன. கார் உடம்பு மாதிரி உலோகத் தகட்டிலே அவற்றைச் செய்திருந்தார்கள். இத்தனைக்கும் அவர்கள் அதற்கு முன்னே ஒருபோதும் படகே கட்டியறியாதவர்கள்!

ஃபோர்டுக்கு வலது கை போன்ற மனிதர்களுக்குள்ளே சார்லஸ் இ. ஸோரென்ஸன் என்பவர் முக்கியமானவர். அவரைக் 'கம்பீர டேன்' என்று சொல்லுவார்கள். ஃபோர்டு தொழிற்சாலையில் நாள் ஒன்றுக்கு மூன்று டாலர் சம்பளத்தில் 'மோஸ்தர்' (பாட்டர்ன்) அமைக்கும் தொழிலாளியாக ஆரம்பத்தில் அவர் வேலைக்கு அமர்ந்தார். பிறகு தம் காலத்திலேயே உற்பத்தித் தொழிலில் மகோன்னத மேதையாக உயர்ந்து விட்டார். இரண்டாவது உலக யுத்தம் தொடங்கச் சிறிது காலத்துக்கு முன்பு, காலிஃபோர்னியாவுக்கு ஸோரென்ஸன் சென்றார்;

அங்கே ஆகாய விமானங்களை எப்படிச் செய்கிறார்கள் என்பதைப் பார்க்கத்தான். ஏனென்றால், ஃபோர்டு கம்பெனிகூட ஆகாய விமானங்கள் செய்ய எண்ணியது.

காலிஃபோர்னியா விமான உற்பத்தி முதலாளி ஒருவரிடம் ஸோரென்ஸன், "நீங்கள் ஏன் முதலில் விமானத்தின் உடம்பு அமைப்பைக் கட்டுகிறீர்கள்? அப்புறம் சின்னஞ் சிறு துவாரங்களின் மூலம் ஒவ்வொரு சாமானை யும் உள்ளே இழுத்துக்கொண்டு போய்ப் பூட்டுகிறீர்களே! இது எனக்குப் புரியவே யில்லை" என்று சொன்னார்.

"பின்னே நீங்கள் எப்படிச் செய்வீர்கள்?" என்று கேட்டார் முதலாளி.

"நானு யிருந்தால், விமானத்தை முதலில் நான்கு பகுதிகளாகக் கட்டுவேன். ஒவ்வொரு பகுதியிலும் சாமான்களைப் பதித்துப் பூர்த்தி செய்வேன். பிறகு நான்கு பகுதிகளையும் ஒன்றுய்ச் சேர்த்து இணைப்பேன்" என்றார் ஃபோர்டு நிபுணர்.

விமானம் கட்டும் முறையே இதிலிருந்து மாறிவிட்டது. வில்லோரன் தொழிற்சாலையைக் கட்டியவர் ஸோரென்ஸன்தான். குண்டு வீசும் விமானங்களை மணி ஒன்றுக்கு ஒன்று விகிதம் அது சில நாளில் உற்பத்தி செய்யத் தொடங்கியது.

'ஃபோர்டு அஸெம்பிளி லைன்' என்ற இணைப்பு வரிசைக் கிரமம் மிகப் பிரசித்தம். இந்த இணைப்பு வரிசைக் கிரமத்தை உலகத்திலேயே முதல் முதலாக ஃபோர்டுதான் ஏற்படுத்தினார். இது உற்பத்தித் தொழில் முறையிலேயே பெரிய புரட்சியைச் செய்துவிட்டது. சிகாகோ நகரில் மாட்டிறைச்சியைப் பதம் செய்து சிப்பம் கட்டுவோரிடமிருந்துதான் இந்த முறையைப் பற்றிய யோசனை ஃபோர்டுக்குத் தோன்றியது. அங்கே ஒரு கசாப்புக்காரன் மாட்டின் ஒரு பகுதியை வெட்டுவான். மிஞ்சிய மாட்டை அப்படியே தலைக்குமேல் செல்லும் 'ட்ராலி' என்ற தொட்டியில் வைத்து அடுத்த ஆளிடம் தள்ளுவான். அவன் மற்றொரு பகுதியை வெட்டிக்கொண்டு, மீதியை அடுத்தவனுக்குத் தள்ளுவான். இப்படியே மேலும் மேலும் நடக்கும். இதே போன்ற இணைப்பு வரிசைக் கிரம யுக்தியைக் கண்டு பிடித்தது ஃபோர்டின் சிறப்பல்ல. அந்த யுக்தியைக் கற்பனை, சாமர்த்தியம், வேகம், தர்க்க ரீதி இவற்றோடு பிரயோகித்ததுதான் அவருடைய முறையின் பெருமை.

ஃபோர்டு பொதுவாக இரண்டே இரண்டு தத்துவங்களை மட்டுமே அறிவார்: (1) ஒரு மனிதன் ஓர டிக்குமேல் எடுத்து வைக்க வேண்டிய அவசியமில்லாதபடி செய்ய முடியுமானால், அப்படியே ஏற்பாடு செய்ய வேண்டும். அதாவது ஒரு தொழிலாளி நின்ற இடத்திலேயே அசையாது நிற்க வேண்டும்; வேலை அவன் கையைத் தேடி வர வேண்டும். (2) எந்த மனிதனும் குனிந்து தன் நேரத்தையும் ஆற்றலையும் வீணடிக்கக்கூடாது. அதாவது, அவனுடைய மார்பு உயரத்தில் வேலை அவனிடம் வந்து சேர வேண்டும்.

"12,000 தொழிலாளிகள் இருக்கிறார்கள். ஒருவன் நாள் ஒன்றுக்குப் பத்துத் தப்படி நடக்கும் நடையைத் தடுத்தோமானால், 50 மைல் தூரம் வீணே இயங்கி வீணே செலவழியும் ஆற்றலை மிச்சப்படுத்தி விடுவோம். முறைப்படுத்தி நடத்தி வைக்காத ஒரு தொழிலாளி, தன் வேலையைச் செய்வதில் செலவழிப்பதைவிட அதிக நேரத்தை, சாமான்களையும் கருவிகளையும் தேடி நடக்கும் நடையிலே செலவழித்துவிடுகிறான்" என்று ஃபோர்டு சொன்னார்.

இவை எல்லாம் இந்த ஒரே ஒரு தத்துவத்தில் அடங்கும்: 'காலத்தை வெல்லு.'

வேலையை ஆளிருக்கும் இடத்துக்கும் ஒரு யந்திரத்திலிருந்து மற்றொரு யந்திரத்துக்கும் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். வேலைக்குரிய சாமான்களை, பூமியின் ஆகர்ஷண சக்தியால் உருண்டோடச் செய்யும் சாய்ந்த தட்டுக்கள் மூலமும் 'கன்வேயர் பெல்ட்'



ஃபோர்டு தமது முதல் காரில் உட்கார்ந்திருக்கிறார். பக்கத்தில் நிற்பவர் அவருடைய பேரன் இரண்டாவது ஹென்ரி; இப்போது ஃபோர்டு கம்பெனியின் பிரஸிடெண்ட்.

என்ற வாகனப் பட்டைகள் மூலமும் இப்படிச் செலுத்த வேண்டும். இந்த முறையை 'ஸப்-அஸெம்ப்ளீஸ்' என்ற உப இணைப்பு வரிசைக் கிரமக் கூடங்களில் முதலில் ஃபோர்டு பரீட்சித்துப் பார்த்தார். எஞ்சின் இணைப்பை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். 'சேஸிஸ்' என்ற காரின் அடிச் சட்டத்தின் மீது எஞ்சினை ஏற்றுவதற்குமுன், பல நூற்றுக் கணக்கான பகுதிகளை இணைத்து எஞ்சினை உருவாக்க வேண்டும். முன் நாள் ஒரே ஒரு மனிதனே சுற்றிச் சுற்றி நடந்து ஒரு ஃபோர்டு எஞ்சினை இப்படி இணைத்துப் பூர்த்தி செய்தான். இப்போது இதே வேலையை 84 பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு பிரிவு வேலையையும் செய்ய ஒவ்வொரு மனிதன் ஒவ்வோரிடத்தில் அசையாது நிற்கிறான். பலன் என்ன? முன்னே 84 எஞ்சினை இணைத்து உருவாக்கிய அதே நேரத்தில் 84 மனிதர்கள் 252 எஞ்சின்களை இப்போது உருவாக்கிவிடுகிறார்கள்.

3

உப இணைப்புக் கூடங்களை முதல் முதலில் ஃபோர்டு ஏற்பாடு செய்தபோது, பெரிய குழப்பம் உண்டாகி விட்டது. உப இணைப்பு வரிசையெல்லாம் வர வரப் பெருகிய சிற்றாறுகள் ஆகிவிட்டன. இந்த வெள்ளத்தையெல்லாம் ஏற்றுச் செல்லும் பேராறு ஒன்று இல்லை. தொழிற்சாலையின் நடு மத்தியிலே காரின் அடிச் சட்டம் அசையாது நின்றுகொண்டிருந்தது. ஆட்கள் வரிசை வரிசையாக ஒரு பக்கத்தில் எஞ்சின்களையும், ஒரு பக்கத்தில் 'மாக்னெட்டோ' என்ற தீப்பொறி எழுப்பும் மின்-காந்தக் கருவிகளையும், ஒரு பக்கத்தில் 'ட்ரான்ஸ்மிஷன்' என்ற அச்சையும் எஞ்சினையும் பிணைக்கும் உறுப்புக்களையும், இப்படியே இன்னும் பல பகுதிகளையும் கொண்டுவந்து குவித்தார்கள். 'இனி அடிச் சட்டமும் நகர வேண்டியதுதான்' என்ற யோசனை அப்போது உதயமாயிற்று. கார் போன்ற பண்டங்களைப் பெருந்திரளாய் உற்பத்தி செய்வதற்குத் தேவையான கடைசி ரகசியம் அந்தக் கணத்திலே புலனாகி விட்டது.

முதல் முதலில் 'விண்ட்லாஸ்' என்ற உருளை போட்ட ஒரு தேர்ச் சட்டமும் 250 அடி நீளம் உள்ள வடக் கயிறு ஒன்றும் ஃபோர்டு சம்பாதித்தார். காரின் அடிச் சட்டத்தை அந்தத் தேர்ச் சட்டத்தில் வைத்து, ஆட்கள் மெள்ள மெள்ள இழுத்தார்கள். முன்னேற்பாடாக வழி நெடுகலும் உப இணைப்புக்களும் பிற பகுதிகளும் குவித்து வைத்திருந்தார்கள். அடிச் சட்டம் நகர்ந்து வரும்போது கைக்கெட்டும் தூரத்தில் அவை இருந்தன. அடிச் சட்டத்தின் பக்கத்தி

லேயே நடந்தோ அதன்மீது சவாரி செய்தோ தொழிலாளிகள் வந்தார்கள். இப்படி நகர்ந்துகொண்டே, கையில் ஆயுதம் பிடித்து, தங்கள் வேலையை அவர்கள் செய்தார்கள். அதற்கு முன்னே ஒரு காரின் பகுதிகளையெல்லாம் கோத்து இணைப்பதென்றால் குறைந்த பட்சம் 10 மணி 8 நிமிஷ நேரம் பிடித்து வந்தது. வடக் கயிறுகொண்டு அடிச் சட்டத்தை இழுத்துக் கோத்த முதல் கார் 5-மணி 52 நிமிஷ நேரத்திலேயே தயாராகிவிட்டது.



அஸெம்பிளி லயனில் மாடல் - டி
1909 - 1928.

அப்புறம் தேர்ச் சட்டத்தையும் வடக் கயிற்றையும் தூர எறிந்துவிட்டார்கள். முடிவில்லாமல் தரை மட்டத்தில் ஓடிக்கொண்டேயிருக்கும் 'கன்வேயர் பெல்ட்' என்ற வாகனப் பட்டை அமைத்து, யந்திரத்தால் அதை இயக்கினார்கள். காரின் அடிச் சட்டத்தை அதன் நடுவிலே வைத்து அதன் இரண்டு புறத்திலும் தொழிலாளிகள் நின்றுகொள்ளக்கூடிய அளவுக்கு, அந்த வாகனப் பட்டை அகன்றிருந்தது. இப்படிக் காரோடு ஆட்களும் இயங்கிக்கொண்டே செல்வார்கள். அவனவன் தனக்கிட்ட வேலையைச் செய்வான். கடைசியில் போய் இறங்குவான். மீண்டும் சில அடி தூரம் பின் பக்கமாக நடந்து அடுத்த காருக்கு வந்து சேருவான்.

வாகனப் பட்டை ஒரு நிமிஷத்தில் ஆறு அடி விகிதம் நகர்ந்தது; 45 ஸ்டேஷன்களை, அதாவது கட்டங்களைக் கடந்தது. ஒவ்வொரு கட்டத்திலும் ஏதாவது ஒரு பகுதியைக் காரில் இணைப்பார்கள். 45-ஆம் கட்டத்தில் காரின் எஞ்சின் வேலை செய்யத் தொடங்கும்; கார் தன் சொந்த ஆற்றலால் ஓடி அப்பால் சென்றுவிடும். முதல் முதல் அமைத்த அந்த வாகனப் பட்டையில் ஒரு முழுக்காரையும் கோத்து உருவாக்க 93-நிமிஷத்திலே இயன்றது.

ஒரு முறை ஃபோர்டு இப்படிச் சொன்னார்: "நமக்கு எந்த ஐதிகமும் பரம்பரையாக வந்து சேரவில்லை; நாமும் எந்த ஐதிகத்தையும் ஏற்படுத்தவில்லை." ஆனால் அவர் ஓர் ஐதிகத்தைத்தான் ஏற்படுத்திவிட்டார். எனவே, அவரே சற்று யோசித்துவிட்டு, "நமக்கு ஏதாவது ஐதிகம் இருக்குமானால், அது இதுதான்: எப்போதும் ஒவ்வொரு காரியத்தையும் முன்னையும் விட வேகமாகவும் முன்னையும் விடச் சிறப்பாகவும் செய்து முடிக்க வேண்டும்" என்றார்.

எந்தச் சூப்பரிண்டெண்டும் இதையல்லாது வேறு எதையும் சிந்திக்கத் தேவையில்லை. அப்படி வேறு எதையாவது சிந்தித்தால், அது வீணாகும். ஒவ்வொரு நாள் முடிவிலும், சூப்பரிண்டெண்டு எவரும் தமது இலாகாவில் நடந்த வேலை அளவை, வேலை செய்த ஆட்களின் எண்ணிக்கையைக் கொண்டு வகுப்பார். அதற்கு வரும் விடைதான் அவருடைய இலாகாவின் சாதனை அளவு. அந்தச் சாதனை அளவு சரியாயிருந்தால், மற்றதெல்லாம் சரியாகவே நடந்ததாக அர்த்தம்.

காலத்துடன் ஃபோர்டு தணியாத பகைமை கொண்டார். "வீணாக்குவதி லெல்லாம் சுலபம் நேரத்தை வீணாக்குவதுதான். அதைச் சீர்திருத்துவது மகா கஷ்டம். ஏனென்

ருல், அது தரையிலே இறைந்து கிடப்பதில்லை'' என்று அவர் சொன்னார்.

சில பேர் புல்லின்மீது நடந்து செல்லும்போது சிறு தீவனப் பூண்டைச் சட்டென்று கண்டு பிடித்து விடுவார்கள். இதே போல் தொழிற்சாலையில் நடந்து செல்லும்போதே, வேலை, ஆற்றல், பொருள் இவை யெல்லாம் வீணுவதைக் கடைக் கண்ணால் ஃபோர்டு கண்டுபிடித்து விடுவார். ஒரு முறை ஃபோர்டு இப்படிச் சென்றுகொண் டிருந்த போது, சில ஆட்கள் ஓர் எஞ்சினை ஒரு மேடைமீது வைத்துச் சோதித் துக்கொண் டிருந்தார்கள். எஞ் சினைக் காரில் பொருத்துவதற்கு முன்பு இப்படிச் செய்வது, ஃபோர் டுக்கும் சரி, பிற கார் உற்பத்திக் காரர்களுக்கும் சரி, ஒரு வழக்கமா யிருந்தது. ''நாம் ஏன் இப்படிச் செய்ய வேண்டும்?'' என்று ஃபோர்டு கேட்டார். ஆட்கள் ஆச்சரியத்தால் ஊமையானார்கள். அவர் தமக்குத் தாமே பேசிக் கொள்கிறார் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை.

ஃபோர்டு நேரே தம் எஞ்சினீர்க ளிடம் போனார். ''எஞ்சினைச் சரியாய்ச் செய்தோமா என்பதில் நமக்கே சந்தேகம். அதனால்தான் எஞ்சினை ஒரு முறை இப்படி ஓட்டிப் பரீட்சை செய்கிறோம். சந்தேகத்துக்கு இடம் இல்லாதபடி எஞ்சினைச் செய்யுங்கள். இந்தப் பரீட்சையில் வீணுகும் நேரத்தை யும் பணத்தையும் மிச்சப்படுத்துங் கள்'' என்றார்.

அவர்கள் அப்படியே செய்தார் கள்; பரீட்சையை நிறுத்தி விட்டார்கள்.

மேலும் தம்மைச் சுற்றிய சகலத் தையும் ஃபோர்டு கவனித்தார். கார் உற்பத்தித் தொழில்களில் பொருளைப் பூமியிலிருந்து வெட்டி எடுப்பது தொடங்கி வாடிக்கைக் காரரிடம் காரைக் கொண்டு போய்ச் சேர்க்கும் வரையில் எல்லாக் காரியங்களிலும் நேரம் செலவழிவதைக் கணக்கிட வேண் டும் என்று அவர் எண்ணினார். தமக்குக் கச்சாப் பொருள் வரும் மூல ஸ்தானங்களை ஆராய்ந்தார். எங்கும் ஒரே குழப்பம் நிலவுவதை யும் விரயம் ஏற்படுவதையும் கண்டார். தம்முடைய வழியில் யாருமே காரியம் செய்யவில்லை என்று உணர்ந்தார்.

இதனால் பல தொழில்கள் இணைந்த மகத்தான உற்பத்தி ஸ்தாபனமாக ஃபோர்டு மோட் டார்க் கம்பெனி மாறியது. இரும் பெடுக்கச் சொந்தச் சுரங்கங்கள், எண்ணெய் இறைக்கச் சொந்த எண்ணெய்க் கேணிகள், மரம் வெட்டச் சொந்தக் காடுகள், ரப்பர் வடிக்கச் சொந்தத் தோட்டங்கள், ரசாயனப் பொருள்கள் தயாரிக்கச் சொந்தத் தொட்டிகள், துணிகள் நெய்யச் சொந்தத் தறிகள் இவை யெல்லாம் ஏற்படுத்திக் கொண் டார்கள். அப்புறமும் ஏராளமான கச்சாப் பொருள்களை ஸப்ளை செய் வோரிடமும் ஒப்பந்தக்காரரர்களிட மும் லாபமா யிருக்கும்போது தொடர்ந்து வாங்கிக் கொண்டு தான் இருந்தார்கள். என்றாலும், ஒப்பந்தக்காரர்கள் மிதமிஞ்சி விலை வைத்து விடாதபடி பார்த்துக் கொள்ளவும் ஸப்ளை செய்வோர் தவறிவிட்டால் அதற்கு ஈடு செய்துகொள்ளவும் முன் ஏற் பாடாகவே பல தொழில்களையும் அறிந்துகொள்ள இப்படிச் செய் தார்கள்.

ரூஜ் நதிக்கரையில் உள்ள ஃபோர்ட்ஸன் படித்துறைக்கு இரும்புக் கனிப்பொருள்களை, கிரேட் லேக்ஸ் என்ற ஏரித் தலையி லிருந்து வரிசையாகப் பல ஃபோர்டு படகுகள் கொண்டு வந்து சேர்க் கின்றன. ரெயில் பாதையில் வண்டிகள் அட்டவணைப்படி ஓடு வது போலவே, ஃபோர்டு கப்பல் களும் ஓடின. எந்தக் கப்பலும் 24 மணி நேரத்துக்கு மேல் ஒரு துறை முகத்தில் இருக்கக்கூடாது. மூலப் பொருள்களையும் சாமான்களையும் வைக்கும் பெரிய பண்டகசாலை களில் இருபது கோடி டாலர் மூல தனம் முடங்கிக் கிடப்பதை ஃபோர்டு கண்டார். இவற்றால் விரயம் ஏற்படுவதாக எண்ணி இவற்றை அவர் ஒழித்துவிட்டார். பூமியிலிருந்து இரும்புக் கனிப்

பொருள்களை எடுக்கும் கணத்திலிருந்து, பூர்த்தியான ஒரு காராக அது உருவடையும் கணம் வரைக்கும் உள்ள இடை நேரம் ஏற்கனவே பதினன்கு நாளாக இருந்தது. இப்போது அதை மூன்று நாள் ஒன்பது மணியாகக் குறைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு பத்து நிமிஷத்துக்கும் ஒவ்வொரு ஃபோர்டு கார் இப்போது உருவாகிக்கொண்டிருக்கிறது!

பூர்த்தியான கார்களை ரெயில் வண்டியில் அனுப்பும்போது, பிற கார் உற்பத்தி முதலாளிகள் கைக் கொண்ட முறையையே ஃபோர்டும் முதலில் கைக்கொண்டிருந்தார். ஒரு வண்டிக்கு ஏழு கார் விகிதம் முழுக் கார்களை அவர் ஏற்றி வந்தார். ஆனல், முதல் தடவையாக 1,000 கார்களை ஒரு நாளில் அனுப்ப நேர்ந்தபோது, டெட்ராயிட் நகரிலேயே சாமான் போக்கு வரத்தில் மகா மோசமான தடுமாற்றம் ஏற்பட்டுவிட்டது. ஒரு நாளில் 2,000 கார்களை ஏற்ற வேண்டி வரும்போது, இன்னும் எவ்வளவு பெரிய தடுமாற்றம் ஏற்படுமோ என்று தோன்றியது.

ஆகவே, கார்களைப் பகுதி பகுதியாகப் பிரித்தே அவர் அனுப்பத் தொடங்கினர். கிளை இணைப்புக் கூடங்களில் இவற்றைக் கோத்து உருவாக்கச் செய்தார். இந்த முறையில் ரெயிலில் வண்டி ஒன்றுக்கு 130 கார்களை அடக்கி அனுப்ப முடிந்தது. இதிலிருந்து அவர் இன்னும் மேலே போய் விட்டார். நாடெங்கும் இணைப்புக் கூடங்களை அமைத்தார். அவை கார்களை இணைத்து உருவாக்கியதோடு, சில சாமான்களை உற்பத்தி செய்யவும் தொடங்கின. இதனல் உப இணைப்புச் செய்த பகுதிகளும் துண்டுச் சாமான்களும் துணுக்குகளுமே டெட்ராயிட் நகரிலிருந்து வெளியேறின. க்ஷேத்திர கணித உருவங்களை அடக்குவதுபோல் வெகு திட்டமாக அவற்றைச் சிப்பம் கட்டி இடைவெளி விடாது ஒன்றோடு ஒன்று பொருந்தவைத்து, ரெயில் வண்டிகளில் அனுப்பினர்கள். முட்டைக்குள் சூன்யம் இல்லாது அடங்கியுள்ள கருவைப் போல் வண்டியில் இடுக்கே இராமல் பூர்ணமா யிருக்கும்.

போக்குவரத்து இலாகா ஒன்றையே அவர் ஏற்பாடு செய்துவிட்டார். இது ரெயில்வே சிப்பந்திகளுக்கு இரவும் பகலும் ஓயாத் தொல்லையாகிவிட்டது. எந்த இடத்தி லிருந்தாவது ரெயிலில் ஒரு ஃபோர்டு கார் புறப்பட்டு விட்டால், ஃபோர்டு சிப்பந்தி ஒருவர் உடனே அதன் நம்பரைத் தந்தி அடித்து விடுவார். அந்த ரெயில் வண்டி அடுத்தாற்போல் நிற்கிற ஸ்டேஷனிலோ, பாதை மாறுகிற ஜங்ஷனிலோ மற்றொரு ஃபோர்டு ஆள் வந்து, கார் வந்ததைத் தணிக்கை செய்வார். அது சரியான வழியில் போகிறதா என்று பார்த்து, அதைப் பற்றி அடுத்த ஜங்ஷன் ஆளுக்குத் தந்தி அடிப்பார். இப்படியே முடிவான இடத்துக்குப் போகிற வரைக்கும் தந்திகள் பறந்து தணிக்கைகள் நடக்கும். அங்கே ஒரு ஃபோர்டு ஆள் இருந்துகொண்டு, பிளாட்பாரத்தில் கார் இறங்குவதைக் கவனித்துக் கொள்வார். போர்டு காரை ஏற்றிய வண்டி எங்கேயாவது ஒரு மணி நேரம் தாமதித்துவிட்டால், அது உடனே ஃபோர்டு போக்குவரத்து இலாகாதாருக்குத் தெரிந்துவிடும்.

தாம் ஏற்பாடு செய்த முறைகளையும், சாஸ்திரீயமாகச் செய்த சிக்கன ஏற்பாடுகளையும் பற்றியெல்லாம் ஞாபகப்படுத்திப் பார்த்து விட்டு, இறுதியிலே ஃபோர்டு சொன்ன வாசகம் இது: ''இந்த வழியிலே லாபம் கிடைத்துத்தான் ஆகவேண்டும். ஒரு போதும் சரக்கின் தரத்தைக் குறைக்காதே. ஒரு போதும் தொழிலாளரின் சம்பளத்தைக் குறைக்காதே. ஒரு போதும் பொதுஜனங்களின் மீது அதிகப் பளுவைச் சுமத்தாதே. இந்த வழியிலே மூளையைச் செலுத்து, மேலும் மேலும் மூளையைச் செலுத்து.''

தாம் வாழ்ந்த காலத்திலே - இன்று வரைக்குமேதான்-தாபம் சம்பாதித்ததில் தமக்கு யாருமே நிகரில்லாத அந்தப் பெரும் நிபுணரின் ரகசியம் இதுவே.



ரூஜ் நதித் தொழிற்சாலையில் ஃபோர்டு வி - 8.

4

ஒருமுறை ஃபோர்டை, ''உங்களுக்குப் புதிய கருத்துக்கள் எப்படி உதிக்கின்றன?'' என்று நான் கேட்டேன்.

அவர் மேஜைமீது ஏதோ தாம்பாளம் மாதிரி ஒரு பாண்டம் இருந்தது. அதை எடுத்துத் தலைகீழாக அவர் பிடித்துக் கொண்டார். அதன் அடிப் பக்கத்தைத் தம் விரல்களால் பட பட என்று தட்டிக்கொண்டே சொன்னார்:

''இந்தச் சாமானை 'அட்மாஸ்ஃபெரிக் ப்ரஷர்' என்ற ஆகாய அழுத்தம் ஒரு சதுர அங்குலத்துக்கு 14 பவுண்டு விகிதம் அமுக்குகிறது. அது உங்களுக்குத் தெரியும். நீங்கள் அதைப் பார்க்க முடியாது. ஆயினும், அது இப்படி அமுக்கிக்கொண் டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். கருத்துக்களின் விஷயமும் இதே மாதிரிதான். காற்றிலே கருத்துக்கள் நிறைந்து கிடக்கின்றன. அவை காற்று வாக்கில் வந்து உங்கள் தலையில் மோதிக்கொண்டே யிருக்கின்றன. அவைபற்றி உங்கள் மூளையை நீங்கள் பிரமாதமாய்க் குழப்பிக்கொள்ளத் தேவையில்லை. உங்களுக்கு என்ன வேண்டும் என்பதை மட்டும் நீங்கள் அறிந்து வைத்துக்கொண்டால் போதும். பிறகு, அதை மறந்துவிட்டு உங்கள் பாட்டுக்கு உங்கள் காரியத்தில் முனையுங்கள். உங்களுக்குத் தேவையான கருத்துத் திடீரென்று தானாகவே தோன்றிவிடும். இத்தனை நாழிகையும் அது உங்கள் பக்கத்திலேயே இருந்து கொண்டுதான் இருந்தது.''

ஒரு நாள் இதன் உண்மையை நான் நேரே கண்டேன். சிற்றுண்டி அருந்திக் கொண்டே, என்னுடனும் வில்லியம் ஜே. கமிரான் என்பவருடனும் ஃபோர்டு பேசிக்கொண் டிருந்தார். கம்பெனியின் ரேடியோவில் ஒலிபரப்பி வேலையைச் செய்துவரும் உத்தியோகஸ்தர் காமிரான். எங்கள் இருவருடனும் பேசிக்கொண் டிருந்த ஃபோர்டின் உயரமான உடம்பு விறைப்பாய் நிமிர்ந்தது. அவருடைய முகத்திலே உற்சாகம் பொங்கியது. தூக்கத்திலே நடப்பவர்போல அதிலே ஒரு தோற்றம் தென்பட்டது. தமக்குத் தாமே பேசிக்கொள்கிறவர் மாதிரி, ''ஆஹா! அதைப்பற்றி நான் நினைக்கவே யில்லையே!'' என்று அவர் கூறினார்.

அதற்குமேல் ஒரு வார்த்தையும் பேசாமல் எழுந்தார். வேகமாய் நடந்து போய்விட்டார். அவருக்கு வேண்டிய ஏதோ கருத்து உதயமாகிவிட்டது. அதைப்பற்றி ஏதோ முயற்சி புரிய அவர் கிளம்பி விட்டார். ''இந்த மாதிரி அடிக்கடி நடக்கிறது. இன்னும் ஒரு வார காலம் அவரை நாம் பார்க்க முடியாது'' என்று காமிரான் சொன்னார்.

எஞ்சினீரிங் லாபரட்டரியில் ஃபோர்டும் நானும் ஒரு நாள் சென்றுகொண் டிருந்தபோது, அவருடைய சொந்த ஷாப் எதிர்ப்பட்டது. அது யந்திர நிபுணர் ஒருவரின் கனவு நனவான இடம். அதிலிருந்து தம்முடைய அபூர்வப் பழம் பொருள் ஒன்றை அவர் வெளியே இழுத்தார். ''இதுதான் அது'' என்றார்.

அதுதான் முதல் ஃபோர்டு கார். ஒரு சின்னப் பெட்டி. நான்கு

ஸைக்கிள் சக்கரங்களின் மீது அதை ஏற்றியிருந்தார். பின் அச்சின் மேல் ஏதோ ஒரு சிறிய யந்திரம் இருந்தது. ஏழு வருஷ காலம் இரவெல்லாம் உழைத்து அதை அவர் செய்தார். டெட்ராயிட் நகரத்தில் எடிஸன் விளக்குக் கம்பெனியில் ஓர் எஞ்சினீராக அதே காலத்தில் அவர் வேலை பார்த்து வந்தார். அந்த முதல் காரில் கோத்திருந்த பகுதிகளையெல்லாம் இன்ன இன்ன சாமான் என்று அவர் எனக்குச் சொன்னார். ஸ்டீம் எக்ஸாஸ்ட் குழாய் ஒன்றே எஞ்சின் ஸிலிண்டர். ரெயில் பாதை வாஷர்கள்தான் சக்கரக்குடங்கள். இப்படியே மற்றவையும். அந்தக் காரை முதல் முதலாகத் தாம் ஓட்டிய விவரத்தையும் ஃபோர்டு எனக்குச் சொன்னார். அன்று இரவு மழை பெய்ததாம். அப்போது ஒரு லாந்தரின் ஒளியிலே அதை ஓட்டிச் சென்றாராம். கார் முன்புறமாக மட்டுமே சென்றது. ஆயினும், அதிலேயே அவர் வீட்டுக்குத் திரும்பி வர முடிந்தது. அங்கே அவருடைய மனைவி ஒரு குடையைப் பிடித்துக்கொண்டு அவர் வருகைக்காகக் காத்துக்கொண்டு நின்றாளாம்.



ஃபோர்டு படகுகள் க்ரேட் லேக்ஸ் என்ற ஏரியிலிருந்து ரூஜ் நதித் தொழிற்சாலைக்கு இரும்புக் கனிப்பொருள்களைக் கொண்டு வருகின்றன.

பகலிலே தெருக்களில் தாம் அந்தக் காரிலே செல்ல டெட்ராயிட் நகர மேயரிடம் பெர்மிட் வாங்கிய கதையையும் அவர் சொன்னார். சில சமயம் அது நின்று போய்விடுமாம். அதை அந்த இடத்திலேயே ஒரு லாந்தர்க் கம்பத்தில் சங்கிலியால் கட்டிப் பூட்டி வைப்பார். பழுது பார்ப்பதற்கு வேண்டிய சாமான்களை அவர் எடுத்து வருவதற்குள் காரை யாராவது அடித்துக் கொண்டு போய்விடக் கூடாதே என்று அவருக்குப் பயம்.

''ஞாபகார்த்தப் பொருளாக இதிலிருந்த பல சாமான்களை ஜனங்கள் கழற்றிக்கொண்டு போய் விட்டார்கள். இல்லாவிட்டால் இப்போதுகூட இது ஓடும்'' என்று ஃபோர்டு சொன்னார்.

'ஸ்டாட்டிஸ்டிக்ஸ்' என்ற புள்ளி விவரம் எடுப்பதற்காக ஓர் இலாகா அமைக்கும்படி ஃபோர்டிடம் யாரோ சொன்னார்கள். அப்படியே அமைத்தார். ஆனால், ஒரு வருஷத்துக்கெல்லாம் மூர்த்தன்யமாக அதை ஒழித்துக் கட்டி விட்டார். அது 'பியூரோ' என்ற பிரம்மாண்டமான தஸ்தாவேஜிக் கூடம் ஆகிவிட்டது. இந்தப் 'பியூரோ'க்களின் சங்கதி ஃபோர்டுக்குத் தெரியாதா என்ன!

''புள்ளி விவர நிபுணர்கள் தங்கள் கணக்கைக் காகிதத்தில் எழுதுவதற்கு முன்பே அந்தப் புள்ளி விவரம் செத்துப் போய் விடுகிறது. எந்த ஒரு விஷயம் பற்றியாவது புள்ளிவிவரத் தகவல்களைச் சேகரித்து நிபுணர்கள் கணக்கிட்டு மதிப்பிட ஆகும் காலத்துக்குள்ளே, அந்தத் தகவல்களின் உண்மை மதிப்பு மாறிவிடுகிறது. அப்போது அவர்களுடைய கணக்

கெல்லாம் பழங் கதையாய்ப் பய னற்றுப் போகிறது. வருங்காலத் துக்கு அதை வழிகாட்டியாகக் கொண்டால் அபாயமாகக்கூடப் போய்விடும்'' என்று ஃபோர்டு சொன்னார். தம் காரியத்தைச் செய்துகொண்டே போகும்போது, தட்டுப்படும் தகவல்கள்பற்றி மட்டுமே அவர் சிரத்தை கொண்டார்.

மாடல் டி காருக்குப் பின்பு மாடல் ஏ காரை 1929-இல் ஃபோர்டு கொண்டு வந்தார். அதற்குச் சில நாளைக்கு முன்பு நான் அவரிடம், ''இப்போது நீங்களும் ஜெனரல் மோட்டார்ஸ், க்ரிஸ்லர் இரண்டு கம்பெனிக்காரர் களும் சேர்ந்து, ஃபோர்டு, செவ்ர லெட், ப்ளிமவுத் இந்த எல்லாக் கார்களையும் செய்து, மார்க்கெட் டிலே விடப்போகிறீர்கள். ஆனால், ஒரு வருஷத்தில் ஏதோ குறிப் பிட்ட எண்ணிக்கை கார்கள்தான் செலவாகும். அப்படி எத்தனை கார்கள் செலவாகும் என்பதை நீங்களும் அவர்களும் சேர்ந்து நிர்ணயித்துக்கொண்டு, அதற் கேற்றபடி நீங்கள் ஏன் திட்டம் வகுத்துக்கொள்ளக் கூடாது?'' என்று கேட்டேன்.

''இந்த விளையாட்டில் உள்ள தமாஷையெல்லாம் தொலைத்து விடவேண்டும் என்று சொல்லு கிறீர்கள்!'' என்றார் ஃபோர்டு.

''இல்லவே யில்லை. மோட்டார்த் தொழிலில் ஏதோ ஒரு நிலைப்பு ஏற்படவேண்டும் என்றே சொல்லு கிறேன்'' என்று நான் பதில் அளித்தேன்.

''நிலைப்பா!'' என்று, அந்த வார்த்தையைக் கடித்து விழுங்கு கிறவர்போல் அவர் கூறினார். மேலும் தொடர்ந்து, ''செத்த மீன் ஆற்றோடு போவதைப் போன் றது நிலைப்பு என்ற விஷயம். இந்த நாட்டிலே ஒரே ஒரு வித நிலைப் பைத்தான் நாம் அறிவோம். அது தான் மாறுதல்'' என்றார்.

''வேலையில்லாத் திண்டாட்டம், மிதமிஞ்சிய உற்பத்தி இரண்டு கேடுகளும் நிகழுமே; என்ன செய் வது?'' என்று நான் கேட்டேன்.

''மிதமிஞ்சிய உற்பத்தி என்பது பொய் வார்த்தை. ஒரு பொருள் மிதமிஞ்சி உற்பத்தியாகிறது என்று நீங்கள் சொன்னால், விலை அல்லது காலம் சரியானது அல்ல என்றுதான் அதற்கு அர்த்தம். எந்த விலையிலும் எத்தனை கார்களை வேண்டுமானாலும் நீங்கள் இன்று தயார் செய்யலாம். ஆனால் அது காலந்தவறிய செயலாகும்'' என் றார் ஃபோர்டு.

5

லாப நோக்கை ஃபோர்டு எப் போதும் இகழ்ந்தார். சம்பளம் கொடுப்பதைவிட லாபம் அடை வதுதான் முக்கியம் என்று தொழில் முதலாளிகள் எண்ணு வதாக அவர் அபிப்பிராயப்பட் டார். 'எல்லாருக்கும் நன்மை கிட்டவேண்டும் என்பதே முத லாளிகளின் நோக்கமா யிருக்க வேண்டும்.'—இதுவே ஃபோர்டின் கருத்து. இந்த நோக்கத்தை விட்டுத் தங்கள் சொந்த லாபந் தான் முக்கியம் என்று முதலாளி கள் கருதும்போதுதான், அவர்க ளுடைய தொழில் குலைந்து போகிறது என்று அவர் நினைத்தார்.

'தொழிலை நன்றாகச் செய்தால், ஒன்று, லாபம் வரும்; அல்லது லாபமே வராது. அவ்வளவுதான். நன்றாய் நடத்துகிற தொழிலில் லாபம் வராமல் போகாது' என்பது அவர் கருத்து. மேலும் அவர் சொன்னார்: ''முற்றும் ஆர்வத்தோடு மக்களுக்குச் செய் யும் பணியாக ஒரு தொழிலை நடத்தினால், லாபம் சம்பந்தப் பட்ட மட்டும் ஒரே ஒரு தொல்லை தான் ஏற்படும். அதாவது, இவ் வளவு லாபத்தை என்ன செய்வது என்று சங்கடப்படும்படி அவ்வளவு ஏராளமாக லாபம் வந்துவிடும்.''

மோட்டாவாகக் கட்டிய ஒரு கொட்டகையில் ஆரம்பித்தது ஃபோர்டு கம்பெனி. அங்கே என்னவோ சில மெக்கானிக்குகள் கூடி, நாள் ஒன்றுக்குப் பத்துக் கார்களை இணைத்து உருவாக்கி வந்தார்கள். அதிலிருந்து வளர்ந்து பிரம்மாண்டமான ஃபோர்டு சாம் ராஜ்யம் ஒன்றே ஏற்பட்டுவிட்டது. வருஷம் ஒன்றுக்கு 20 லட்சம் கார்கள் இப்போது அதில் செய்

கிறுர்கள். கம்பெனியின் ஆரம்ப மூலதனம் 28 ஆயிரம் டாலர்கள். அதை 12 பேர் போட்டார்கள். அவர்களுடைய பங்குகளை யெல்லாம் ஃபோர்டே நாளாவட்டத்தில் வாங்கிவிட்டார். கம்பெனி ஒரு சமயங்கூடக் கடன் வாங்க நேர்ந்ததே யில்லை. ஒவ்வொரு வருஷமும் லாபம் வந்துகொண்டேதான் இருக்கிறது. அவ்வளவு லாபத்தையும் பெரும்பாலும் தொழிலிலேயே தான் திருப்பிப் போட்டுவிடுகிறுர்கள். இதனுல் காரின் விலை குறைய வசதியாகிறது.

பொதுமக்களுக்கு ஃபோர்டிடம் நல்ல நம்பிக்கை. அவருடைய கார்களை அவர்கள் வாங்கினுர்கள். அதுவே அவருக்கு வேண்டிய மூலதனத்தைக் கொடுத்தது. பொதுஜனங்கள் தந்த பணத்துக்குப் பொதுஜனங்களிட மிருந்தே வட்டி வாங்குவது நியாய மல்ல என்று அவர் கருதினுர். உதாரணமாக, ஒரு கனிச் சுரங்கத்தை லாபப் பணத்திலிருந்து வாங்குகிறுர் என்று வைத்துக்கொள்வோம். அந்தச் சுரங்கம் பொது ஜனங்களுக்கே சொந்தம் என்று அவர் கருதினுர். ''நஷ்டத்திலே நடக்கும் தொழில் மாய்ந்துவிடும். அதே போலத்தான் அமித லாபத்துடன் நடக்கும் தொழிலும் மாய்ந்துவிடும்'' என்று அவர் சொன்னுர்.

லாபத்தைப்பற்றி அவர் கைக்கொண்ட வழி, ஏதோ அருள் போலத்தான் அவர் உள்ளத்திலே முதலில் தோன்றியது. அது பற்றிய சித்தாந்தமெல்லாம் பின்னுல் தான் வகுத்துக் கொண்டார். இதுவே அந்தச் சித்தாந்தம்: ஒரு சரக்கை உற்பத்தி செய்யும் செலவில் ஒரு டாலர் குறைகிறது. விலையிலே அந்த ஒரு டாலரை நீங்கள் குறைக்கிறீர்கள்; இதன் மேல் அதிகமான ஜனங்கள் அந்தச் சரக்கை வாங்குகிறுர்கள். அதிக ஜனங்கள் அந்தச் சரக்கை வாங்கினுல், இன்னும் அதிகமாய்த் தொழில் ஓங்குகிறது; அதனுல் இன்னும் அதிகமாய்ச் செலவு குறைகிறது; அதன் விளைவாக இன்னும் அதிகமாய்த் தொழில் வளர்கிறது.

அப்படி யில்லாமல், செலவில் மிச்சமான ஒரு டாலரை முதலாளியின் லாபத்தில் சேர்த்துவிட்டால், சரக்கின் விற்பனை விலை முன் போலவே இருக்கும்; விற்பனையாகும் சரக்கின் அளவில் மாறுதல் இராது. செலவில் மிச்சப்படும் டாலரைக் கொண்டு தொழிலாளியின் சம்பளத்தை உயர்த்தினுல், அப்போதுந்தான் விற்பனையாகும் சரக்கின் அளவில் மாறுதல் இராது. ஆனுல், லாபத்தைப் பொதுமக்களுடன் பங்கிட்டுக் கொண்டால், விலைகள் குறையும்; வியாபாரம் பெருகும்; அதிக ஆட்களுக்கு வேலை கிடைக்கும்; தொழிலாளர் சம்பளம் உயரும்; லாபம் அதிகரிக்கும்.

ஃபோர்டுக்கு மூலதனத்தைக் கொடுத்தவர்கள் பொது ஜனங்கள். அதற்குப் பிரதியாக அவர்களுக்கு அவர் குறைந்த விலையில் கார் செய்து கொடுத்தார். டி மாடல் கார் 295 டாலருக்கு விற்கத் தொடங்கியது. ஜனங்களுக்கு உள்ள தேவைகளில் ஒன்றை மிக மலிந்த விலையில் திருப்தி செய்தது அந்தக் கார். உலகத்திலேயே அது மாதிரி திருப்தி தந்த வேருெரு பொருள் இல்லை.

கடின உழைப்பு, நல்ல உழைப்பு இந்த இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு என்று ஃபோர்டு எண்ணினுர். மனிதர்கள் தங்கள் கையாலே மிகக் கடினமாக உழைத்தால், உலகத்துக்குத் தேவையான பொருள்களைச் செய்ய முடியாது: ஆகவே, தங்களுக்குத் தேவையான பொருள்களுக்குத் தங்கள் பொருள்களைப் பரிவர்த்தனை செய்து கொள்ள அப்போது முடியாது போகும். 'மனிதனின் தேவை ஒன்றைப் பூர்த்தி செய்யக் கூடிய ஒரு பொருளை உற்பத்தி செய்ய வேண்டும்; எல்லாரும் வாங்கக் கூடிய விலையில் அதை விற்க வேண்டும்.- இதுதான் நல்ல உழைப்பு என்பது ஃபோர்டு கொண்ட கருத்து. இதற்கு மிகப் பெரிய அளவில் உற்பத்தி நடக்க வேண்டும். தங்கள் கையால் உழைக்கும் தனி மனிதர்கள் அப்படி உற்பத்தி செய்ய

முடியாது. அலர்களுக்கு உயர்ந்த சம்பளமும் ஒரு போதும் கிடைக்காது. தவிர, கை தேர்ந்த ஆட்களும் வேலைக்குக் கிடைக்க மாட்டார்கள்.

இந்தக் கட்டத்தில் தான் யந்திரம் வந்து சேருகிறது. யந்திரத்தின் துணையால் மனிதனின் தொழிலாற்றல் பிரம்மாண்டமாய் அதிகரித்து விடுகிறது. யந்திரங்களை வர வர மிக நெருக்கமாய் ஃபோர்டு வைத்தார். ''ஒரு சதுர அடி விஸ்தீர்ணத்துக்குள் உலகத்திலேயே வேறு எந்தத் தொழிற்சாலையிலும் வைக்காத அவ்வளவு யந்திரங்களை நாங்கள் வைத்திருக்கிறோம்'' என்று அவர் சொன்னார். ஆனல் ஒரு தொழிலாளி இருக்க எவ்வளவு இடம் வேண்டும் என்பதை அங்குலம் பிசகாமல் அங்கே கணக்கிட்டு வைத்திருக்கிறார்கள். தவிர, ஒவ்வொரு தொழிலாளிக்கும் பிராண வாயு தேவை. அதில் சிறிதும் வீணுகி விடவும் கூடாது. எனவே, ஒரு தொழிலாளியின் தலைக்கு மேலே காற்றோட்டமான வெற்றிடத்தின் கன அளவையும் கணக்கிட்டு வைத்திருக்கிறார்கள்.

யந்திரத்தை மிகவும் திறமையுள்ளதாக அமைத்து, பொருள்கள் அவற்றிலே இடையறுமல் தொடர்ந்து பாயும்படி செய்தால், பிரத்தியேகப் பயிற்சி பெருத தொழிலாளிகூட அதன் உதவி கொண்டு உயர்ந்த சம்பளம் பெறுவது சாத்தியமாகும். மனிதனுடைய தேவைகளை வேறு எந்த விதத்திலும் திருப்தி செய்ய முடியாது என்று சொல்லக்கூடிய பொருளைத் தயாரித்து மனிதனைத் திருப்தி செய்ய வேண்டும். இது தான் ஃபோர்டு மோஸ்தர். இந்தக் கருத்தை வைத்துக்கொண்டு, மற்ற எவரையும் விட அவர் மிக விரைவாக மிக முன்னேறி விட்டார். அதனல் இது 'ஃபோர்டு ஐடியா' என்று பிரசித்தி பெற்று விட்டது.

''அவர் தொழிலாளிக்குத் திறமையே இல்லாது செய்து விட்டார்'' என்று சிலபேர் சொன்னர்கள். ''திட்டம், நிர்வாகம், யந்திர அமைப்பு இவற்றிலே திறமையை நிறைத்து விடுகிறோம்; இதனல் திறமை யில்லாத மனிதனும் திறமையின் பலனை அநுபவித்து இன்பம் அடைகிறான்'' என்பதே அவருடைய பதில்.

ஃபோர்டுக்கு யந்திரம் என்றாலே பெரிய மோகம். யந்திரத்தின் உண்மையான சக்தியை முதல் முதலில் கண்டு கொண்டவர் ஃபோர்டுதான் என்று சொல்லலாம். யந்திரம் மனித சமுதாயத்தையே மாற்றி விடுகிறது; அநாதி காலமாய் வீண் பாடு பட்டுவந்த கஷ்டங்களிலிருந்து மனிதனை விடுவிக்கிறது; மனிதனின் வாழ்வில் புதிய அற்புதமான பொருள்களைக் கூட்டுகிறது; அவற்றை அநுபவிக்கப் போதிய ஓய்வை அவனுக்கு அளிக்கிறது. மனிதன் தன் கையால் மட்டும் உழைத்து அமைக்க முடியாத ஓர் உலகத்தை யந்திரம் அமைத்து விடுகிறது.

யந்திரத்துக்குப் பணி புரியும் மனிதனை யந்திரம் அடிமை கொண்டு விடுமா? 'அப்படிச் செய்யவே செய்யாது' என்கிறார் ஃபோர்டு. யந்திரத்தில் வேலை செய்யும் ஒரு மனிதன், ஒரு யந்திரம் போல் ஆகிவிட்டாலுங் கூட, முன் எப்போதையும் விட அவன் மேன்மையாகத்தான் இருப்பான். ஏர் - கண்டிஷன் செய்து சுத்தமா யிருக்கும் ஃபோர்டு தொழிற்சாலையிலே ஒரு தொழிலாளி திரும்பத் திரும்ப ஒரே வேலையைத்தான் செய்கிறான். ஆனல், இப்படிச் செய்யாவிட்டால், மாடு குதிரை மாதிரி தன் தேகபலத்தை யாருக்காவது அவன் விற்றுக் கொண் டிருப்பான்; வெயிலிலும் குளிரிலும் மழையிலும் குழி வெட்டுவது போன்ற கடும் வேலைகளைச் செய்துகொண்டிருப்பான்.

யந்திரம் அவனை நாள் ஒன்றுக்கு எட்டு மணி நேரம் அடிமைப் படுத்துகிறது. ஆனல், பொழுதோடு வீட்டுக்குப் போக அவனுக்கு வசதி செய்கிறது. வேறு எந்தச் சாதாரணத் தொழிலாளிக்கும் கிடைக்காத வீடு அவனுக்கு இருக்கிறது; சொந்தத்தில் ஒரு கார் இருக்கிறது.

யந்திரம் போன்ற கட்டுப்பாடு உள்ளதாக ஃபோர்டு ஸ்தாபனத்தை அமைத்திருப்பது சிரமமாய்த்தான் தோன்றும். ஆனுல், அது ஜனசமூகத்தின் செல்வத்தையும் ஒய்வையும் அதிகரித்திருக்கிறது; வியப்புக்குரிய விதத்தில் வாழ்க்கை நடத்தும் திருப்தியை எண்ணற்ற மக்களுக்கு அளிக்கிறது.

மிக ஏராளமான அளவில் உற்பத்தி செய்வதில், முதலாளியும் சுதந்தரமாயிருக்க வேண்டும்; தொழிலாளியும் சுதந்தரமாயும் இருக்கவேண்டும். அப்போதுதான் அதன் முழு நன்மைகளையும் அடைய முடியும். இந்தச் சுதந்தரம் மோட்டார்க் கார் உற்பத்தித் தொழிலில் இருந்து வந்த வரைக்கும், கார்களின் விலை வரவரக் குறைந்துகொண்டே வந்தது. பவுண்டுக்குப் பவுண்டு நிறைபோட்டு மற்ற உற்பத்திப் பண்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், உலகத்திலேயே மிக மலிவான பொருள் மோட்டார்க் கார்தான் என்று தெரியும். ஃபோர்டு கார் மட்டுமல்ல; எல்லா அமெரிக்கக் கார்களுமே இப்படி மலிவானவைதான். இதே சமயத்தில் உலகத்திலேயே மிக அதிகமாய்ச் சம்பளம் பெறும் தொழிலாளிகள், அமெரிக்கக் கார் உற்பத்திக் கம்பெனிகளின் தொழிலாளிகள்தான்.

மாடல்-டி ஃபோர்டு கார் உற்பத்தியில் நேரடியாகவும் வேறு விதங்களிலும் உழைத்தவர்கள் ஒரு வருஷத்தில் பெற்ற சம்பளம் நூறு கோடி டாலர் என்று மதிப்பிடுகிருர்கள். அந்த வருஷத்தில் ஐந்து பவுண்டு நிறைக்கு ஒரு டாலர் விகிதம் கணக்கான விலையில் அந்தக் காரை விற்ருர்கள். இன்றுள்ள சமூக நிலைமைகளும் அரசியல் நிலைமைகளும் 1900-இல் இருந்திருக்குமானுல், அமெரிக்க மோட்டார்க் கார்த் தொழில் இன்றுள்ளதைப்போல வளர்ந்திருக்க முடியாது.

தனிப்பட்டவருக்குத் தொழில் சுதந்தரம் நிலவிய அன்றைய உலகத்தில் ஹென்ரி ஃபோர்டு சாதித்த காரியத்தை, தொழிலுக்கெல்லாம் பல கட்டுப்பாடுகள் வந்திருக்கும் இன்றைய உலகத்தில் எவரும் சாதிக்க முடியாது.

அபிப்பிராய ஒற்றுமை

1933-இல் அமெரிக்காவில் பெரிய பொருளாதார மந்தம் ஏற்பட்டது. பிரபல பத்திரிகாசிரியர் ஆர்த்தர் பிரிஸ்பேன் என்பவர் அப்போது தமது பத்திரிகையில் உருக்கமான ஒரு தலையங்கம் எழுதினர். ''1929-இல் நாட்டிலே பொருள் கொழித்தது. அன்று செய்த ஒப்பந்தங்களை இன்று வற்புறுத்தாமல், நில முதலாளிகள் சற்று விட்டுக் கொடுக்கவேண்டும்'' என்று அதில் வேண்டிக்கொண்டார்.

ஆசிரியருக்கே ஏராளமான நிலம் உண்டு. அவருடைய குத்தகைதார்களில் 1929-க்கு முன் ஒப்பந்தம் செய்துகொண்ட ஒருவன் இந்தத் தலையங்கம் தனக்கு மிக்க உடன்பாடு என்று சொல்லி, தன் குத்தகைப் பணத்தில் பத்தில் ஒரு பங்கு தள்ளிக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு, ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதினுன்.

மறு தபாலிலேயே, ''சரி, அப்படியே செய்கிறேன்'' என்று ஆசிரியர் பதில் எழுதினர். அதோடு, ''பார்த்தீரா, நான் சொல்கிறபடி செய்து காட்டுகிறவன்'' என்று பெருமையோடு குறிப்பிட்டார். ஆனுல் ஒரு ஷராவும் சேர்த்தார்: ''என்ருலும், வருங்காலத்தில், தயை செய்து என்னுடைய மற்ற வாசகர்களைப்போலவே நீரும் என்னேடு தீவிர அபிப்பிராய வேற்றுமை கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.''

—இ. இ. எட்கர், 'காரொனெட்.'

ராஜாஜிக்கு ஞாபகக் கடிதம்

பிரபல சரித்திர ஆசிரியர் டாய்ன்பி சென்னையில் வேறு யாருடன் சம்பாஷித்ததையும் விட மிக அதிக நேரம் சம்பாஷித்தது ராஜாஜியுடன்தான்.

''தர்மம் தன் காலை ஊன்றிச் சொந்த பலத்திலே நிற்காது. சமயத்தையே தர்மம் ஆதாரமாய்க் கொண்டிருக்க வேண்டும். சமயம் என்றால், இந்தப் பிரபஞ்சத்துக்குப் பின்னே கரந்து நிற்கும் புனித சக்தி எதுவோ அதை மதிக்கவேண்டும் என்றே நான் சொல்கிறேன். அலட்சியமாக நம் இஷ்டப்படி புதிய சமயங்களை நாம் சிருஷ்டித்துவிட முடியாது. ஐதிகமாய் வந்துள்ள சமயங்களையே நாம் பின்பற்ற வேண்டும். ஆனால், அகஸ்மாத்தாகவும் அநாவசியமாகவும் அவற்றில் வந்து ஒட்டிக்கொண்ட மாசுகளை நீக்கி, அவற்றின் சாரத்தைக் காப்பாற்றி வர எப்போதும் நாம் பாடுபட்டு வரவேண்டும்'' என்றார் டாய்ன்பி.

தங்கள் சம்பாஷணையின் ஞாபகார்த்தமாக இதை ஒரு காகிதத்தில் எழுதிக் கையெழுத்துப் போட்டுத் தரும்படி ராஜாஜி கேட்டுக்கொண்டார். அப்படியே செய்தார் சரித்திர ஆசிரியர்.

''இதை ஒப்புக்கொள்கிறீர்களா?'' என்று கேட்டார் டாய்ன்பி.

''முற்றும் ஒப்புக்கொள்கிறேன். உங்களுடைய இந்த வாசகத்தை மேற்கோளாக நான் உபயோகிக்கலாமா?'' என்றார் ராஜாஜி.

''ஆஹா! உபயோகிக்கலாம்'' என்று அநுமதித்தார் ஆசிரியர்.

''இதைப் பொதுவாக எல்லாரும் ஒப்புக்கொள்வதில்லை'' என்று ராஜாஜி கூறினார்.

''அது எனக்குத் தெரியும். ஆனாலும், இதுதான் உண்மை'' என்றார் சரித்திர ஆசிரியர்.

—'ஸ்வராஜ்யா'

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

மூன்று எறும்புகள்

ஒருவன் கடுங்கோடையில் மரநிழலில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய மூக்கின்மேல் மூன்று எறும்புகள் சந்தித்தன.

அந்த எறும்புகள் தங்கள் வழக்கப்படி ஒன்றுக்கு ஒன்று வணக்கம் தெரிவித்துவிட்டு, அங்கேயே பேசிக்கொண்டு நின்றன.

மூக்கின் நுனியில் இருந்த எறும்பு, ''இந்தக் குன்றுகளும் மைதானங்களும் எவ்வளவு பயங்கரமாக இருக்கின்றன! எங்கும் ஒரே பாலைவனம். நாள் முழுவதும் திரிந்து தேடியும் எனக்குத் துளி தானியமும் கண்ணுக்குத் தென்படவில்லை'' என்றது.

வலது மூக்கின் வளைவின்மேல் இருந்த எறும்பு, ''நான் தேடாத குகை இல்லை. மூலை முடுக்கெல்லாம் பார்த்துவிட்டேன். இவ்வளவு மாரடித்தும் ஒரு துளி தானியம் கிடைக்கவில்லை. இந்த வறட்டு நிலத்தில் ஒன்றுமே விளையாது என்று தோன்றுகிறது'' என்றது.

இந்த இரண்டு எறும்புகளின் பேச்சைக் கேட்ட மூன்றுவது எறும்பு தலை நிமிர்ந்து பார்த்து, ''நீங்கள் சுத்த முட்டாள்களாக இருக்கிறீர்களே! உலகத்திலேயே மிக உயர்ந்ததும் சர்வ வல்லமை வாய்ந்ததுமான எறும்பு இது. இதன் பிரம்மாண்டமான உடல் முழுவதையும் நாம் ஒருபோதும் பார்க்க முடியாது. இதன் நிழலை நமது ஜன்மம் முழுவதும் சுற்றினால்கூட நம்மால் அளக்க முடியாது. இந்த எறும்பின் இடிக் குரலை நம்மால் கேட்கவே முடியாது. இந்த எறும்பு எல்லாவற்றையும் காண்பது; எல்லா வல்லமையும் வாய்ந்தது!'' என்றது.

இந்தப் பேச்சைக் கேட்டு முதல் இரண்டு எறும்புகளும் ஒன்றை ஒன்று பார்த்துச் சிரித்துக்கொண்டன.

அதே கணத்தில் அந்த மனிதனுடைய தூக்கம் கலைந்தது. அவன் இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கமாகப் புரண்டுகொண்டே, கையை எடுத்து மூக்கைச் சொறிந்தான்.

அந்த மூன்று எறும்புகளும் நசுங்கிக் கூளமாயின.

—கலில் கிப்ரான்

February 1957 Regd. No. M. 4975
(Regd. as a Newspaper in Ceylon)

மஞ்சரி

துன்முகி - மாசி

ஊரும் உலகமும் 1
அன்னம் பாலைப் பிரிக்குமா? .. .. பாரதி 2
பாண்டவர் மடம் .. .. மாத்ருபூமி 4
என்னைக் கேளுங்கள் காப்டன் என். சேஷாத்திரிநாதன் 6
புதுப்பித்த இருதயம் ஸாட்டர்டே ஈவினிங் போஸ்ட் 9
பீமனும் துரியோதனனும் 18
பெருங்காய ரகசியம் .. .. கர்மவீர் 23
அரைத் தூக்கம் .. .. வஸந்த் 25
யானை பிடித்தல் .. என். ராமகிருஷ்ணு 28
கறையான் .. .. அமுதசுரபி 34
தூக்கணங் குருவி .. .. சுதேசமித்திரன் 39
உயிரோடு இருக்கிறோம்! .. .. கிர்லோஸ்கர் 41
பயிர் காக்கும் சொக்கப் பனை .. .. மேழிச் செல்வம் 51
வழி காட்டும் தீபங்கள் .. காமன்வெல்த் டுடே 54
ஆயிரம் வருஷத்துக்கு முன்னே தேர்தல் .. ஹிந்து 57
சட்கா கானம் .. .. ப்ரபாஸி 62
கீர்த்தனை பாடிய ஹரிதாசர் .. இந்தியன் ரெவ்யூ 65
யமனின் புன்னகை (சிறு கதை) எஃப். டபிள்யூ. பெயின் 67
கை கொண்டு சிந்தித்தவர் (புஸ்தகச் சுருக்கம்) ..
.. காரெட் காரெட் 71
ராஜாஜிக்கு ஞாபகக் கடிதம் .. .. ஸ்வராஜ்யா 88
மூன்று எறும்புகள் .. கலில் கிப்ரான் (3-ஆம் அட்டை)